PUBLIC LIBRARY JAFFNA
19 NOV 2014

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 22 | நவம்பர் 15-30 ஹிஜ்ரி: 1436 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 281

## தமிழகத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள்



ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் உள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸ் பதிவுகளை மேற் கொள்ளாமல் தங்கியிருப்பதாகவும் தெரிய வந்துள் ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக 1983 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை, பல்வேறு கட் டங்களாக மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட வர்கள் இந்தியாவுக்குள் நுழைந்ததாக அந்நாட்டின் உள்நாட்டலுவல்கள் அமைச்சை ➜16




குளித்துக் குளித்து சேற்றில் புரளும் சில்லறைக் கட்சிகள் 07



நேர்காணல்

நாட்டில் முஸ்லிம்களின் பாதுகாப்புகேள்விக்குறியாக மாறியுள்ளது 10

# பெரும்பான்மைக்கு ஆபத்து வராமல் சிறுபான்மைக்கு சலுகை வழங்க வேண்டும்



### ஞானசார தேரர்

பௌத்த பெரும்பான்மையினருக்கு ஆப த்து ஏற்படாத வகையிலேயே சிறுபான்மை மக்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டு மென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொது பல சேனாவின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக் கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி தூரநோக்குடன் செயற்பட வேண்டும். அதுரலிய ரத்ன தேரரை அரசியலுக்கு அழைத்து வர நாம் அர்ப் பணிப்புடன் செயற்பட்டோம். 2004ஆம் ஆண்டில் ரத்ன தேரருக்கு வாக்களித்தோம் என்பதை விடவும் வாக்குகளை காணிக்கை யாக்கினோம்.

எங்களது இளமைக் காலத்தை அர்ப் பணித்தே அவரை அரசியலில் ஈடுபடுத்தி னோம். ➜16

## இந்த நாட்டில் நீதி, சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுப் போய்விட்டன



### அதுரலிய ரத்ன தேரர் அறைகூவல்

அஷ்ரப் ஏ. சமத்

இந்த நாட்டின் நிருவாகம், நீதி, சட்டம், ஒழுங் குகள் சீர்கெட்டுப் போய்விட்டன. ஜனாதிபதி பௌத்த தர்மத்தை இந்த நாட்டில் இல்லாமல் செய்துவிடுவார். அவர் பொய்க்கு புத்தர் சிலை களை அமைக்கின்றார். ஆனால் அவரின் எண்ணத்தில் எவ்வித பக்தியும் இல்லை என சிஹல உறுமயவின் தலைவர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பாக சகல கட்சிகளும் ஒன்றிணைந்த ➜16

## அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மக்களுக்கு பயனளிக்கவில்லை

### மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்



வினாசர் ராஜா

அரசாங்கம் கடந்த காலங் களில் நடத்திய அபிவிருத்தி திட் டங்களில் இந்த நாட்டில் வாழக் கூடிய மக்களுக்கு எவ்விதமான பிரயோசனமும் அளிக்கவில்லை. மேலும் இந்த அரசாங்கத்திற்கு பல ஊழல் குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன.

அம்பாந்தோட்டையில் துறைமுகம் உருவாக்கியதில் அம் பாந்தோட்டையில்இருந்த இளை ஞர்களுக்கே வேலை கிடைக் கவில்லை. மத்தளை விமான நிலையத்திலும் நுரைச்சோலையி லும் அவ்வப்பிரதேசத்தின் மக்க ளுக்கு வேலைகள் வழங்கப்பட வில்லை. இதைப் போன்று அர சாங்கம் மிகப் பெரிய செயற் திட்டங்களுக்கு சீனாவிடம் 8% வட்டிக்கு கடன் பெற்று செய்த திட்டங்கள் எல்லாம் தோல்வியா கும். இது அரசியலில் உள்ள சில குடும்பங்களுக்கு சாதக மாக அமைந்துள்ளது. இதில் பலர் கோடிக்கணக்கான சொத்துக் களை பெற்றுள்ளனர். ➜16

## ஜனாதிபதி தேர்தலை சிறுபான்மையினர் வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்



### அமைச்சர் பஷீர் சேகுதாவூத்

தேர்தலில் வெற்றி பெறும் வேட் பாளராக எந்தச் சிறுபான்மை வேட்பாளரும் இருக்கப் போவ தில்லை. அதேநேரம், அடுத்த வருடங்களுக்கான ஆட்சியில் இடம்பெறக் கூடிய சமூக, பொரு ளாதார வளர்ச்சியில் தங்களையும் சேர்த்து அபிவிருத்தி செய்கின்ற தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற தொரு தகைமையை சிறுபான் மையினர் பெற்றுக் கொள்வ தற்கு இந்தத் தேர்தலை ஒரு வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொள்ள லாம் என உற்பத்தித்திறன் ஊக்கு விப்பு அமைச்சர் பஷீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி மீளாய்வுக் குழு கூட்டம் ஏறாவூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செய லாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில், அபிவிருத்தியோடு சேர்த்து மக்களுக்கு எதிர்காலம் பற்றிய புரிதலையும் ஏற்படுத்த வேண் டும். இலங்கை மக்கள் இன, மத பேதங்களுக்கு அப்பால் ➜16

## நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு தகவல் அறியும் சட்டம் இன்றியமையாதது



### நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்

தகவல் அறியும் உரிமை சம்பந் தமான சட்டம் மிக முக்கிய மானதாகும். இன்று சீரழிந்து போயிருக்கின்ற நல்லாட்சியை சீர்செய்வதற்கு அது இன்றி யமையாதது. அந்த சட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண் டும். எங்கள் எல்லோருக்கும் அது ஓரளவு நிம்மதியை தரக் கூடியதாக இருக்கும் என மு.கா. தலைவரும் நீதி அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் தெரிவித் தார். ஊடகவியலாளர் வித்தியா தரனின் 'என் எழுத்தாயுதம்' நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசியல் ஊடகச் சுதந்திரம், ➜16

## அதிகாரப் பகிர்வு வார்த்தையில் அல்லாது செயலில் இருக்க வேண்டும்

### அமைச்சர் ராஜித



வடக்கிற்குச் செல்வதற்கு ஏனை யோர் போன்று தமக்கும் எந்தப் பிரச்சினையும் கிடையாது என்றும் வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் தம்மு டன் இணைந்து பணியாற்றுவ தாகவும் தெரிவித்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, அதிகாரப் பகிர்வு என்பது வாய் வார்த்தையில் அல்லாது செயலில் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கடற் றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் ➜16

## தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கக் கூடிய வேட்பாளருக்கு த.தே.கூ. ஆதரவளிக்கும்

### சுரேஷ் பிரேமச் சந்திரன் எம்.பி.



தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய பொது வேட் பாளர் ஒருவருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதர வளிக்கும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் நடராஜா ரவிராஜின் 8 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நடை பெற்ற போது நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேம சந்திரன் இந்தக் கருத்தை வெளியிட்டார். வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றல், காணி சுவீகரி ப்பை நிறுத்தல், வலிகாமம் வடக்கு - சம்பூர் நலன்புரி நிலை யங்களில் தங்கியுள்ள அகதிகளை மீளக்குடியேற்றல் ➜16

Des: Shafeek

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா மன்னிப்புக் கோர வேண்டும்

## இந்தியா வலியுறுத்து



இந்திய அமைதிப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த 1987, 1990 காலப் பகுதியில், அவர்கள் பொதுமக்களைக் கொன்று அப்பாவிப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) பாராளுமன்றில் சுமத்திய குற்றச்சாட்டை இந்தியா முற்றாக மறுத்துள்ளது.

இந்நிலையில், இந்த பாரிய குற்றச்சாட்டு தொடர்பில் கருணா அம்மான் மன்னிப்புக் கோர வேண்டும் என இந்திய அமைதிப் படையின் முன்னாள் இராணுவ புலனாய்வுத் துறை தலைவர் ஆர். ஹரிஹரன் வலியுறுத்தியுள்ளார்.

1987 முதல் 1990 காலப் பகுதியில் தான் இவ்வமைப்பின் பொறுப்பாளராக இருக்கும்போது, மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தமிழீழ விடுதலைப் புலிகளது இராணுவத் தளபதியாக இருந்த கருணா அம்மானின் மேற்பார்வையிலேயே, காத்தான்குடியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 175 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மட்டுமன்றி, 1990 காலப் பகுதியில் இவரது கட்டுப்பாட்டில் இருந்த மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசங்களில் பெண்கள், சிறுவர்கள் என 300 பேரளவில் கொல்லப்பட்டிருப்பதாகவும், 1990 ஆகஸ்ட் மாதத்தில் மேற்படி பிரதேசத்தில் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இரு சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் பிளவுபட்டதைத் தொடர்ந்து 2004இல் அரசாங்கத்தோடு இணைந்து கொண்டிருக்கும் கருணா அம்மான், மன்னிக்கவியலாத குற்றங்களை இழைத்தவர் என்றும் அவர் இந்திய அரசிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் ஹரிஹரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மை மக்களின் வாக்குகளை வென்றெடுப்பதே அரசுக்கிருக்கும் சவாலாகும்


எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வட மாகாணத்தின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இருக்கும் மிகப் பெரிய சவாலாகும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரணியுடன் கைகோர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.

மேலும், கூட்டமைப்பின் ஆதரவு அரசாங்கத்திற்கு தேவையென அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற நிலையில், வடக்கின் வாக்குகளை வென்றெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் தொடர்பாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியில் இருக்கின்றமை அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும். அதேபோல் முஸ்லிம் மக்களின் வாக்குகள் அரசாங்கத்திற்கு இல்லை என்பதும் அரசுக்கு தெரியும். எனவே சிறுபான்மை மக்களின் வாக்குகளை வென்றெடுப்பதே அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இருக்கும் சவாலாகும் எனவும் கூறினார்.

# மாவட்ட செயலாளராக ஒரு முஸ்லிமேனும் இல்லை

## ஹுனைஸ் பாரூக் எம்.பி.



நாட்டில், மாவட்ட செயலாளராக ஒரு முஸ்லிம் கூட இல்லை எனவும் ஒரு முஸ்லிம் மாவட்ட செயலாளரையாவது நியமிக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் 10 வீத முஸ்லிம்கள் உள்ளனர். இந்த நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் ஒரு முஸ்லிம் மாவட்ட அரசாங்க அதிபர் கூட இல்லாத குறை காணப்படுகின்றது. வட மாகாணத்தை எடுத்துக் கொண்டால், 33 பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன. அந்த 33 பிரதேச செயலகங்களிலும் ஒன்றில் கூட முஸ்லிம் பிரதேச செயலாளர்கள் காணப்படாத குறை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன பதிலளிக்கையில், இனரீதியில் நியமங்களை வழங்க முடியாது. அப்படி வழங்குவது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிவகுக்காது என தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவுக்கு ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு ஆதரவை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை எடுத்து ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் டியூகுணசேகர, மத்தியகுழு கூட்டத்தில் முன்வைத்த ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் யோசனைக்கு ஆதரவாக 26 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. ஒருவர் மாத்திரம் வாக்களிப்பில் இருந்து விலகியிருந்தார்.


இந்நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்காத நிலையிலும் அதற்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறாத நிலையிலும் ஜனாதிபதியை ஆதரிப்பது நியாயமல்ல என எதிரணியினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கட்சிக்குள் முரண்பட்டிருக்கும் இவர்கள் மாதுலுவாவே சோபித தேரரின் நிலைப்பாட்டில் நின்று அவரை ஆதரிக்கப் போவதாகவும் தெரிய வருகின்றது.




# எமக்களித்த வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்

## முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டாலேயே நிரந்தர தீர்வு காண முடியும். இந்தியா இன்றி இப்பிரச்சினையில் தீர்வு காண முடியாது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு எல்லா விதத்திலும் தங்களை இயங்கவிடாமல் தடுப்பதாகத் தெரிவித்த அவர் ஜனாதிபதி மஹிந்த தங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதையே அவரிடம் தாங்கள் கோருவதாகவும் குறிப்பிட்டார்.

சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

போருக்குப் பின்னரும் இலங்கையில் தமிழர்களின் நிலை சற்றும் மாறவில்லை. இலங்கை வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் 2 நிர்வாகங்கள் செயற்படுகின்றன. எங்களது மாகாண சபை ஒரு நிர்வாகத்தையும் இலங்கை அரசு மற்றொரு நிர்வாகத்தையும் நடத்துகிறது. மாகாண சபையின் செயலாளர் என்பவரைக் கூட எங்களுடன் ஆலோசிக்காமலேயே இலங்கை அரசு நியமித்திருக்கிறது.

ஆளுநர், தலைமைச் செயலாளர் உள்ளிட்டோர் ஒரு நிர்வாகமாகவும் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஒரு நிர்வாகமாகவும் இயங்கி வருகிறோம். வடக்கு மாகாணத்தில் இலங்கை அரசு ரயில் திட்டம் போன்றவற்றை செயற்படுத்துவது உலகுக்கு, அங்கே அனைத்தும் நன்றாக உள்ளன எனக் காட்டுவதற்காகத்தான். இதனால் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நன்மையும் இல்லை எனவும் கூறினார்.

# தொடரும் மண்சரிவு அபாயங்கள்

பதுளை, பசறை வீதி 8 ஆவது மைல்கல்லில் அமைந்துள்ள பலாங்கொடை பிளான்டேஷன் கம்பனிக்கு சொந்தமான யூரி தோட்டத்தின் தொழிற்சாலைப் பிரிவில் வசித்து வரும் 29 குடும்பங்கள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

இக்குடும்பங்கள் வசித்து வரும் குடியிருப்புகளின் சுவர்களிலும் நிலப் பகுதிகளிலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், அவர்களின் குடியிருப்புகளை அண்மித்துள்ள மண்மேடும் சரிவடைந்து வருகின்றது. வெடிப்புகள் அதிகரித்துள்ளதால் தாம் அச்சத்துடனேயே இரவுப் பொழுதைக் கழிப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்ட நிர்வாகம் குடியிருப்புகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான மாற்றிடங்களுக்கு செல்லுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும் தமக்குப் பொருத்தமான மாற்று குடியிருப்புகளை கடந்த 3 வருடங்களாக பெற்றுத் தர நடவடிக்கையை எடுக்கவில்லை. எனவே, தமது இக்கட்டான சூழ்நிலைக்கு உரிய நடவடிக்கையை அதிகாரிகள் பெற்றுத் தர வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் ஊடக தினம்



மாவனல்லை ஸாஹிரா கல்லூரி, பழைய மாணவர் ஊடக சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடக தின நிகழ்வு ஒன்று அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது.

மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கெபிடல் மஹாராஜ நிறுவனத்தின் செய்திப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரதீப் ஜயசேகர, சிறப்பு பேச்சாளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவனல்லை கல்வி வலயத்தில் உள்ள 17 பாடசாலைகளில் இருந்து 327 மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறுப்பிடத்தக்கது.

படமும் தகவலும்: ஷபீக் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA



# பௌத்த தேரர் ஒருவர் ஜனாதிபதியாவதில் எமக்குப் பிரச்சினையில்லை

## ஹஸன் அலி எம்.பி.



பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் மாதுலுவாவே சோபித தேரருக்கு ஆதரவளிக்கத் தயார் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹஸன் அலி தெரிவித்துள்ளார். சோபித தேரர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் எமது மக்கள் சந்தேகமின்றி ஆதரவளிப்பார்கள்.

குறிப்பாக, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முன்வந்தால் ஆதரவளிப்பது குறித்து கவனம் செலுத்த முடியும். பௌத்த பிக்கு ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாவதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் கிடையாது. மௌலவி, குருக்கள் பௌத்த பிக்கு என்ற காரணத்தினால் முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிராகரிக்க மாட்டார்கள்.

எனினும் நாட்டில் தமிழர் ஒருவரோ அல்லது முஸ்லிம் ஒருவரோ ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது. இது எழுதப்படாத விதியாகும். எனவே, சிறுபான்மை மக்கள் எப்போதும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக உரிய முறையில் ஆட்சி செய்யக் கூடிய ஒருவரை முஸ்லிம் மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள் என ஹஸன் அலி தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பொது எதிரணியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிக்கத் தயார்

## சந்திரிகா குமாரதுங்க



நாட்டின் இன முரண்பாடுகளுக்கும் சுயாதீன சேவைகளின் தடைகளுக்கும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களே காரணம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி ஜனநாயகத்திற்கு அடித்தளமிடும் பொது நிகழ்ச்சி நிரலுக்கு சகல விதத்திலும் தனது ஆதரவை வழங்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முறைமையை நீக்கக் கோரி எதிர்க்கட்சிகளின் பொது எதிரணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போது அவர் பங்குபற்றாத நிலையில் தனது அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

மேலும், நாட்டின் ஜனநாயகம் அழிக்கப்பட்டிருப்பதற்கும் சுயாதீன சேவைகள் முடக்கப்பட்டிருப்பதற்கும் ஊடக சுதந்திரம், தகவல் அறியும் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் அழிக்கப்பட்டிருப்பதற்கும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார முறைமையே பிரதான காரணமாகும். தனி மனிதனின் சுயநல ஆட்சியும் சர்வாதிகாரப் போக்குமே இப்பொது விடயங்களை கட்டுப்படுத்தியுள்ளன. தற்போதைய ஜனாதிபதி தனது அதிகாரங்களை தான்தோன்றித்தனமாக பயன்படுத்துவது நாட்டின் நிலைமையை மேலும் மோசமடைய வைத்துள்ளது.

எனவே, 17வது திருத்தச் சட்டத்தை மீண்டும் செயற்படுத்தி அதிகார பரவலாக்கத்தை மேற்கொண்டு நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# நீர்கொழும்பு அல்ஹிலால் மத்திய கல்லூரியின் முப்பெரும் விழா



ஐ.ஏ. காதிர் கான்

நீர்கொழும்பு அல்ஹிலால் மத்திய கல்லூரியின் முப்பெரும் விழா நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் எம்.எம்.எம். கஸ்ஸாலி தலைமையில் கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

'நமது கரங்களால் எங்கள் பாடசாலையைப் பாதுகாப்போம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட நிகழ்வு பொதுக்கூட்டம், கல்லூரிக்கு காசோலை கையளிக்கும் நிகழ்வு, அல்ஹிலால் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு ஆகியவை முப்பெரும் விழாக்களாக இடம்பெற்றன.

நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம்.ஒ.எம். இஹ்ஸான் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில், கவிஞர் மேமன் கவி, தினக்குரல் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம், ஊடகவியலாளர் ஐ.ஏ.காதிர் கான் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள், அறிஞர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் 2014 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 70 க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டு பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பான வீடுகளைக் கோரி நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்

லயன் அறைகளுக்கு பதிலாக பாதுகாப்பான வீடுகளை அமைத்துத் தருமாறு கோரி நுவரெலியா ஒலிபன்ட் தோட்டத்தில் பேரணியொன்று நடத்தப்பட்டது.

இந்த பேரணியில் சுமார் 300 தொழிலாளர்களும் 250 மாணவர்களும் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் வெள்ளை மற்றும் கறுப்பு கொடிகளை ஏந்தியவாறு பேரணியில் ஈடுபட்டனர்.

முத்துமாரியம்மன் கோயில் முன்பாக ஆரம்பமான பேரணி, ஒலிபன்ட் தோட்ட பொது மைதானம் வரை சென்றது.

இதன்போது, கொஸ்லந்த மீரியபெத்த மண்சரிவில் உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மலையகத்தில் இவ்வாறான அனர்த்தங்களுக்கு இனிமேல் இடமளிக்காமல் பாதுகாப்பான வீடுகள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

# வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றமும் 24 ஆண்டு நிறைவும்



வினாசர் ராஜா (இஸ்லாஹி)

வட மாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 24 ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு 'நல்லிணக்கமாய் வாழ்வோம் பலமாய் எழுவோம்' எனும் தலைப்பில் அண்மையில் விசேட நிகழ்வொன்று மன்னார் வை.எம்.எம்.ஏ. மண்டபவத்தில் நடைபெற்றது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் நஜா முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ், புத்தளம் மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் எம்.எம். அப்துல் ரஹ்மான், மன்னார் மாவட்ட அருட் தந்தை விக்டர் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் மற்றும் மூத்த ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் ஆரம்பமாக நினைவு தினத்திற்கான பிரார்த்தனை நடைபெற்றது. அதையடுத்து உரையாற்றிய நஜா முஹம்மத், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நாம் நல்லிணக்க நகர்வுகளை முன்னெடுக்கிறோம். தேசிய அரசியலின் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி செயற்படும். இது தமிழ், முஸ்லிம் சமூகங்களினது மீள்குடியேற்றத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என்று கூறினார்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் உரையாற்றும்போது, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்திற்கு திரும்பிச் செல்வதற்கான உரிமை உண்டெனவும் இதற்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் கலாசார, பொருளாதார உரிமைகள் பேணப்பட வேண்டும் எனவும் மீள்குடியேற்றம் சரியாக முன்னெடுக்கப்படாமைக்கு அரசாங்கமே காரணம் எனவும் மீள்குடியேற்றத்திற்கு மத வேற்றுமை காரணியாக உள்ளது எனவும் அவற்றை தகர்த்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முன்னணியின் தலைவர் அப்துர் ரஹ்மான் உரையாற்றும்போது, வட மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் இலங்கையின் வரலாற்றில் ஒரு துன்ப நிகழ்வு. அதனை அரசியல் தலைவர்கள் தங்களது அரசியல் இலாபத்திற்கான ஒரு கருவியாகவே பயன்படுத்துகிறார்கள். இந்நிகழ்வை ஏற்பாடு செய்ததன் நோக்கம் பழையதை ஞாபகப்படுத்தி வடுக்களை மீண்டும் கிளறுவதல்ல. மீள்குடியேற்ற திட்டங்களை நிறைவு செய்வதற்கு ஒரு திட்டம் அவசியமாகிறது. வடக்கின் மீள்குடியேற்றம் ஓர் அரசியல் விடயமாக நோக்கப்படாமல் மனிதாபிமான விடயமாக பார்க்கப்பட வேண்டும் என்று கூறினார்.

அருட் தந்தை விக்டர், வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது முஸ்லிம்களுடைய சொத்துக்களை நாங்கள் பாதுகாத்தோம். தற்போது சகவாழ்வு தேவைப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் உட்பட சமூக ஆய்வாளர்கள் பலரும் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர்: 13 இதழ்: 22 நவம்பர் 15 - 30
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771/ 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தல்

கொஸ்லந்தை, மீரியபெத்த கிராமம் மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது. அங்கு வாழ்ந்த மக்களில் எத்தனை பேர் உயிருடன் புதையுண்டர்கள் என்பது இதுவரை சரியாகத் தெரியவில்லை. இதற்கு முன்னர் இந்த அளவு பாரிய மண்சரிவு ஏற்படா விட்டாலும் பெருந்தோட்டப் பகுதிகளில் லயன் வீடுகள் மண்சரிவு ஆபத்துக்கு உட்பட்ட சம்பவங்கள் நடத்துள்ளன. அரசியல்வாதிகளும் ஊடகங்களும் சில நாட்கள், சில வாரங்கள் அது பற்றி பேசுவதோடு எல்லாம் முடிந்து விடுவதுதான் பொதுவான வரலாறு.

தோட்ட மக்கள் எப்போதும் அனர்த்தத்துடனேதான் வாழ்கின்றனர். மூன்று நூற்றாண்டுகளாகத் தொடரும் அவர்களது அவல நிலைக்கு இதுவரை நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. லயன் வீடுகளில் மலைச்சரிவுகளில் வசதிகள் குறைந்த நிலையில்தான் அவர்களது வாழ்க்கை கழிகிறது. கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகளும் பெயரளவில்தான் காணப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் இயந்திரங்கள் போன்றும் அரசியல்வாதிகளை வாழ வைக்கும் வாக்களிப்புக் கருவிகளாகவுமே அவர்கள் நோக்கப்படுகின்றனர். இந்த நிலை மீரியபெத்தவுக்கு மட்டும் உரியதன்று. பெரும்பாலான தோட்ட லயன்களில், அவற்றில் வாழும் மக்களின் நிலை இதுதான். இந்த நாட்டுக்கு வெளிநாட்டுச் செலவானியை ஈட்டித் தரும் ஒரு சமூகமாகத் திகழும் அவர்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு இன்று கைவிடப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக மண்சரிவு, சுனாமி போன்றவற்றால் வீடு வாசல்களை இழந்தவர்கள் மீண்டும் அதே இடங்களில் குடியேறக் கூடாது என்று கூறுகிறது. அரசாங்கம் மண் சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக இனங்காணப்பட்ட வேறு பல இடங்களிலிருந்து அந்த மக்களை வெளியேற்றி வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அல்லது கட்டட நிர்மாண ஆய்வு மையம் ஆலோசனை வழங்குகின்றது. ஆனால், சுனாமியினால் வீடிழந்தவர்களுக்கே இன்னும் மாற்றுக் காணி கொடுப்பது முடிவடையவில்லை.

மாற்றுக் காணி கொடுக்கும்போது அவர்கள் முன்பு வாழ்ந்த சமூகச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் உறவுகள், தொழில் வாய்ப்புகள் பாதிக்கப்படாத வகையில் வழங்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு பாடசாலை வசதிகள், அவர்கள் விரும்புகின்ற கலாச்சாரம் மற்றும் மொழிச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். எங்கோ ஒரு மூலையில் இன்னுமொரு மலையில் தனித்தனியே காணி வழங்கிவிட்டு அவர்கள் போகவில்லை என்று குறை கூறுவது எந்த வகையிலும் பொருத்தமில்லை. சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுவது போல ஏலவே சிரமத்துடன், வாழ்ந்து வந்த மக்களை முகாம்களில் தங்க வைப்பதும் ஏனோ தானோ என்று கடமைக்காக காணிகளை வழங்குவதும் வெறும் கண் துடைப்புக்களேயன்றி வேறில்லை.

மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்து சுகம் அனுபவிக்கும் அரசியல்வாதிகள் வெறுமனே ஊடகங்களுக்காக மட்டும் கருத்துக் கூறிவிட்டு மறந்துவிடாமல் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். இடத்தைப் போய் பார்ப்பதும் ஆறுதல் சொல்வதும் உலர் உணவுப் பொதிகளை வழங்குவதும் மட்டும் போதாது. மக்களின் கவலைகள் மறந்து மீண்டும் வாழ்வைக் கட்டி எழுப்பத் தேவையான வசதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இது விடயத்தில் பராமுகமாக இருப்பது அந்த மக்களின் வாழும் உரிமையை மீறும் செயலாகும்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் சர்வதேச தினம்

- ஏ. முஹம்மத் பாயிஸ் -

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கும் சர்வதேச தினம் வருடாந்தம் நவம்பர் 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 1999 டிசம்பர் 17 இல் கூடியபோதே பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

டொமினிக்கன் குடியரசில் 1960 நவம்பர் 25 இல் 'மிராபெல் சகோதரிகள்' என அழைக்கப்படும் மூன்று சகோதரிகள் அவர்களின் அரசியல் செயற்பாடுகள் காரணமாக அந்நாட்டின் அன்றைய ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

சமூகத்தில் பாதிக்கப்படும் பெண்களுக்கெதிராகவே இவர்கள் குரல் கொடுத்தனர். 'மறக்க முடியாத வண்ணத்துப் பூச்சிகள்' என்று பின்னர் உலகில் பெயர் பெற்ற இந்த சகோதரிகள் இலத்தீன் அமெரிக்காவில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கொடுமையின் சின்னமாக மாறினார்கள். அவர்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தையே ஐக்கிய நாடுகள் சபை பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

பெண்கள் மிகவும் கௌரவத்துடன் மதிக்கப்பட வேண்டுமென எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் நாளாந்தம் இடம்பெறுவதை நாளாந்தப் பத்திரிகைகளில் காண முடிகிறது. அந்தளவிற்கு பெண்களுக்கெதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் பல்வேறு வடிவங்களில் அதிகரித்து வருகின்றன.

இத்தகைய பின்னணியில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம், சீடோ எனப்படும் பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களுக்கும் எதிரான பிரகடனம் ஆகியன பெண்களின் உரிமைகளை வலியுறுத்துகின்றன.

மேலும் பெண்கள் தொடர்பான அரசின் பங்கும் பொறுப்பும் அரசியலில் பங்குபற்றுதல், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல், தேசியம், கல்வி, வேலை மற்றும் நியாயமான தொழில் உரிமைகள், சுகாதாரம், பொருளாதார, சமூக வாழ்வு, சட்டத்தின் முன் சமத்துவம், திருமணத்திலும் குடும்ப உறவுகளிலும் சமத்துவம் போன்ற உரிமைகளை சீடோ பிரகடனம் வலியுறுத்துகின்றது. இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகள் சீடோவை ஏற்றுக் கொண்டுள்ள நிலையிலும் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்கின்றன.

நமது நாட்டின் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் பெண்கள்தாம். எனினும், பெண்களுக்கெதிராக நடைபெறுகின்ற வன்முறைகள் பல மட்டங்களிலும் பல விதமாக இடம்பெற்று வருகின்றன. குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் தொல்லைகள், உடல் உள ரீதியான துன்புறுத்தல்கள் என்று அதன் பட்டியல் நீண்டு செல்கிறது.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் உலகளாவிய ரீதியில் அதிகரித்திருக்கின்றமைக்கு யுத்தம், இடப்பெயர்வு, பாதுகாப்பற்ற நிலைமை, பொருளாதார நெருக்கடிகள், சிறந்த சுகாதார வசதிகளின்மை, மகளிர் உரிமை தொடர்பாக போதிய தெளிவின்மை போன்றவையே காரணங்களாகும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்கள், வலது குறைந்த, கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபப் பெண்கள், சிறுபிள்ளைகளின் தாய்மார், சிறுமியர் போன்றோர் மிக இலகுவில் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட 50 ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மூன்றுக்கு ஒரு பெண் என்ற விகிதத்தில் உடல், உள பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தெரிய வந்துள்ளது. இன்று அமெரிக்காவில் இரண்டு நிமிடத்துக்கு ஒரு பெண் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறாள்.

உலகம் முழுவதிலும் பெண்களைப் பாதுகாக்க, அவர்களின் உரிமைகளைப் பேண எவ்வளவு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மட்டும் கொஞ்சம்கூட குறைந்தபாடில்லை.

உலகிலுள்ள அறிவு ஜீவிகள் என்று தங்களை மார்தட்டிக்கொள்ளும் சிலர் இஸ்லாம் பெண்களை கண்ணியப்படுத்துகிறது என்ற உண்மையையும், உலகில் பெண்களின் பாதுகாப்பு, வன்முறைத் தடுப்பு போன்றவை இஸ்லாமிய வழிமுறைகளால் மட்டுமே சாத்தியம் என்பதையும் புரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

இஸ்லாம் பெண்களை, மனிதன், குழந்தை, மகள், சகோதரி, தாய், பாட்டி போன்ற பல நிலைகளில் வைத்து கௌரவித்திருக்கின்றது. ஒவ்வொரு நிலையிலும் அவர்களுக்கான உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தியுள்ளது. பெண்களை ஆண்களின் சரிபாதியாகவே இஸ்லாம் பார்க்கின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் குற்றவாளிகள் தண்டனைகள் இன்றியே தப்பித்து விடுகின்றனர். இலங்கையில் கலாசார ரீதியான தடைகள், நிதி வசதியின்மை, பிறரில் தங்கி வாழ்தல், சட்ட நிவாரணங்களைப் பெறுவதற்கான வழி வகைகள் பற்றி அறியாதிருத்தல், உரிமை மீறல்கள் பற்றிய அறியாமை காரணமாக பெண்கள் மீதான வன்முறைகள் பதிவு செய்யப்படுவதில்லை.
பெண்களுக்கெதிராக வன்முறைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவர்களைப் பாதுகாப்பதில் சமூகத்திலுள்ளவர்களுக்குள்ள பொறுப்பு தொடர்பில் தெளிவை ஏற்படுத்துதல் போன்றன இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளது. இதன் மூலம் பெண்களுக்கெதிரான வன்முறையில் இருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய வங்கி தொடர்பில்


## சம்பிக்க ரணவக்க முன்வைத்துள்ள விமர்சனங்கள்: ஒரு நோக்கு...

இலங்கையில் வங்கிகளது நடவடிக்கைகள் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிகள் சட்ட மூலத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. இச்சட்ட மூலம் 2005 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ முதலாவது தடவையாகப் பதவியேற்று சில வாரங்களின் பின்னரும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதவியேற்பதற்கு 6 மாதங்களுக்கு முன்னரும் இஸ்லாமிய வங்கி முறையியல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேண்டி சீர்திருத்தப்பட்டது. இலங்கையில் முதலாவது இஸ்லாமிய வங்கிக்கான அனுமதிப் பத்திரம் 2010 ஆம் ஆண்டு அமானா வங்கிக்கு வழங்கப்பட்டது. அந்த வங்கி 2011 ஆகஸ்ட் மாதமளவில் இஸ்லாமிய வங்கிச் சேவையைத் துவங்கியது.

பாகிஸ்தானை தலைமையமாகக் கொண்ட MCB வங்கியும் இலங்கையில் இஸ்லாமிய வங்கிச் சேவையை வழங்குவதில் முன்னோடியாய்த் திகழ்கின்றது. இந்த வங்கி 6 கிளைகளைக் கொண்ட சிறிய வங்கியாகும். இதில் 4 கிளைகள் கொழும்பிலும் (கோட்டை, மருதானை, புறக்கோட்டை, வெள்ளவத்தை) மற்றைய 2 கிளைகள் வெளி மாவட்டங்களிலும் (கண்டி, மட்டக்களப்பு) அமையப் பெற்றுள்ளன. இஸ்லாமிய ஷரீஆ சட்ட முறைகளை மையப்படுத்தியுள்ள இவ்வங்கிகள் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் சந்தையை விஸ்தரித்துள்ளன. தற்போது இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் NDB போன்ற வங்கிகளும் இஸ்லாமிய வங்கிப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளன. வங்கிகள் அல்லாத பல நிதி நிறுவனங்களும் இஸ்லாமிய வங்கிச் சேவைகளை வழங்குகின்றன. 2011 ஆம் ஆண்டு ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை ஒன்றின்படி இலங்கையில் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதிச் சேவைகளை வழங்குகின்ற முழு நிறுவனங்களினதும் எண்ணிக்கை 12 என்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. (தற்போது அவ்வெண்ணிக்கை அதிகரித்திருக்கலாம்).

இலங்கை மத்திய வங்கியின் விதுபியச திட்டத்திற்கூடாக இஸ்லாமிய வங்கியியல் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறி ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. தவிரவும் மத்திய வங்கி இஸ்லாமிய வங்கியியல் தொடர்பிலான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது. ஆகவே இஸ்லாமிய வங்கியியல் என்பது தற்போது இலங்கையைப் பொறுத்தவரையில் ஒன்றும் புதியதொரு விடயமல்ல. இலங்கையில் இஸ்லாமிய வங்கிச் சேவைக்காக வேண்டியுள்ள சந்தைப் பெறுமானம் 150 பில்லியன் ரூபா என்பதாக ஒரு கணிப்பீட்டுத் தகவல் தெரிவிக்கின்றது. அதவாது 1.15 பில்லியன் டொலர்கள். ஒப்பீட்டளவில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 1..7 வீதம். கிட்டத்தட்ட வருடமொன்றிற்கு இலங்கை அரசாங்கம் கல்விக்காக வேண்டி செலவழிக்கும் தொகைக்குச் சமனானது.

இஸ்லாமிய வங்கிச் சேவைகள் தொடர்பிலான விடயங்கள் இவ்வாறுள்ள போது, வங்கி நடவடிக்கைகள் தொடர்பிலான சட்டமூலம் சீர்திருத்தப்பட்டு 9 வருடங்களும் உருண்டோடியுள்ள நிலையில் தற்போது அணுசக்தி ஆராய்ச்சி மற்றும்



தொழில்நுட்பவியல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க திடீர் துயில் கலைந்துள்ளார் போல் தெரிகிறது. அவர் தற்போது வங்கி ஹலால் ஆகியுள்ளமை பற்றிப் பேசி வருகிறார். ஒரு நாட்டில் இருக்க வேண்டியது ஒரு சட்டம்தான் என்றும் ஆடை, உணவு, கல்வி, நிதிப் பயன்பாடு போன்ற விடயங்களில் சமுதாயத்தில் பிறிதொரு வழிமுறையைக் கைக்கொள்வதானது சமூகப் பிரிவினை வாதம் என்பதாகவும் அடையாளப்படுத்துகிறார். மத்திய வங்கியினது நிதிச் சபையின் மூலம் ஷரீஆ சட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு வங்கிகளுக்கு அனுமதி வழங்கியிருப்பதானது சமூகப் பிரிவினை வாதத்திற்கு வழிகோலும் கூட்டு முயற்சி என்பதாகவும் தெரிவிக்கிறார். அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடும் என்பதாக அவர் நினைக்கின்ற பேரழிவுகளுக்கு நிதிச் சபை பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதாகவும் குறிப்பிடுகிறார். அத்தோடு, எதிர்காலத்தில் வங்கிகளிலுள்ள கவுண்டர்கள் பௌத்தக் கவுண்டர், கிறிஸ்தவக் கவுண்டர், இஸ்லாம் கவுண்டர் என்கின்ற வகையில் பிரிவுபடுத்தப்படும் என்பதாகவும் அச்சம் கொள்கிறார். இது தவிர, இத்தகைய இஸ்லாமிய வங்கி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கென ஜம்இய்யதுல் உலமாவினால் ஐந்து பேர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்துகிறார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினது கருத்தின்படி இலங்கையில் இஸ்லாமிய வங்கி செயற்படுவது அவருக்குப் பிரச்சினையாகத் தென்படுகிறது. எமது நாட்டிலுள்ள இத்தகைய பெயரளவிலான தேசியவாதிகள் பழைமை பேணுகின்ற, கிராமிய வழிமுறைகளோடு கூடிய அனைவரும் அமைச்சர் சம்பிக்கவினைப் போன்று ஒருதலைப்பட்சமாக யோசிக்கின்ற சிங்கள பௌத்தர்கள் உருவாவதைப் பார்க்கவே ஆசைப்படுகின்றனர். அமைச்சர் சம்பிக்கவின் சிந்தனை பல்லினங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டுக்குரியது அல்ல. உலக மயமாக்கல் ஏற்பட்டுள்ள இன்றைய உலகில் அமைச்சர் குறுகிய வட்டத்துக்குள் நின்றே எல்லாவற்றையும் சிந்திக்கிறார்.


இன்றைய சிங்கள சமூகத்திலுள்ளவர்களுள் பெரும்பாலானோர் தேசிய வெள்ளாடைக்குப் பதிலாக காற்சட்டை அணிகிறார்கள்; பெண்கள் சாரியை ஒதுக்கிவிட்டு டெனிம் அணிகிறார்கள். இவ்வாறு அவர்களது பாரம்பரியங்களுக்கு அப்பால் நாகரீக மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு பௌத்த

ஹெட்டி ரம்ஸி

மதத்துக்கு மாற்றமான, பௌத்த நாட்டிற்குள் இடம்பெறக் கூடாது என்பதாக நினைக்கின்ற பல மோசமான பண்பாடுகளை பெரும்பாலானோர் ஆரத்தழுவிக் கொண்டுள்ளனர்.

➡18

---



# அரசியல் விழிப்புணர்வுக்கு சிவில் சமூகம் பலம் பெற வேண்டும்

அரசியல்வாதிகள் கதை சொல்லலாம். ஆனால் கற்பனைக் கதைகளை சொல்லக் கூடாது. சிறுவர்கள் கற்பனைக் கதைகளை ஆர்வத்தோடு கேட்கலாம். அதை பெரியவர்களிடம் கூறும்போது விருப்பம் வராது. எரிச்சலும் கோபமும் வரும். அண்மைக் காலமாக அரசியல்வாதிகளின் கதைகளைக் கேட்கும்போது இப்படித்தான் எழுதத் தோன்றுகிறது.

பதினெட்டாம் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக கையை உயர்த்தியதன் மூலம் தாம் செய்த குற்றத்தை மக்கள் முன்னிலையில் ஒப்புக் கொள்கிறாராம். இது அதுரலியே ரத்ன தேரர் கூறும் கதை.

தாம் குற்றமொன்று இழைத்ததை தமது கட்சியின் சம்மேளனத்தில் ஒப்புக் கொண்டதாக லங்கா சமசமாஜ கட்சி கதையளக்கின்றது. கொமியுனிசக் கட்சியின் பலவான்கள் சுய விமர்சனம் செய்கின்றார்களாம்.

மஹிந்தவை திருத்துவோம், முடியாவிட்டால் துரத்துவோம். இது ஹெல உறுமயவின் புதுக் கதை.

இறுதியாக முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா கூறுவதைக் கேளுங்கள்: ஹெல்பிங் ஹம்பந்தோட்ட வழக்கில் தமது தீர்ப்பு தொடர்பாக பச்சாதாபப்படுகிறாராம். பிரதம மந்திரியொருவர் ஒருபோதும் இவ்வாறான நிதி மோசடியில் ஈடுபட மாட்டார் என்ற முற் தீர்மானம் ஒன்றோடிருந்து நாம் அன்று செயற்பட்டோம் (ராவய, 2014 ஒக்டோபர் 26) எனக் கூறுகின்றார். நடுநிலைக்கு நிதர்சனமாகத் திகழும் நீதிமன்றம் முற் தீர்மானத்தின் மீது செயற்பட்டுள்ளது என்பது எவ்வளவு அருவருப்பானது?

அரசியலினால் நாட்டு மக்களுக்கு நல்லது நடக்க வேண்டுமென்றால் அரசியல்வாதி மக்களை விட முற்போக்குப் பார்வை உள்ளவராக இருக்க வேண்டும். அந்த ஆற்றல் இல்லாத வரை அவர் அரசியல்வாதியாக முடியாது. மக்களை விட பின்னால் நிற்பவராகின்றார். இவ்வாறான மனிதர்களினால் அரசியலில் மேற்கொள்ளப்படும் அரசியலற்ற அல்லது சுயநல காரியங்களை அரசியல் என குறிப்பிடுவதால் நாட்டின் மொத்த எதிர்காலமும் இருளில் மூழ்கிவிடும். இவை சாதாரணமாகக் கருத முடியாத படுபாதகக் குற்றங்கள். தமது குறுகிய எண்ணங்களின் அடிப்படையில் அவ்வப்போது எடுக்கும் தீர்மானங்கள் மீளத் திருப்புவதற்கு மிகக் கடினமாகும் அளவுக்கு அரசியலின் பெயரால் செய்யப்படும் இக்குற்றங்களின் கொடூரம் மென்மேலும் அதிகமாகின்றது.

ரத்ன தேரரினதும் சமசமாஜ கொமியுனிச ஜாம்பவான்களினதும் பச்சாதாபத்தைப் பார்க்கும்போது, நேர்மையாக கவலைப் படுபவனைக் காணும்போது தோன்றும் அனுதாபம் இவர்கள் மேல் ஏற்படுவதில்லை. வெறுப்பும் அருவருப்பும் ஏற்படுகின்றன. நாட்டின் பேரறிஞர்கள் என தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இவர்கள் சீலையைக் கழற்றி வைத்துவிட்டு பதினெட்டுக்கு சார்பாக கைகளைத் தூக்கிய போது நாட்டின் பல பிரிவினர் இவர்களை விட பதினெட்டின் பாதிப்பைத் தெரிந்து வைத்திருந்தனர். அதாவது, அவர்களை விட முன்னறிவுடன் இருந்தனர். லங்கா சமசமாஜ கட்சி போன்று கொமியுனிசக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் தமது தலைவர்களை விட பதினெட்டு தொடர்பாக தெளிவான சிந்தையுடன் சிந்தித்தார்கள் என்பதையும் அவர்களை கௌரவிக்கும் முகமாக குறிப்பிட வேண்டும். ஆனால் அச்சந்தர்ப்பத்தில் இந்தத் தலைவர்கள் பேராசைக்காரர்களாக திரிந்தார்களே தவிர, அரசியல்வாதி என்ற பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை. அதன் விளைவாக அவர்களுக்கு பச்சாதாபம் ஏற்படும்போது நாடு இருளில் மூழ்கி விட்டது.

பதினெட்டாம் சட்டத் திருத்தம் முழு நாட்டையும் இருளில் மூழ்கடிக்கச் செய்தது மட்டுமல்லாமல், கூசா தூக்கிகளுக்கும் மறக்க முடியாத பாடத்தைக் கற்பித்துள்ளது. இவர்கள் ராஜபக்ஷ கூட்டணியின் தான் தோன்றித் தனத்தைக் காணுவது நாட்டின் எதிர்காலத்திற்கு இதனால் ஏற்பட்ட பாதிப்பின் ஊடாக அல்ல. வெறுமனே தமக்கு ஏற்பட்ட தனிப்பட்ட இலாப நட்டக் கணக்கின் அடிப்படையிலாகும். அதற்காக அவர்கள் தான்தோன்றித் தனத்திற்கு எதிரான போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்பது கருத்தல்ல. மாற்றமாக, தமது கைகளினால் செய்த பாரிய குற்றத்தை சரியாகப் புரிந்து கொள்வதோடு பிரபல்யம் ஆகுவதற்காக மக்களுக்கு கதை சொல்வதை விட்டுவிட்டு நிஜமான மாற்றத்திற்காக, நேர்மையாக உழைக்க முன்வர வேண்டும்.

இனியும் இலங்கையில் சிங்கள, பௌத்த, தேசிய (இன)வாதம் என்பது ஹெல உறுமயவின் அல்லது விமல் வீரவன்சாக்களின் கைகளில் இல்லை. அது ராஜபக்ஷ கூட்டணியினால் பகல் கொள்ளையிடப்பட்டுள்ளது. தற்போது அதன் போர் முரசு தெளிவாகவே ராஜபக்ஷ கூட்டணியின் அனுசரணையைப் பெறுகின்ற பொதுபல சேனா உட்பட சமயக் குழுக்களின் கைகளில் உள்ளது. அது அவர்களின் கைகளுக்குத் தற்செயலாக கிடைக்கவில்லை.

➡16

நன்றி: ராவய
தமிழில்: சிற்றழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு



இம்போட் மிரர் ஊடக நிறுவனம் நடத்திய அம்பாறை மாவட்ட மூத்த ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நிறுவனத்தின் தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.எல். முனாஸ் தலைமையில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் பீ.எச். பியசேன, மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.எம். நஸீர், ஏ.எல். தவம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# விதைநெல் விண்ணப்பப் படிவம்



2014 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்காக இலவசமாக விதைநெல் விநியோகம் செய்தலுக்கான விண்ணப்பப் படிவம் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு கமநல சேவை மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

கமநல சேவைக்குழுவின் தலைவர் எஸ்.எல். அபுதாலிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, மாகாண உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டு விண்ணப்பப் படிவங்களை வழங்கி வைத்தனர்.





மூத்த ஊடகவியலாளர் என். வித்தியாதரன் எழுதிய 'என் எழுத்தாயுதம் (ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நீதி அமைச்சர் ரஊப் ஹகீம், மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம். அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா, திரு. வி.எஸ். நிரஞ்சன் உட்பட ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

படமும் தகவலும்: ஷபீக் ஹுஸைன்

# இரட்டை நகர ஒப்பந்தம்

## ஜேர்மன்- கல்முனை உடன்படிக்கை

அஸ்லம் எஸ்.மௌலானா




கல்முனை பிராந்தியத்தின் நவீன அபிவிருத்தி திட்டங்களை இலக்காகக் கொண்டு கல்முனை மாநகர சபையை ஜேர்மன் நியுரம் பேர்க் மாநகர சபையுடன் இணைக்கும் இரட்டை நகர புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜேர்மன் நியுரம்பேர்க் நகரில் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் நியுரம்பேர்க் மாநகர முதல்வர் டாக்டர் கிளமன்ஸ் ஜிசெல் மற்றும் கல்முனை மாநகர முதல்வர் சட்ட முதுமாணி எம். நிஸாம் காரியப்பர் ஆகியோர் கைச்சாத்திட்டு ஆவணங்களை பரிமாறிக் கொண்டனர்.

நியுரம்பேர்க் நகரமானது ஜேர்மனியில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சமூக, பொருளாதார துறைகளில் தன்னிறைவு கண்ட ஒரு விசாலமான செல்வந்த நகரம் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

இந்த இரட்டை நகர ஒப்பந்தத்தின் மூலம் கல்முனை மாநகர பிரதேசத்தின் உட்கட்டமைப்பு, வர்த்தகம், கல்வி, கலாசாரம், சமூக, பொருளாதார மற்றும் விளையாட்டுத் துறைகளின் நவீன அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு ஜேர்மன் நாட்டின் நியுரம்பேர்க் மாநகர சபை முன்வந்துள்ளது என்று கல்முனை மாநகர முதல்வர் தெரிவித்தார்.

## 'முறிந்த சிறகும் என் வானமும்' கவிதை நூல் வெளியீட்டு விழா



ஜுனைத் எம். பஹாத்


சிரேஷ்ட ஊடகவியலாளரும் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற கவிஞருமான ரீ.எல். ஜவ்பர்கான் எழுதிய 'முறிந்த சிறகும் என் வானமும்' கவிதை நூல் வெளியீட்டு விழா, காத்தான்குடி அல் மனார் அறிவியற் கல்லூரியின் அர்ராஷித் மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முதன்மை அதிதியாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார். மேலும் மட்டக்களப்பு லயன்ஸ் கழக பிரதிநிதி அ.செல்வேந்திரனினால் நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் எம். சிப்லி பாரூக், கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர் மற்றும் உலமாக்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ரிதீதென்ன புகையிரத தரிப்பிடம் கவனிப்பாரற்ற நிலையில்: பொதுமக்கள் விசனம்



பழுலுல்லாஹ் பர்ஹான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரிதீதென்ன எல்லைக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ரிதீதென்ன புகையிரத தரிப்பிடம் பொதுமக்களுக்கு சேவை வழங்காமல் கவனிப்பாரற்றுக் கிடப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் மட்டக்களப்பு-கொழும்பு ரிதீதென்ன பிரதான வீதியில் அமையப் பெற்றுள்ள இப்புகையிரத தரிப்பிடம், இலங்கை போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு புகையிரத தரிப்பிடமாகும்.

இது முன்னாள் அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.எம். அமீர் அலியின் வேண்டுகோளுக்கு இணங்க மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 4 ஆம் திகதி அப்போதைய போக்குவரத்து அமைச்சரும், தற்போதய இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சருமான டளஸ் அழகப்பெரும மற்றும் ஜனாதிபதியின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகரும் தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ ஆகியோரினால் அப்போது மக்கள் பாவனைக்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட புகையிரத தரிப்பிடம், அன்று தொடக்கம் இன்று வரை கவனிப்பாரற்றுக் கிடப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அத்தோடு, குறித்த புகையிரத தரிப்பிடத்தில் பயணச்சீற்று வசதி உட்பட ஏனைய வசதிகள் இருந்தும் மக்களுக்கு சேவை வழங்க முடியாமல் பறவைகள் மற்றும் கால்நடைகளின் எச்சங்களால் அவை அருவருப்பாக காட்சியளிக்கின்றன.

இத்தரிப்பிடத்தை பிரயாணிகளுக்கு சேவை வழங்கும் இடமாகவும் பிரயாண பயணச் சீற்றை வழங்கும் இடமாகவும் மாற்றித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

தற்போது குறித்த ரிதீதென்ன புகையிரத தரிப்பிடத்திலிருந்து பிரயாணிகள் வேறு இடங்களுக்கு பயணம் செய்வதாக இருந்தால் புணானை அல்லது வெலிகந்தை புகையிர நிலையத்திற்கு சென்று பயணச் சீற்றை பெற வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குளித்துக் குளித்து சேற்றில் புரளும் சில்லறைக் கட்சிகள்



எம்.எச்.எம். ஹஸன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்கப் போவது ஆளும் கட்சிக்கா அல்லது எதிர்க்கட்சி வேட்பாளருக்கா என்ற கருத்தில் இந்நாட்டின் அரசியற் கட்சிகள், குழுக்கள், அரசியல் வாதிகள், தனி மனிதர்கள் கட்சி மாறும் காட்சிகள் ஆரம்பித்துவிட்டன. வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு தீர்க்கமான, கூர்மையான போட்டியாகவே அமையப் போகிறது என்பதை எதிர்வு கூறுவதாகவே இதனைக் கொள்ளலாம்.

இதேநேரம் எதிர்கட்சிகள் பொது வேட்பாளர் யார் என்பது குறித்த கருத்திலும், கட்சிகளும் குழுக்களும் அணி திரட்டப்படுகின்றன. ஜனாதிபதி முறையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட கட்சி சார்பற்ற பொது அபேட்சகர்களின் ஆதரவைத் திரட்டும் குழுக்களும் களத்தில் குதித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக்கும் முயற்சிகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்த முயற்சிகளுக்கப்பால் முதலாளித்துவவாதிகள் ஆள்மாறி ஆள் ஆட்சி செய்யும் தந்திரோபாயமேயன்றி வேறில்லை என்று கூறும் புதிய இடதுசாரிகளின் கருத்துக்களும் ஆங்காங்கே ஒலிக்கின்றன.


வேலுப்பிள்ளை பிரபாகரனின் முடிவு 2005 ஆம் ஆண்டில் வெற்றி தோல்வியை முடிவு செய்ததாகக் கூறுவதில் பிழையில்லை. வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி, கொழும்பில் வசித்த தமிழர்களில் கணிசமான தொகையினர் கூட அத்தேர்தலில் வாக்களிக்கவில்லை. 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு யுத்த வெற்றி போதுமானதாக இருந்தது.

தொடர்ந்து வந்த பாராளுமன்ற, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களை இலகுவில் வெற்றி கொள்ள பிரபாகரனே முன்னிலைப் படுத்தப்பட்டார். விடுதலைப் புலிகள், தமிழீழம் என்பவற்றை மட்டுமே சந்தைப்படுத்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியுமா என்ற அச்சம் தோன்றியுள்ளதாகவே நடைபெறும் நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி உருவாக்கப்பட்ட ஜனாதிபதி முறை ஜனநாயகத்துக்கான சிறந்த எடுத்துக் காட்டல்ல. என்றாலும் இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது என்ற மட்டுப்பாடு அதில் இருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதியளித்து விட்டுப் பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி முறையில் இருந்த ஒரேயொரு ஜனநாயகத் தன்மையையும் இல்லாதொழிக்க 18 ஆவது யாப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து மட்டுப்பாடுகளை தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டார். எதிர்க்கட்சி எம்பிக்களையும் சிறிய கட்சிகளையும் உறுப்பினர்களையும் அமைச்சர் பதவிகளைக் கொடுத்து அரசில் சேர்த்து அரசியல் யாப்பில் இருந்த ஒரேயொரு நல்ல விடயத்தை நீக்கியது குறித்து இன்று மக்களிடம் மன்னிப்புக் கேட்கப் பலரும் முன் வருகின்றனர். ஜே.எச்.யூ. வைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தமது கட்சியினர் 18 ஆவது திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தமை குறித்து வெட்கப்படுவதாக கூறினார். முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹஸனலி எம்.பி. யும் 18 ஆவது யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமை குறித்து மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக குறிப்பிட்டார். லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிசக் கட்சி போன்றவையும் 18 ஆவது சீர்த்திருத்தத்திற்கு கையுயர்த்தியமை குறித்து வெட்கப்படுவதாகவும் மக்களிடம் அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் குறிப்பிட்டிருந்தன.

கடந்த சில மாதங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவென குரலை உயர்த்திப் பேசிய அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டியு குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் இப்போது போலிக் காரணங்களைக் கூறி அதே நிறைவேற்று ஜனாதிபதியை ஸ்தீரப்படுத்தி, மூன்றாம் முறையும் களத்தில் இறங்கி உக்கிரமாக தம் முகங்களைக் காட்டும் போதும் தேர்தலில் நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து அறிக்கை விட்டுள்ளதைப் பார்க்கின்ற போதும் அவர்கள் மற்றுமொரு மன்னிப்பையும் பொதுமக்களிடம் முன்கூட்டியே கோருவது புத்திசாலித்தனமானது என்றே படுகிறது. மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று மேலும் பல நடவடிக்கைகளை எடுக்கும் போதும் தேர்தலுக்காக ஓய்வு கொடுத்துள்ள பலசேனாக்கள் மீண்டும் மஹிந்தவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததற்காக அப்போது மன்னிப்புக் கேட்பதை விட இப்போதே கேட்பது சிறந்ததென்றே தெரிகிறது.








தேர்தல் திகதி அறிவித்து களம் சூடுபிடித்து வெற்றியின் ஒளிக்கீற்றுகள் எந்தப் பக்கம் சார்பாக இருக்கிறது என்பதைப் பொறுத்து இன்னும் பல கட்சித் தாவல்களை எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் திகதி குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஏலவே மஹிந்த ராஜபக்ஷ தனது போராட்டத்தை ஆரம்பித்து விட்டார் என்றே கூற வேண்டும். பிரதான தேர்தல் காரியாலயம் ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கொழும்புக்கு அழைத்து அலரி மாளிகையில் அரச செலவில் விருந்து கொடுக்கும் தான சாலைகள் முன்னர் போலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அமைச்சும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி 5000 பேரை அலரி மாளிகைக்கு அழைத்து வரும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்னிலையில் அபிவிருத்தித் திட்டம், எதிர்காலக் கனவுகள் விவரிக்கப்படுகின்றன. அந்த எல்லாச் செய்திகளும் முக்கியப்படுத்தி அரச தொலைக்காட்சிகளிலும் அரச ஆதரவுத் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படுகின்றன. அடுத்த நாள் பத்திரிகைகளின் முன் பக்கத்தை புகைப்படங்களும் செய்திகளும் அலங்கரிக்கின்றன.



நிறைவேற்று அதிகார முறையின் இயல்பைத்தான் நாம் இங்கு காண்கிறோம். ஜனாதிபதி ஒருவர் தனது நிறைவேற்று அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டே முப்படைத் தளபதியாக நின்று, நிதியமைச்சராக நின்று, அரசாங்கச் செலவிலும் அரச உத்தியோகஸ்தர் ஆளணியினரின் அனுசரணையுடனும் போட்டி போடும்போது ஓர் எதிர்க்கட்சி எம்பியாக அல்லது ஒரு சாதாரண ஒரு சிவிலியனாக நின்று அவருடன் போட்டி போடுவது எந்தளவு சிரமமானது என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இரு முறை மட்டும் பதவி வகிக்க முடியுமாயிருந்த மட்டுப்பாட்டு முறையால் மட்டுமே ஒரு ஜனாதிபதியை ஓய்வடையச் செய்யும் சாத்தியம் இருந்தது. ஜே.ஆர். ஜயவர்தன இரண்டு தடவையோடு வீடு செல்ல வேண்டியேற்பட்டது. ஆனால் அடுத்த தேர்தலில் அவருடைய கட்சியின் வேட்பாளரே வெற்றி பெற்றார். 1993 ஆம் ஆண்டு ஓர் அசாதாரண சூழ்நிலையால் ஜனாதிபதி பிரேமதாஸ கொலை செய்யப்பட்டதும் அதையடுத்து ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற டீ.பி. விஜேதுங்க தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கும் விருப்பமோ, அதற்கான பின்புலமோ இல்லாதிருந்த நிலையில்தான் சந்திரிகாவால் வெற்றி பெற முடிந்தது.

அந்த வெற்றி கூட பாராளுமன்றத்தில் அதிகம் பெரும்பான்மை கிடைக்காத வெற்றியாகத்தான் இருந்தது. பல கட்சிகளை ஒன்றிணைத்தும் 115 எம்பிக்களுடன் அச்சத்தோடு காலம் தள்ள வேண்டிய ஒரு மிகச் சாதாரண வெற்றியாகத்தான் அது அமைந்தது. சந்திரிகா அம்மையார் பதவியேற்று அரச இயந்திரத்தைக் கையிலெடுத்த நாள் முதல் கடந்த 20 வருடங்களாக அந்தக் கட்சியை அசைக்க முடியவில்லை என்றால் அதற்கு இந்த யாப்பின் பலந்தான் காரணம். நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் பாராளுமன்றமும் ஜனாதிபதியும் மாறி மாறி வெற்றி பெறும் நிலைக்கே இந்த அதிகாரம் உதவுமேயன்றி, 1998 க்கு முன்னர் போன்று கட்சிகள் மாறி மாறி அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பில்லை. இந்த நிலையில் இருந்து யோசித்துப் பார்க்கும் போதுதான் மூன்றாம் தடவையும் போட்டியிடும் யாப்புத் திருத்தத்தின் ஆபத்து விளங்குகிறது. அந்த ஆபத்தை காலம் கடந்து உணர்ந்தவர்கள்தான் இப்போது மக்களிடம் மன்னிப்புக் கோருகிறார்கள். கண்களைக் கொடுத்து ஓவியத்தை வாங்கியது போல அல்லற்பட வேண்டி வந்தமைக்கு அதுதான் காரணம்.


ஒன்பது வருட ஜனாதிபதி ஆட்சியில் பல அபிவிருத்திகள் நடைபெற்றிருந்தாலும் நல்லாட்சி, ஜனநாயகம், மக்கள் உரிமைகள், நீதிமன்றத்தின் சுதந்திரம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமை, நாடு இராணுவ மயமாதல், சர்வதேசத்தில் இலங்கை அபகீர்த்திக்கு உள்ளாகுதல், முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் என்ற பல விமர்சனங்கள் உள்ளன. குடும்ப ஆட்சி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் தீமைகள் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. கடந்த இருபது வருடங்களில் இரண்டாண்டுகள் தவிர மற்றைய காலமெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் கதிரையை அலங்கரித்த ரணிலின் வெற்றிவாய்ப்பு 2005 இல் பிரபாகரனால் தட்டிப் பறிக்கப்பட்டது. இப்போது பொது வேட்பாளர், ஜனாதிபதி முறை ஒழிப்பு, தேசியப் பிரச்சினைக்கான தீர்வு, சிறுபான்மையினர்களின் எதிர்ப்பு, நாட்டின் கடன்பளு அதிகரிப்பு விலைவாசி உயர்வு என்ற பல சாதகமான சூழல்கள் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமாக இருந்தும் அவர் என்னவோ ஜனாதிபதிப் பதவி தன் மடியில் வந்து விழும் என்று எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது. தமிழ் மக்கள் 2009 முதலே இன்றைய அரசுடன், குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுடன், கடும் கோபத்தில் இருக்கின்றனர். எனவே அவர்களின் வாக்குகள் தனக்குத்தான் கிடைக்கும் என்பதற்கு அப்பால் சென்று தனக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று நினைப்பது போன்றுதான் விடயங்கள் நகர்கின்றன. 2009 முதலே அரசாங்கம் இழுத்தடிக்கும் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பில் ரணில் இதுவரை வாய் திறக்கவில்லை. தமிழ் மக்களுக்கு ஏதாவது நியாயம் வழங்குவதாக அறிவித்து விட்டால் தீவிர இனவாதிகளின் வாக்குகளை இழந்து விடுவோமா என்று பயப்படுகிறாரோ என்னவோ வெற்றி கனிந்து வரும் போது ஏனோ தானோ என்று வழமையான உதாசீனத்துடன்தான் அவர் காலம் நகர்த்துகிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றியும் அவர் எந்தத் தெளிவான கருத்தையும் சொல்லவில்லை. சோபித்த தேரரின் கருத்தையும் ஆதரிக்கிறார்; அதுருலியே ரத்ன தேரரின் முன்மொழிவுகளையும் மெச்சுகிறார். போதாக்குறைக்கு பொதுபல சேனாவின் சிங்கள பௌத்த அரசியல் யாப்பு நகல் குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் எனக் கட்சியின் செயலாளர்

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 52)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

*பேரறிஞர் இப்னுஸ் ஸலாஹ் ஹதீஸ் கலைகள் குறித்து எழுதிய அவரது பிரபல்யமான முகத்திமாவில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:*

*"ஸஹீஹான ஹதீஸின் பிரிவுகளும் அதன் தராதரங்களும் புகாரி, முஸ்லிம் ஆகிய இரு இமாம்களும் ஸஹீஹ் என உடன்பாடு கண்ட ஹதீஸ்கள் மிக உயர்ந்த தரத்தில் விளங்குகின்றன." தொடர்ந்து அவர் கூறும்போது, இந்த உயர் பிரிவைச் சேர்ந்த அனைத்து ஹதீஸ்களும் ஸஹீஹானவை என்பது தீர்க்கமான முடிவாகும். ஆய்வின் அடிப்படையிலமைந்த உறுதியான அறிவை அவை தரவல்லவையாகும். இக்கருத்துக்கு மாற்றமாக இப்பிரிவைச் சேர்ந்த ஹதீஸ்கள் அடிப்படையில் எண்ணத்தை மாத்திரமே வெளிப்படுத்தக் கூடியனவாகும். எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது கடமையாகும் என்ற வகையிலேயே இதனை உம்மத் ஏற்றுக் கொண்டுள்ளது. எண்ணம் சிலபோது பிழையாகலாம் என்ற மாற்றுக் கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*தொடர்ந்து அவர் கூறுகின்றார்: "இந்த மாற்றுக் கருத்தை விரும்புகின்றவனாகவே நான் இருந்தேன். இதனையே பலம் மிக்கதாக கருதிக் கொண்டிருந்தேன். நான் முதலாவது தெரிவு செய்த கருத்தே சரியானது என எனக்கு பின்னர் விளங்கியது. ஏனெனில் தவறுகளிலிருந்து*

**இந்த மாற்றுக் கருத்தை விரும்புகின்றவனாகவே நான் இருந்தேன். இதனையே பலம் மிக்கதாக கருதிக் கொண்டிருந்தேன். நான் முதலாவது தெரிவு செய்த கருத்தே சரியானது என எனக்கு பின்னர் விளங்கியது. ஏனெனில் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டோரது 'எண்ணம்' பிழையாக அமைய மாட்டாது.**

*பாதுகாக்கப்பட்டோரது 'எண்ணம்' பிழையாக அமைய மாட்டாது. உம்மத்தின் இஜ்மாஃ தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டதாகும். இதனால்தான் இஜ்மாஃ இஜ்திஹாதை அடிப்படையாகக் கொண்ட உறுதியான அறிவைத் தரக்கூடிய ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. அறிஞர்களது அதிகமான இஜ்மாஃக்கள் இவ்வாறே அமைந்துள்ளன. ('முகத்திமது இப்னிஸ் ஸலாஹ் வமஆஸினுல் இஸ்திலாஹ்' ஆயிஷா அப்துர் ரஹ்மானினால் திறனாய்வு செய்யப்பட்டது. பக்கம்: 100-101)*

*தாருகுத்னி போன்ற ஹதீஸ் துறை விற்பன்னர்களினால் விமர்சிக்கப்பட்ட ஒரு சில ஹதீஸ்களே இதிலிருந்து விதிவிலக்கு பெறுகின்றன. இத்துறை சார்ந்தவர்களுக்கு அவை நன்கு பரீச்சயமானவையாகும்.*

*இப்னுஸ் ஸலாஹின் முகத்திமாவை 'அத்தக்ரீப்' என்ற பெயரில் சுருக்கி எழுதிய இமாம் அந்நவவி அவருடன் முரண்படுகின்றார். திறனாய்வாளர்களும் பெரும்பான்மையினரும் அவருடன் முரண்படுகின்றனர். ஹதீஸ் முதவாத்திராக அமையாதபோது அது எண்ணத்தை மாத்திரமே தரவல்லது என அவர்கள் கூறுகின்றனர்.*

*ஸஹீஹ் முஸ்லிமிற்கான விளக்கவுரையில் அவர் பின்வருமாறு எழுதுகின்றார்: எண்ணத்தை வெளிப்படுத்துவதே ஆஹாதான ஹதீஸின் இயல்பாகும். இமாம்களான புகாரி, முஸ்லிம் ஆகியோரால் அறிவிக்கப்படும் ஹதீஸுக்கும் ஏனையோரால் அறிவிக்கப்படும் ஹதீஸுக்குமிடையில் வித்தியாசமில்லை. முஸ்லிம் உம்மத் அவை இரண்டிலுமுள்ள (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்) ஹதீஸ்களை அங்கீகரித்துள்ளது என்பதன் அர்த்தம் யாதெனில், ஏனைய ஹதீஸ் கிரந்தங்களில் வந்துள்ள ஹதீஸ்களைப் போன்றல்லாது அவை இரண்டிலுமுள்ள ஹதீஸ்களை ஆராய்ந்து பாராது செயற்படுத்துவது கடமையாகும் என்பதேயாகும். ஏனைய ஹதீஸ் கிரந்தங்களைப் பொறுத்தவரை அவற்றிலுள்ள ஹதீஸ்களை ஆராய்ந்து பார்த்து, ஸஹீஹானது என்பதற்கான நிபந்தனைகளை உள்வாங்கியிருந்தால் மாத்திரமே அவற்றைக் கொண்டு செயற்படுவது கடமையாகும். அவை இரண்டிலுமுள்ளவற்றைக் கொண்டு செயற்படுவது கடமை என்ற உம்மத்தின் இஜ்மாஃ அவை இரண்டிலுமுள்ள அனைத்தும் தீர்க்கமாகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வார்த்தைகள் என்ற இஜ்மாஃவாக அமைய மாட்டாது. இப்னு ஸலாஹின் கருத்தை அங்கீகரித்தோரை இப்னு புர்ஹான் கடுமையாக சாடியுள்ளார். அதனைப் பிழைப்படுத்துவதில் வரம்பு மீறி நடந்து கொண்டுள்ளார்.*

*அவ்வாறே இப்னுஸ் ஸலாஹின் இக்கூற்றை இப்னு அப்திஸ் ஸலாமும் குறை கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*உம்மத் ஏகமனதாக அங்கீகரித்துள்ள ஹதீஸ் உறுதியான அறிவை தரக்கூடியது என ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அபூ இஸ்ஹாக் அல் இஸ்பிராயினி, அபூ ஹாமித் அல் இஸ்பிராயினி, காழி அபூ தைய்யிப் அபூ இஸ்ஹாக் அஷ்ஷீராஸி ஆகியோரும் ஹனபி மத்ஹபைச் சேர்ந்த சர்கஸியும் மாலிக் மத்ஹபைச் சேர்ந்த காழி அப்துல் வஹ்ஹாபும் ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அபூயஃலா, அபுல் கத்தாப், இப்னு சாங்கூனி ஆகியோரும் இப்னு பூரக் உட்பட அஷ்அரிய மத்ஹபைச் சேர்ந்த பெரும்பாலான முதகல்லிம்களும் கொண்டுள்ளனர். சிந்தனைப் பிரிவின் பொதுமையான போக்காகவும் இக்கண்ணோட்டமே காணப்படுகின்றது.*

# ஹிஜ்ரத்: பணிக்கான இலட்சியப் பயணம்

அஷ்ஷெய்க்
ஏ.ஜே.எம். ஸிஹான் (நளீமி)

ஒரு பணியை நிறைவேற்றுவதை இலட்சியமாக சுமந்தவர்கள், அந்தப் பணி உலகில் எங்கு சென்றாலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஆசை வைத்தவர்கள், அதனை நிலை நாட்டுவதில்தான் எமக்கு சுவனம் இருக்கிறது என்று நம்பியவர்கள் தமது வாழ்வில் எடுத்த அதிகபட்ச பிரயத்தனங்களில் ஒன்றே ஹிஜ்ரத் என்ற இலட்சியம் ஈடேற மேற்கொண்ட பயணம்.

அந்தப் பயணம், உயர்ந்த இலட்சியப் பணிக்காகவன்றி மற்றொன்றுக்காய் நிறைவேற்றப்படும் என்றிருந்தால், அது இலட்சியப் பயணமாக மாட்டாது. அது அற்பப் பயணமாக இருக்கும் என்ற பாடத்தையும் நபியவர்கள் அந்தப் பயணத்தின்போதே திடமாக சொல்லி வைத்தார்கள்.

வாழ்வில் சாதிக்க வேண்டும் என்று துடிப்பவர்கள் அந்த சாதனைக்காய் எதுவெல்லாம் செய்யத் துணிவார்களோ அதுபோன்று இந்த உலகில் ஒரு பணி நிறைவேறத்தான் வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள் அந்தப் பணியை பூரணப்படுத்த மேற்கொண்ட புனிதப் பயணம்தான் ஹிஜ்ரத்.

அதில் உலக நோக்கம் கலந்துவிடுவதை நபியர்வகள் எச்சரித்தார்கள் அல்லவா? ஏனெனில் அது புனிதமானவர்கள் மேற்கொண்ட ஓர் இலட்சியப் பயணம்.

தமது உள்ளத்தில் தம் தலைவர் உருவாக்கி கனவு காணச் செய்த, இலட்சியக் கனவு நிறைவேற வேண்டும் என்று அளவில்லா ஆசை கொண்டவர்கள் துறந்து சென்ற தியாகப் பயணம் ஹிஜ்ரத்.

எமது வாழ்வில் எது நிறைவேற வேண்டும் என்று எமது உள்ளத்தின் ஆழத்தில் எந்தக் கனவு இருக்கிறதோ அந்தக் கனவுக்காய் கடல் கடந்தும் நாடு துறந்தும் உறவு பிரிந்தும் ஊர் மறந்தும் பயணம் செய்வோம், செய்கிறோம் அல்லவா? அது போன்றல்ல; அதை விட ஆசையோடும், ஆர்வத்தோடும் எந்தவித பிரதி எதிர்பார்ப்பும் இல்லாமல் உலகத்தில் அல்லாஹ்வின் இலட்சியம் ஈடேற வேண்டும் என்பதற்காய் பாலைவனங்கள் கடந்து பயணித்த இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்.

செய்ய வேண்டும், சாதிக்க வேண்டும் என்று துடிக்கின்ற உள்ளம் அதை செய்வதற்காய் அச்சம் கொள்ளாதல்லவா? தனிமையைக் கூட அதற்காய் பொறுத்துக் கொள்ளும் அல்லவா? அது போன்றல்ல; அதைவிட மேலாக அந்த இலட்சியப் பணி நிறைவேறினால்தான் எனக்கு சுவனத்தில் இன்ன இடம் கிடைக்கும் என்று ஆசைப்பட்டவர்கள் எல்லாப் பயத்தையும் கடந்து சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்.

தாயும் சேயும் ஒன்றுக்கொன்றாய் காட்டும் பாசம் தெரியுமல்லவா! அதனைவிட ஆயிரம் ஆயிரம் மடங்கு நேசித்த கொள்கைச் சகோதரர்கள் கூட்டமாயும் தனியாயும் தாய் மண்ணைத் துறந்து சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்.

ஹிஜ்ரத் அது வெற்றி நோக்கித்தான் செல்கின்றோம் என்ற திடமான நம்பிக்கையுடன் தோல்வியுடன்தான் செல்கிறார்கள் என்ற கோழைத் தனத்தையும்



குறைஷியரிடம் விட்டு விட்டு வீரர்கள் சென்ற இலட்சியப் பணயம்

இழந்து விட்டுச் செல்லவில்லை. இழந்ததை எல்லாம் ஒரு காலம் மீட்டுவதற்காய் செல்கிறோம் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்ற இடத்தில் நன்மை செய்ய முடியாது. நன்மை செய்துவிட்டு இழந்ததை மீட்டிக் கொள்வோம் என்று சொல்லிவிட்டுச் சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்

புனிதமான இடத்தைவிட்டு புனிதமில்லாத இடத்தை நோக்கியல்ல; புனிதத்தை பாதுகாக்கத் தெரியாதவர்களுக்காய் இன்னொரு புனித பூமியை உருவாக்கிக் கொண்டு பிறந்த பூமியின் புனிதம் பாதுகாக்க ஒரு நாள் திரும்பி வரத்தான் போகிறோம் என்று புனித ஆலயத்திடம் சொல்லிவிட்டுச் சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்.

நிலத்தை இழந்து, உறவை இழந்து, உடைமைகளை இழந்து, உயிரை மட்டும் கையிலெடுத்து ஏன் மைல்கள் கடந்து இரவும் பகலும் ஓடினார்கள். தெரியுமா? பயத்தினால் அல்ல; இந்த உறவுகளை எல்லாம் ஒரு நாள் கொள்கையால் அரவணைக்க வேண்டும் என்ற அவசரத்தில் ஓடிச் சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத்.

மக்காவின் தூசும் வேண்டாம் என்று உடையை களைந்து உதறித்தள்ளிவிட்டு சென்றது ஒன்றும் மக்காவின் மீதுள்ள கோபத்தினால் அல்ல; மாறாக அதே மக்காவில் நான் ஒரு நாள் என் ஆடை களைந்து புனித இஹ்ராம் ஆடை அணிந்து கொள்ள வேண்டும் என்ற அவசரத்தில் சென்ற இலட்சியப் பயணம் ஹிஜ்ரத் என்பதால்தான்.

வாழ்வதற்கு இடம் தரவில்லை, பணி செய்வதற்கு ஒத்துழைக்கவில்லை, பசியில் வதைத்தார்கள், அடித்தார்கள், முடக்கினார்கள் என்பதற்காக சுதந்திரமாய் வாழ்வதற்காய் சென்றதல்ல; மாறாக சுதந்திரம் என்பது வாழ்வில் கொண்ட இலட்சியம் நிறைவேறுவதற்காய் வாழ்வதுதான் என்று உறுதி கொண்டவர்கள் சென்ற பணிக்கான பயணம் ஹிஜ்ரத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரியபெத்த மண்சரிவு:

## பெருந்தோட்ட வீடமைப்பு அதிகார சபையை உருவாக்க கட்சிகள் முன் வருமா?




-மலைஞானி

கொஸ்லந்த மீரியபெத்த தோட்டத்தில் நிகழ்ந்த மண்சரிவு சற்றும் எதிர்பாராத வகையில் நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பெரும் சோக சம்பவமாக இந்த மண்சரிவு பதிவாகியிருக்கிறது. இந்த அதிர்வலை சாதி, மத, பேதம் பாராமல் சகல மக்களையும் உலுக்கியிருக்கிறது என்பதற்கு, அம்மக்களுக்கு நிவாரண உதவி செய்யுங்கள் என சக்தி, சிரச ஊடகங்கள் விடுத்த அழைப்புக்கு செவிசாய்த்து 24 மணித்தியாலயத்துக்குள் பெரிய நிறுவனங்களும் சாதாரண மனிதர்களுமாய் ஏகப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து குவித்ததே சாட்சி. பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண தமிழ்த் தோட்ட தொழிலாளர்கள் என்பது தெரிந்தும் 'இனி மேல் வேண்டாம். போதும் போதும்' என இந்த ஊடகங்கள் அறிவிக்கும் அளவுக்கு நிவாரண உதவிகளை பல்வேறு தரப்பட்ட மக்கள் செய்ய முன் வந்தார்கள் என்பதில் இருந்தே இனவாதிகளும் அரசியல்வாதிகளும் எவ்வளவுதான் துவேஷத்தைக் கக்கினாலும் அவற்றுக்கு நாம் மசியத் தயாரில்லை என்பதை இந்நாட்டு மக்கள் மிகத் தெளிவாக ஒரு பதிலைச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை நம்மால் அறிய முடிந்திருக்கிறது.

மக்களை விடுவோம். அரசியல்வாதிகளும் கட்சிகளும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலன்களுக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள். வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் நேரிடையாக பார்வையிட்டுச் சென்றதோடு நிவாரண உதவிகளைச் செய்வதாக கூறியிருக்கிறார். வேண்டுமானால் வடக்கில் அவர்களைக் குடியமர்த்தி காணி தருகிறோம் என்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி வசதி செய்து தருகிறோம் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறியிருக்கிறது. வட புலத்தில் இருந்து மலையகம் நோக்கி இவ்வாறு நேசக்கரம் நீட்டப்பட்டது பெரும்பாலும் இதுவே முதல் தடவையாக இருக்கலாம்.



**வட புலத்தில் இருந்து மலையகம் நோக்கி இவ்வாறு நேசக்கரம் நீட்டப்பட்டது பெரும்பாலும் இதுவே முதல் தடவையாக இருக்கலாம்**

பாராளுமன்றமோ, ஜனாதிபதித் தேர்தலோ, எதுவோ ஒன்று ஜனவரியில் நடத்தப்படலாம் என்ற பின்னணியிலும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளையும் நகர்வுகளையும் இந்த இடத்தில் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. சோழியின் குடுமி சும்மா ஆடாதல்லவா!

சம்பவம் நிகழ்ந்த மறுநாள் அங்கே சோக முகத்துடன் ஜனாதிபதி சமூகமளித்தார். ஆனால் அவர் நேரடியாக வந்ததால் இச்சம்பவம் தேசிய அளவில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் முக்கியத்துவம் பெற்றது என்பது உண்மை. அவர் வருகையின் பின்னர் அதிகார இயந்திரங்கள் வேகமாக சில நொடிகளில் வீடு, சொத்து, குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை இழந்த சிறுமியரை அரசாங்கமே தமது பொறுப்பில் எடுத்துக் கொள்வதாக வெளியான அறிவித்தல், ஆறுதலான செய்தி. ஏனெனில், இவர்களில் சிலர் வீட்டு வேலைக்காரர்களாக 'கடத்த'ப் பட்டிருக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கவே செய்தன.

மின்னல் ரங்கா இச்சம்பவத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முற்பட்டார். இரண்டு புல்டோசர்கள்தானே உள்ளன. அவை போதுமா? நாங்கள் மண் வெட்டியால் தோண்டுவோமா? என்றெல்லாம் விதண்டாவாதமாகப் பேசினார். சிரச-சக்தி நிவாரண யாத்திரையில் மக்கள் அளித்த பொருட்களே எடுத்துச் செல்லப்பட்டன. கெப்பிட்டல் மகா ராஜா நிறுவனம் அதை திருப்பித் திருப்பிச் சொல்லி மக்களுக்கு நன்றி சொன்னது. அந்த லொறியில் ஏறிச் சென்று, பொருட்களை லொறியில் இருந்து இறக்குவதாக படம் காட்டி வீடியோ பதிவுகளைத் தனக்கு வேண்டிய மாதிரி செய்து கொண்டு 70 எம்.எம். பயஸ்கோப் படத்தை ரங்கா காட்டினார். நாமும் பார்த்தோம். மன்னாரிலோ, முல்லைத்தீவிலோ அவருக்கு தேர்தலில் நிற்க முடியாது. மக்கள் ஒட்டுமொத்தமாக நிராகரித்து விடுவார்கள். எனவே, மீண்டும் ஒரு முறை மலையக மக்களைத்தான் அவர் ஏமாற்றி வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அதற்கு வாய்ப்பாக வந்து சேர்ந்தது மீரியபெத்த மண்சரிவு. அதனால்தான் எந்தவோர் அரசியல்வாதியையும் விட ரங்கா பலத்த குரல் கொடுத்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சாதாரண மக்கள் அள்ளிக் கொடுத்தார்கள். நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாய் உதவித் தொகையை வைப்பிலிடப் போவதாக இ.தொ.கா. அறிவித்துள்ளது. அம்மாணவர்களை தத்து எடுத்திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. எதிர்காலத்தில் இம்மாணவர்களுக்கு இ.தொ.கா. வின் சிபாரிஸின் பேரில் இந்திய அரசின் கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படக் கூடிய சாத்தியமும் இருக்கிறது.

### சோழியின் குடுமி சும்மா ஆடுவதில்லை

ஆனால், மண்வெட்டியைத் தூக்கிக் கொடுத்தோம் என்று வாய்ப் பந்தல் போடும் ரங்கா என்னென்ன உதவிகள் வழங்கினார் என்று யாருக்கும் தெரியாது. இரண்டு வீடுகளை எனது செலவில் அமைத்துத் தருவேன் என்றோ, அரசாங்கத்துடன் பேசி ஒரு மாணவனைத் தத்தெடுத்து பல்கலைக் கழகம் வரை படிப்பிப்பேன் என்றோ கூறினாரா?

சரி, கட்சி பேதங்களை மறந்து இம்மக்கள் சார்பாக அனைத்து மலையகக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு சாத்தியமான வேலைத் திட்டங்கள் வகுப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று அறிவித்திருந்தார். நல்ல செய்திதான். கடந்த 2 ஆம் திகதி மின்னல் நிகழ்ச்சியில் தொலைபேசி வழியாக இணைந்த ஆறுமுகன் தொண்டமான், இணைந்து வேலை செய்வோம் என்ற ரங்காவின் கோரிக்கையை பற்றி எதுவுமே பேசவில்லை.

➡17

# பகை வளர்த்தால் பண்பாட்டுக்குச் சேதம்

- வடபுலத்தான் -

தமிழ் பண்பாட்டைப் பற்றிய பேச்சுகள், கவலைகள் நம் சமூகத்தில் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இதற்குக் காரணம் தமிழ் பண்பாடு மிக நலிவடைந்து கொண்டிருக்கிறது. அத்தோடு வரவர அது சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது என்பதாகும்.

எனவேதான் தமது பண்பாட்டைப் பற்றி அதிகமாக தமிழர்கள் கவலைப்படுகிறார்கள்.



ஒரு பண்பாட்டு நெருக்கடிக்கு மிகப் பெரிய காரணம், அரசியல் அழுத்தங்களும் சவால்களும் பிரச்சினைகளுமே.

இந்த அரசியல் நெருக்கடிக்குக் காரணம், பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் தீர்க்கத் தெரியாமல் தடுமாறும் நிலைதான்.

அதாவது, சிந்தனைக் குழப்பமும் சுயநலத் தன்மைகளும் மலிந்தால் அந்தச் சமூகம் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டேயிருக்கும். அவற்றிலிருந்து அது ஒருபோதும் விடுபடாது.

ஏறக்குறைய தமிழ் சமூகத்தின் நிலை அப்படியானதே. அது தன்னுடைய பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலடைய வைத்து தன்னை சிறைப்படுத்தும் இயல்பைக் கொண்டது.

இதனால் அது சிக்கல்களின் பின்னல்களுக்குள் சிக்கி நலிவடைந்து கொண்டிருக்கிறது.

உதாரணமாக, சுயாட்சியைக் கோருகிற தமிழர்கள், நாட்டை விட்டு வெளியேறுவதைப் பற்றியே சிந்திக்கிறார்கள்.

தனி நாட்டை விரும்புகின்றவர்கள் இங்கிருந்து தங்களுடைய சொந்த பந்தங்களை எல்லாம் தாங்கள் வாழுகின்ற நாடுகளுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கே தமிழ்ப் பற்றை சிந்திப்பவர்கள், தங்களுடைய வாழ்க்கையை புலம்பெயர் நாட்டுச் சூழலுக்குள் பொருத்தி விடவே எத்தனிக்கிறார்கள்.

அதையும் விட தங்களுடைய பிள்ளைகள் அந்த நாட்டில் முதல் நிலையடைந்து விடவேண்டும். அந்தச் சூழலில் ஐக்கியப்பட்டு விட வேண்டும் என்று அவாவுகிறார்கள்.

இப்படியான நிலைமை தவிர்க்க முடியாதது. ஆனால், இது நாட்டில் நிலவுகின்ற அரசியல் ஸ்திரமில்லாத தன்மையால் ஏற்படும் ஓர் அவலமே.

இந்த அவலத்தினால்தான் இன்று பல அவலங்களும் அல்லல்களும் நீடித்த வண்ணமுள்ளன.

இதனால் திரிசங்கு சொர்க்கம் என்பதைப் போல இரண்டும் கெட்டான், நான்கும் கெட்டான் என்ற நிலையில் தமிழ் சமூகம் அல்லாடிக் கொண்டிருக்கிறது.

பண்பாட்டு அடையாளம் என்பது சமூகத்திரளின் கூட்டினால் வருவது.

தனித்திருத்தலில் அதன் சாத்தியங்கள் மிகக் குறைவு.

நாடு விட்டுப் பெயரும் மனோநிலையை எப்போதும் வைத்திருப்பது நெருக்கடி நிலையே. இந்த நெருக்கடி நிலையைப் பேணுவது பகை வளர்ப்பு அரசியலே. இந்த அரசியல் பதற்றத்தை உருவாக்கிக் கொண்டேயிருக்கும்.

இவ்வாறு பதற்றத்தோடு இருக்கும் போது யாரும் நிலை கொள்வதற்கு விரும்பார்.

நிலை கொள்வதற்கு விரும்பாதார் என்றும் தமது வேர்களைத் துண்டிக்கவே விரும்புவர். இதை அவர்கள் வெளிப்படையாக விரும்பாது விட்டாலும் தமது வெளியேறிச் செல்லும் விருப்பத்தின் முன்னே மெல்லக் கைவிடுவர்.

அப்படிக் கைவிடுவோர் எப்படி பண்பாட்டைப் பற்றியும் தமது அடையாளங்களைப் பற்றியும் பேச முடியும்?

இனத் தனித்துவத்தைப் பற்றிப் பேசுவது என்றால் அந்த இனம் தன் சொந்த மண்ணில் வேர் பதித்திருக்க வேண்டும்.

அப்படி வேர் பதிக்கும் வாழ்வொன்று தேவையெனில், சனங்கள் நிலை பெறும் மார்க்கங்கள் உருவாக வேண்டும். பகை வளர்ப்பு அரசியலில் அது சாத்தியமேயில்லை.

நன்றி: தேனீ.கொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டில் முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறியுள்ளது

## மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

> ஐ.தே.க. வின் வேட்பாளர்தான் பொது வேட்பாளராக களமிறங்குவார். இன்று நாட்டில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான ஒரு நிலைமை இருக்கின்றது. தேசிய ரீதியான தேர்தல் ஒன்று வந்தால் அரசாங்கத்திற்கு கஷ்டமான நிலைமை உருவாகும் என்று தெளிவாக தெரிகின்றது. அக்காரணத்தினாலேயே ஜனாதிபதி அவர்களும் ஜனவரியில் இத்தேர்தலை நடத்துவதற்கு முன்வந்துள்ளார். ஏனென்றால் காலம் செல்லச் செல்ல அவருடைய நிலைமை மோசமாகும் என்று அவருக்கு தெரிந்துள்ளது.

நேர்காணல்: வினாசர் ராஜா (இஸ்லாஹி), முல்லை நசீர்

இந்த அரசாங்கத்திற்கு கீழுள்ள இனவாத குழுக்களினது தாக்குதல்களின் காரணமாக இலங்கையில் முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக காணப்படுகிறது. இலங்கையில் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழியமைத்து தருமாறே வேண்டுகிறேன். நாட்டில் பிரச்சினைகள் இன்றி வாழ்வதற்கான தலைமைத்துவத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தவறியுள்ளார். அத்தோடு மக்கள் மத்தியில் இராணுவம், பொலிஸாரை நம்ப முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும் என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். அவர் எங்கள் தேசத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**எங்கள் தேசம்: கொழும்பு முஸ்லிம்களின் பிரதான பிரச்சினைகளாக எவற்றை நீங்கள் காண்கிறீர்கள்?**

**முஜிபுர் ரஹ்மான்:** கொழும்பை பொறுத்தவரையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளாக கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. நான் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பாடு கொழும்பு சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு நடக்கின்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. எதிர்க்கட்சியில் இருந்த போதிலும் மாகாண சபையினூடாக முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை இன்று வரை நாங்கள் செய்து கொண்டே இருக்கிறோம். எதிர்க்கட்சியில் எமது சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்த போதிலும் கல்வி தொடர்பான பிரச்சினைகளையும் சமூக ரீதியான பிரச்சினைகளையும் இனம் கண்டு எங்களால் முடியுமான வரை செய்து கொண்டுதான் இருக்கின்றோம்.

**எங்கள் தேசம்: கொழும்பில் அண்மைக் காலமாக ஐ.தே.க. சார்பான முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்து வருவதற்கான காரணம் என்ன?**

**முஜிபுர் ரஹ்மான்:** கொழும்பில் 3 முஸ்லிம் உறுப்பினர்கள் பாராளுமன்றில் இருந்தார்கள். கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. இல் போட்டியிட்ட 3 வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர். இதற்கு பிரதான காரணம் கட்சி செய்த தவறாகும். அவர்கள் தேர்தலில் 3 முஸ்லிம்களை நிறுத்தியிருந்தார்கள். ஏனெனில், வழமையாக தேர்தலில் 2 முஸ்லிம் நபர்களையே நிறுத்தினர். மேலும் 2010 ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வி கண்டோம். எனவே கொழும்பு பகுதியில் வாழ்ந்த மக்கள் பாராளுமன்ற தேர்தலில் பெருமளவில் வாக்களிக்க வரவில்லை. இதனால்தான் மூவரில் ஒருவருக்கேனும் பாராளுமன்றத்திற்கு செல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போனது. இதுவும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

**எங்கள் தேசம்: மாளிகாவத்தை மையவாடி காணி அபகரிப்பு தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

**முஜிபுர் ரஹ்மான்:** அன்றைய முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள் தங்களது சொத்துக்களை சமூகத்திற்கு வழங்குவதில் முன்னின்று செயற்பட்டனர். கொழும்பில் அவ்வாறு வழங்கப்பட்ட சொத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. இன்றைய அரசியல்வாதிகள் சொத்து சேர்ப்பவர்களாகவே இருக்கின்றனர். அன்றிருந்த முஸ்லிம் தலைவர் ஒருவரே மாளிகாவத்தை மையவாடிக்கு காணி வழங்கினார். இவ்வாறு சமூகத்திற்கு வழங்கப்பட்ட காணிகளை ஒவ்வொருவரும் தமது சொந்தத் தேவைகளுக்காக ஆக்கிரமித்து பயன்படுத்துகின்றனர். மாளிகாவத்தை மையவாடி பிரச்சினையானது உண்மையாகவே பெரிய பள்ளிவாசலின் நிருவாகத்திற்கு கீழுள்ளது. அதனால் இதனை ஆக்கிரமித்த நிறுவனத்திற்கு எதிராக பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும்.

ஆனால், பெரிய பள்ளி நிர்வாகம் ஏன் அமைதியாக இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அந்த தனியார் நிறுவனம் அரசாங்கத்தில் இருக்கின்ற பலம் பொருந்திய ஒருவரின் உதவியோடு கட்டிடத்தை அமைக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கிறது என்றே நான் நினைக்கின்றேன்.

**எங்கள் தேசம்: கொழும்பில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களின் போது இங்கு பாரம்பரியமாக வாழ்கின்ற முஸ்லிம்கள் தமது குடியிருப்புகளை இழந்து வருகின்றனர். இது தொடர்பாக கூறுங்கள்.**

**முஜிபுர் ரஹ்மான்:** யுத்தம் முடிவடைந்ததன் பின்பிருந்தது கொழும்பில் வாழக் கூடிய சனத்தொகையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டமாகும். கோதபாய ராஜபக்ஷதான் இந்தத் திட்டத்தை செயற்படுத்தி வருகிறார் என்று நான் நினைக்கின்றேன். தலைநகர் என்று கூறும் கொழும்பில் 75% முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இப்பிரதேசங்களில் இருக்கின்ற காணிகள் மிகவும் பெறுமதியான காணிகளாகும். அரசாங்கம் அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் கொழும்பு நகரத்தில் இருக்கின்ற முஸ்லிம்களின் வரலாற்றை மாற்றுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. அதில் முஸ்லிம்களின் பின்தங்கிய வீடுகளே அதிகமுள்ளன. அவர்களது வாழ்வில் ஏதாவது நன்மை செய்ய வேண்டும் எனக் கூறிக் கொண்டு, இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களை கொழும்பிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, இந்த நகரத்திலுள்ள காணிகளை வேறு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறது.

இதன் ஒரு கட்டம்தான் கொம்பனித் தெரு மலே நகரம் ஆகிய இடங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் அங்கிருந்த 1500 வீடுகளை உடைத்து இந்தியன் கம்பனிக்குக் கொடுத்துள்ளனர். கொம்பனித் தெருவோடு நிறுத்தப் போவதில்லை. எமது சமூகத்தின் வரலாறும் நாம் ஆயிரக்கணக்கான வருடங்கள் கொழும்பில் வாழ்ந்ததற்கான ஆதாரங்களையும் மாற்றியமைக்கக் கூடிய திட்டந்தான் நடைபெறுகிறது. இது அரசியல் ரீதியான ஒரு பிரச்சினை. இதனை அரசியல்வாதிகளே நிவர்த்தி செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கம் தன்னிடமுள்ள இராணுவ பலத்தை கையில் வைத்துக் கொண்டு மக்களை அச்சுறுத்தி அவர்களை வெளியேற்றுகிறது. இப்பிரச்சினை கொழும்பு முஸ்லிம்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது.

**எங்கள் தேசம்: கொழும்பில் பள்ளிவாசல்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக கூறப்பட்டு வரும் நிலையில், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக என்ன கூற வருகிறீர்கள்?**

**முஜிபுர் ரஹ்மான்:** கடந்த காலமாக பொதுபல சேனாவினால் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள் போன்றவை தாக்கப்பட்டதால் கொழும்பில் பல மத்ரஸாக்கள், பள்ளிவாசல்கள் மூடப்பட்டுள்ளன. அத்தோடு தர்கா டவுன் சம்பவத்தையெல்லாம் எடுத்துப் பார்த்தால் முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறியுள்ளது. மஹிந்தவின் அரசாங்கத்தில் முஸ்லிம்களை பாதுகாக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி தர்கா டவுன் மக்களுக்கு நஷ்டஈடு மற்றும் பாதிப்புக்ளை ஆராய குழுவொன்றை நியமிப்பதாக கூறியிருந்தார். ஆனால் அவ்வேலைகள் இன்னும் நடக்கவில்லை. இப்போது முஸ்லிம்களை ஹஜ்ஜுக்கு அனுப்புவதாக கூறுகின்றார். எமக்கு அது தேவையில்லை. இலங்கையில் முஸ்லிம்களை நிம்மதியாக வாழ்வதற்கு வழியமைத்துத் தருமாறே வேண்டுகிறேன். நாட்டில் பிரச்சினைகள் இன்றி வாழ்வதற்கான தலைமைத்துவத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தவறியுள்ளார். அத்தோடு, மக்கள் மத்தியில் இராணுவம், பொலிஸாரை நம்ப முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

**எங்கள் தேசம்: இந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**முஜிபுர் ரஹ்மான்:** இந்த அரசாங்கத்திற்கு கீழுள்ள இனவாத குழுக்களினது தாக்குதல்களின் காரணமாக இலங்கையில் முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக காணப்படுகிறது. அதிலிருந்து நாங்கள் விடுபடுவதென்றால் அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும். இல்லையென்றால் நிலைமை இன்னும் மோசமாகலாம்.


அரசியல் பயணத்தை மீண்டும் மாற்றக் கூடிய ஒரு சந்தர்ப்பமாக இந்த ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகிறது. முஸ்லிம், தமிழர்கள் மட்டுமல்லாது சிங்கள மக்கள் கூட இந்த ஜனாதிபதியை மாற்ற வேண்டும் என்றே செயற்படுகின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள், தொழிலாளர்களின், பிரச்சினைகளை பார்க்கின்றபோது, அரசாங்கத்துடன் அவர்கள் எவ்வளவு வெறுப்பில் உள்ளார்கள் என்று எமக்கு தெரிகின்றது. தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கான போதுமான வருமானம் கிடைக்காமையால் போராட்டங்களை நடத்துகிறார்கள். இந்த அரசாங்கத்தை மாற்றியமைக்காத வரையில் இது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**எங்கள் தேசம்: ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. யாரை வேட்பாளராக நியமிக்கவுள்ளது?**


**முஜிபுர் ரஹ்மான்:** யாரை நியமிப்பது என்பது தொடர்பாக இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால், ஐ.தே.க. வின் வேட்பாளர்தான் பொது வேட்பாளராக களமிறங்குவார். இன்று நாட்டில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான ஒரு நிலைமை இருக்கின்றது. தேசிய ரீதியான தேர்தல் ஒன்று வந்தால் அரசாங்கத்திற்கு கஷ்டமான நிலைமை உருவாகும் என்று தெளிவாக தெரிகின்றது. அக்காரணத்தினாலேயே ஜனாதிபதி அவர்களும் ஜனவரியில் இத்தேர்தலை நடத்துவதற்கு முன் வந்துள்ளார். ஏனென்றால் காலம் செல்லச் செல்ல அவருடைய நிலைமை மோசமாகும் என்று அவருக்கு தெரிந்துள்ளது. இதன் காரணமாகவே தேர்தலை அவசரமாக நடத்த தீர்மானித்துள்ளார். நாம் ஏனைய கட்சிகளோடும் சிவில் நிர்வாகங்களோடும் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம். இதன் மூலம் பொதுவான ஒரு நபர் ஐ.தே.க. இல் இருந்து களமிறங்குவார். சின்னம் பொதுச் சின்னமாக அமையும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாளிகாவத்தை மையவாடி காணி அபகரிப்பு:



மாளிகாவத்தை மையவாடியின் முகப்புத் தோற்றம்



மையவாடிக்கு முன்பாக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டடம்

# சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்

கொழும்பு முஸ்லிம்கள் அண்மைக் காலமாக குறி வைக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களது வாழ்விடம், வர்த்தக நிலையங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் என்பன பல வழிகளில் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றாக மாளிகாவத்தை மையவாடிக் காணி அபகரிப்பு வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மாளிகாவத்தை மையவாடிக்கான காணியை 1870ஆம் ஆண்டு காயலெப்பை சின்னலெப்பை என்பவர் நன்கொடையாகக் கொடுத்தார். அதனை இன்று வரை கொழும்பு பெரிய பள்ளிவாசலே நிர்வகித்து வருகிறது. அந்த மையவாடிக் காணி சிறிது சிறிதாக சூறையாடப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

2001ஆம் ஆண்டு கொழும்பு பேஸ்லைன் வீதி விஸ்தரிக்கப்பட்ட போது உபாலி ஜயசிங்க என்பவருக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியும் மாளிகாவத்தை மையவாடியின் சிறு பகுதியும் வீதி அபிவிருத்திற்காக உள்வாங்கப்பட்டன. மையவாடியின் முன் பக்கமாக உபாலி ஜயசிங்கவுக்குச் சொந்தமான கம்பனி ஒன்றுள்ளது. இவரது காணியின் பெரும் பகுதி வீதி அபிவிருத்திக்காக சென்றமையால் ஒரு முக்கோண பகுதியே எஞ்சியது. இதையடுத்து, அவர் அதில் கட்டடம் ஒன்றை அமைக்க திட்டமிட்டு மையவாடிக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதன் நிமித்தம் 2002இல் அவர் 10 பேர்ச்சஸ் அளவிலான காணியை அபகரித்து முக்கோண வடிவில் இருந்த தனது காணியை நீள் சதுர காணித் துண்டாக அமைத்துக் கொண்டார்.

உபாலி ஜயசிங்க என்ற அந்த நபர் அத்துமீறி பிரவேசித்து அதற்குள் 17 கொங்கிறீட் தூண்களை அமைத்து சுவர் எழுப்பும் வரை மையவாடிக்குப் பொறுப்பான பாதுகாப்பு ஊழியர்களோ முகாமைத்துவ ஊழியர்களோ அல்லது நம்பிக்கையாளர் சபையோ அதற்கெதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இருந்தாலும் அப்பிரதேசத்திலிருந்த முஸ்லிம்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்ததுடன் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்ததன் பின்னரே, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கிறது. இவ்வளவு கால தாமதமும் அசமந்தமும் ஏன் என்ற சந்தேகத்தை கொழும்பு முஸ்லிம்கள் மத்தியில் இது ஏற்படுத்தியுள்ளது.

உபாலி ஜயசிங்க மாளிகாவத்தை மையவாடிக் காணிக்குள் தனது எல்லையை நகர்த்தியுள்ளார் என்று பொலிஸாரின் அறிக்கை கூட மிகத் தெளிவாக கூறுகிறது. பின்னர் இப்பிரச்சினை தொடர்பான வழக்கு கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இவ்வழக்கு விசாரணைக்கு பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் முறையாக சமுகமளிக்காததால் தீர்ப்பு உபாலி ஜயசிங்கவுக்கு சாதகமாக அமைந்ததாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

மையவாடியைப் பாதுகாப்பதில் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கிருக்கும் பொறுப்பு தொடர்பில் பலரும் கேள்வியெழுப்பியதன் விளைவாக, 2003 இல் பள்ளிவாசல் நிர்வாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. அவ்வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், 2007 இல் அவ்வழக்கை வாபஸ் வாங்கிய பள்ளிவாசல் நிர்வாகம் அதன் பின்னர் இக்காணியை மீட்டெடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

மாளிகாவத்தை மையவாடிக் காணியை உபாலி ஜயசிங்க அபகரித்து தற்போது 10 வருடங்கள் கடந்துள்ளதால், ஆட்சி உரித்து அடிப்படையில் அவர் அக்காணிக்கு உரிமை கொண்டாடுகிறார். அத்தோடு, அவ்விடத்தில் 11 மாடிக் கட்டடம் ஒன்றும் நிறுவப்பட்டு தற்போது முடிவுறும் தறுவாயிலுள்ளது.

பேஸ்லைன் வீதியிலுள்ள காணிகள் பெறுமதிமிக்கவை. கிட்டத்தட்ட ஒரு பேர்ச்சஸ் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியாகும். உபாலி ஜயசிங்க அபகரித்தது 10 பேர்ச்சஸ் காணி என்றால், கிட்டத்தட்ட அது 4 கோடி ரூபா பெறுமதியான காணியாகும். இவ்வளவு பெறுமதிமிக்க காணியை மீட்டெடுப்பதற்கோ, அதற்கான நஷ்டஈட்டைப் பெறுவதற்கோ அல்லது கட்டடம் கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றுக் கொள்வதற்கோ கொழும்பு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

கொழும்பு பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையைச் சேர்ந்த நதுசான் ஹஸன் என்பவரிடம் மாளிகாவத்தை மையவாடிப் பிரச்சினை தொடர்பாக கேட்டபோது, அதற்கு வழக்கு போடப்பட்டுள்ளது. சிவில் வழக்கு என்பதால் காலம் நீடித்துச் செல்கிறது என்று தெரிவித்தார். அவரிடம் கடந்த காலங்களில் இப்பிரச்சினை தொடர்பாக போடப்பட்ட வழக்குக்கு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறதே. இதற்கான காரணம் என்ன என்று கேட்டபோது, அது எங்களுடைய வழக்கல்ல; வேறு யாரோ போட்ட வழக்கு. அதற்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்று தெரிவித்துவிட்டு தொலைபேசியை துண்டித்துக் கொண்டார். மேலதிக தகவலைப் பெற மீண்டும் அவரோடு தொடர்பு கொள்ள முடியாமல் போனது.

இந்நிலையில் மாளிகாவத்தையைச் சேர்ந்த பொதுமக்கள் மையவாடிக் காணியை மீட்டெடுப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். கொழும்பு பெரிய பள்ளிவாசல் தனக்கிருக்கிற பொறுப்பை சரியாக நிறைவேற்றத் தவறியதால் பொதுமக்கள் இதற்கெதிராக குரல் கொடுக்கின்றனர்.

உண்மையில் மையவாடிக் காணி விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகம் முழு முயற்சியெடுத்து தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் நம்பிக்கையாளர் சபை முயற்சி எடுக்காதிருந்தமை எதிராளி காணியை உரிமை பெறுமளவுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது.

மாளிகாவத்தை மையவாடி என்பதும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் என்பதும் தனிப்பட்டவர்களினது சொத்தல்ல. நாட்டு முஸ்லிம்கள் அனைவரதும் சொத்தாகும். அந்த வகையில் இதனை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்ட நம்பிக்கையாளர் சபையினருக்கு தார்மீகப் பொறுப்பிருக்கிறது. அவர்கள் இதன் உண்மைத் தன்மை தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்தக் காணியை மீட்டெடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மாளிகாவத்தை மையவாடிக் காணி அபகரிப்பு தொடர்பாக ஐ.தே.க. மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். பைரூஸ் கருத்துத் தெரிவிக்கையில், கொழும்பு மாநகர சபையின் மேயராக ஒரு முஸ்லிம் இருக்கின்ற இத்தருணத்தில் மையவாடிக் காணியில் கட்டடம் கட்டப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இது தொடர்பில் பராமுகமாக இருந்தால் முழு மையவாடியும் அபகரிக்கப்படும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார்.


மறுபுறத்தில் இந்த விடயத்தை வெறுமனே பெரிய பள்ளிவாசலிடம் விட்டு விடாமல் அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் வெறுமனே கொழும்பு முஸ்லிம் மக்களோடு மாத்திரம் தொடர்புடைய ஒன்றல்ல. இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களோடும் தொடர்புடைய ஒன்றாகும். மாளிகாவத்தை மையவாடியின் நிலைமையையும் அது தொடர்பில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் கரிசனையையும் உற்றுநோக்கும் போது, இவ்விடயத்தில் அனைத்து முஸ்லிம் தரப்பினரதும் தலையீடு அவசியம் என்பதையே உணர்த்துகின்றது.

மருதூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தேர்தலில் ஒபாமா தோல்வி



அமெரிக்க செனட் சபை தேர்தலில் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்துள்ளதாக அந் நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

நடைபெற்ற செனட் சபைத் தேர்தலில் ஒபாமாவின் பலம் பொருந்திய பிராந்தியங்களாக இருந்த வடக்கு கெரோலினா, கொலராடோ, வேர்ஜினியா, அரெகனாஸ் மற்றும் டெக்கோடா என்பவற்றின் ஆதரவு குடியரசுக் கட்சிக்கு கிடைத்துள்ளது. இதன் மூலம் அமெரிக்க செனட் சபையின் பலம் குடியரசுக் கட்சிக்கு சென்றுள்ளதாகவும் அச்செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

# அமெரிக்காவுக்கு மட்டும் விலையைக் குறைத்தது சஊதி




சஊதி அரேபியா அமெரிக்காவுக்கு மட்டும் எண்ணெய்யின் விலையை குறைத்ததால் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்து, பரல் ஒன்று சுமார் 12 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் எண்ணெய் ஏற்றுமதியில் முக்கிய நாடாக உள்ள சஊதி அரேபியா அமெரிக்காவுக்கு மட்டும் எண்ணெய் விலையை குறைத்துள்ளது தான்.

சஊதி அரசாங்கத்துக்கு சொந்தமான சஊதி அரம்கோ என்ற உலகின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனம் அமெரிக்காவுக்கு அளிக்கும் மசகு எண்ணெயின் விலையை குறைத்தது. அமெரிக்கா தங்கள் நாட்டிலேயே பல எண்ணெய்க் கிணறுகளை தோண்டத் தொடங்கியுள்ளது. இதனால் அமெரிக்காவில் அதிகளவில் எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்தப் போட்டியை சமாளிக்கவும் அமெரிக்காவில் தோண்டி எடுக்கப்படும் எண்ணெயை விட தங்கள் நாட்டு எண்ணெயை குறைந்த விலையில் அமெரிக்காவுக்கே விற்கவும் சஊதி இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

# சட்டவிரோத குடிநகர்வில் படகு கவிழ்ந்து 24 பேர் பலி

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு புலம்பெயர்ந்து சென்றவர்களின் படகு, துருக்கி நாட்டின் தலைநகரம் ஸ்தான்புல் வடக்கு கடற் பகுதியில் கவிழ்ந்து பெண்கள், குழந்தைகள் உட்பட 24 பேர் பலியாகினர்.

இச்சம்பவம் போஸ்போரஸ் மற்றும் கருங்கடல் சங்கமிக்கும் பகுதியில் நிகழ்ந்துள்ளது. மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடுமையாக காற்று வீசுவதால் மீட்பு பணி கடினமாக உள்ளது. ஒரு சிறிய படகில் சுமார் 40 பேர் வந்துள்ளனர். படகு கவிழ்ந்ததால் கடலில் குழந்தைகளின் உடல்கள் மிதந்து வந்தன. விபத்தில் இறந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை என்று மீட்புக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, சிரியா போன்ற நாட்டில் உள்ளவர்கள் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு சட்டவிரோதமாக சென்று குடியேற துருக்கி கடல் பகுதியை தேர்ந்தெடுக்கின்றனர். இப்படி செல்லும் பல பேரை துருக்கி மீட்டுள்ளது.

# பயணிகளை காப்பாற்றிவிட்டு சாரதி உயிரிழப்பு


மாரடைப்பு ஏற்பட்டு தனது உயிர் பிரியப் போகும் தறுவாயிலும் 110 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய சம்பவமொன்று இந்தியாவில் நடைபெற்றுள்ளது.

கேரள மாநில போக்குவரத்துக் கழகத்துக்கு சொந்தமான ஒரு பஸ் சுமார் 110 பயணிகளுடன் உதகமண்டலம் நோக்கி மலைப் பாதை வழியாக சென்று கொண்டிருந்தது.

ஊட்டியை நெருங்க சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவில், சாரதி அப்துல் ரஹ்மானுக்கு திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டு சில வினாடிகளில் அவர் பாதி மயக்க நிலையிலிருந்தார். பஸ் முன் நோக்கிச் சென்றால் பயணிகளின் உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்பதை உணர்ந்து கொண்ட அப்துல் ரஹ்மான், நீலக் கோட்டை என்ற இடத்தில் வீதியின் தடுப்புச் சுவரின் மீது சக்கரங்களை ஏற்றி பஸ்ஸை நிறுத்தியதோடு, அவரும் உயிரிழந்துள்ளார்.

ஆபத்து நிறைந்த அந்த மலைப் பாதையில், வேகமாக ஓடிய பஸ்ஸை ரஹ்மான் ஓரங்கட்டி நிறுத்தியிருக்கா விட்டால், பஸ் மிகப் பெரிய பள்ளத்தில் விழுந்திருக்கக் கூடும் என அப்பகுதி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# போராளிகள் மிரட்டல் மோடிக்கு பாதுகாப்பு



இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பாகிஸ்தானில் இயங்கும் தலிபான் போராளிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

காஷ்மீர் மற்றும் குஜராத் மாநிலத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கு பழிக்கு பழி வாங்க மோடி மீது தாக்குதல் நடத்துவோம் என்று தலிபான் போராளிகளின் செய்தித் தொடர்பாளர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள தகவலில் கூறியுள்ளார். மோடி பிரதமராக பதவியேற்ற பிறகு பாகிஸ்தான் போராளிகள் வெளியிட்டுள்ள முதல் மிரட்டல் இதுவாகும்.

வழக்கமாக போராளிகளின் இத்தகைய மிரட்டல்களுக்கு பாதுகாப்புப் படையினர் மிகவும் முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். ஆனால் பாகிஸ்தான் தலிபான் போராளிகளின் அச்சுறுத்தலை பிரதமர் மோடியின் பாதுகாப்புப் பிரிவினர் ஒரு சவாலாக எடுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பு முழுமையாக மாற்றப்பட்டுள்ளது. பிரதமர் மோடி டெல்லி நகருக்குள் பயணம் செய்யும்போதும் டெல்லியை விட்டு மற்ற மாநிலங்களுக்கு செல்லும்போதும் எத்தகைய பாதுகாப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று புதிய வழிகாட்டிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. புதிய திட்டத்தின்படி பிரதமர் மோடியை அவ்வளவு எளிதில் யாரும் நெருங்க முடியாதபடி 6 அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# உலகில் கடவுச் சீட்டின்றி 10 மில்லியன் மக்கள்




உலகில் தற்போது எந்த தேசியமோ, கடவுச் சீட்டோ இன்றி குறைந்தது 10 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருவதாக கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வாழ்பவர்களுக்கு மருத்துவ உதவி, கல்வி மற்றும் வாக்குரிமை போன்றவை மறுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாற்றம் கொண்டு வருவதற்கு நாடற்ற குழந்தைகள் மற்றும் சிறுபான்மை இனத்தினருக்கு குடியுரிமை வழங்குவதற்கு ஐ.நா. அகதிகளுக்கான நிலையம் பரிந்துரை செய்கிறது.

இன்னும் 10 ஆண்டுகளுக்குள் உலகில் நாடற்றோரை இல்லாமல் செய்ய ஐ.நா. அகதிகளுக்கான நிலையம் புதிய பிரசாரம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

பல காரணங்களுக்காக மக்கள் தனது தேசியத்தை இழந்தோ அல்லது பெறாமலோ இருந்து வருகின்றனர். அகதிமுகாம்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு புதிய நாட்டின் குடியுரிமை வழங்கப்படுவதில்லை. தனது பெற்றோர் குடியுரிமை பெற்றிருக்கும் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றனர்.

மியன்மாரின் ரோஹிங்கியா சமூகத்தினர் போல் தனது குடியுரிமை உட்பட அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு பல சமூகத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். உலகில் 27 நாடுகளில் பெண்களுக்கு தனது குடியுரிமையை அவர்களது குழந்தைகளுக்கு கடத்த முடியாத நிலை இருப்பதாக குறிப்பிடும் ஐ.நா. அகதிகள் நிலையம், இதனால் பல தலைமுறையாக நாடற்றவர்கள் தோன்றியிருப்பதாக கவலை தெரிவித்துள்ளது. ஒவ்வோர் அரசாங்கங்களும் நாடற்றவர்களை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க ஐ.நா. அழுத்தம் கொடுத்து வருகிறது.

# முதலாவது ஆடம்பர கப்பல் உலகிற்கு அறிமுகம்



உலகிலேயே முதலாவது பிரமாண்டமான ஸ்மார்ட் கப்பலை றோயல் கறிப்பியென் உருவாக்கியுள்ளது. குவாண்டம் ஒப் த சீஸ் என இந்தக் கப்பலுக்கு பெயரிடப்பட்டுள்ளது.

மத்திய அட்லாண்டிக் தீவிலிருந்து நியூ ஜேர்ஸியின் கேப் லிபர்டி துறைமுகத்துக்குச் சென்று நங்கூரமிட்டிருந்த இந்தக் கப்பல் இங்கிலாந்தின் சௌத்தொம்பிடன் துறைமுகத்தை வந்தடைந்தது.

கடந்த 30 வருட கால முயற்சியின் பலனாக இந்தக் கப்பல் அமைக்கப்பட்டுள்ளதுடன், கடந்த 5 வருடங்களில் கப்பலின் தொழில்நுட்பம் சார்ந்த தயாரிப்புகளை மேற்கொண்டதாக கப்பலின் சிரேஷ்ட பிரதித் தலைவரான மொமினிக் பௌல் தெரிவித்துள்ளார்.

மேலும், கப்பலின் மேல் பகுதியில் நீச்சல் தடாகம், அலைச் சறுக்கல், சாகச வசதிகள், கோபுரத்திலிருந்து உலகைப் பார்க்கும் வசதிகள் என்பனவும் இந்தக் கப்பலுக்குள் செல்பவர்கள் அனுபவிக்க முடியும்.

ஒரே நேரத்தில் 4 ஆயிரத்து 180 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய திறன் இந்தக் கப்பலுக்கு உள்ளதாகவும் இதில் 18 தளங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கப்பல் அடுத்த வருடத்தில் நியூயோர்க், மஹாமாஸ், சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நஹ்ழாவின் தோல்வி

## துனீசியத் தேர்தல் பற்றிய சில அவதானங்கள்



ஸகி பவ்ஸ் (நளீமி)

கடந்த மாதம் இடம்பெற்ற துனீசிய தேர்தலில் இஸ்லாமிய சிந்தனைப் பின்புலத்தைக் கொண்ட அந்நஹ்ழா கட்சியினர் இரண்டாம் இடத்தையும் மதச்சார்பற்ற நிதா துனீஸ் கட்சி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. மொத்தமாகவுள்ள 217 ஆசனங்களில் முறையே நிதா துனீஸ் கட்சி 83 ஆசனங்களையும் அந்நஹ்ழா கட்சி 70 ஆசனங்களையும் கைப்பற்றின. தேர்தலுக்கு முன்பு பரந்தளவில் அந்நஹ்ழா கட்சி வெற்றி பெறும் என எதிர்வுகூறப்பட்ட போதிலும் கூட, அக்கட்சி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. இத்தேர்தல்களின் முடிவுகள் இஸ்லாமியவாதிகளுக்கு பாதகமாக அமைந்தமையை பல்வேறு பரிமாணங்களில் அரசியல் விமர்சகர்கள் ஆராய்கின்றனர். குறிப்பாக, மதச்சார்பற்ற ஊடகங்கள் இஸ்லாமியவாதிகளின் கடைசிப் புகழிடமும் தொலைந்துவிட்டது என கூக்குரலிடுகின்றன. மறுபுறத்தில், ஸலபி சிந்தனைப் போக்கைக் கொண்ட அரசியல் அபிமானிகள் அந்நஹ்ழாவின் ஜனநாயகத்திற்கான முதலீடுகள், அவர்களையே குதறிவிட்டன என எழுதுகின்றனர். இவ்விரு துருவங்களுக்கும் அப்பால் துனீசியத் தேர்தல் முடிவுகள் வெளிச்சமிட்டுக் காட்டும் ஆழமான அவதானங்கள் என்ன? என்பதையே இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.




தேர்தல்களில் அந்நஹ்ழா கட்சி தோல்வியடைந்தாலும் அவர்களது போராட்டம் தோல்வியடையவில்லை. காரணம், புரட்சியை காப்பாற்றுதல் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் என்பனவே அந்நஹ்ழாவின் கடந்த கால இலக்குகளாக இருந்தன. கடந்த தேர்தல் முடிவுகள் எவ்வாறாக அமைந்த போதிலும், ஜனநாயகத்தின் பிரதான மைல்கல்லான நீதியும் நியாயமானதுமான தேர்தலில் துனீசிய மக்கள் பங்கேற்றுள்ளனர். துனீசியாவைப் பொறுத்தவரைக்கும் இது மிகப் பெரிய வெற்றியாகும். நிச்சயமாக, இத்தேர்தல்களை அந்நஹ்ழாவின் ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் வெற்றியாகக் குறிப்பிடலாம். இதனையே அந்நஹ்ழாவின் அரசியல் சிந்தனையாளர் கலாநிதி அப்துல் மஜீத் நஜ்ஜார், புரட்சி மற்றும் ஜனநாயகம்தான் அந்நஹ்ழாவின் இலக்குகள். ஜனநாயகம் நிலைநாட்டப்பட்ட பின்னர் தேர்தல்களில் யாரும் வெற்றி பெறலாம், தோல்வியடையலாம். இது மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது எனக் குறிப்பிடுகிறார்.

இத்தேர்தல்களில் அந்நஹ்ழா தோல்வியடைந்தமைக்கான காரணத்தை அரசியல் வரலாற்று நியதிகளின் அடிப்படையிலும் நோக்க முடியும். அதாவது, சர்வதேச அரசியல் வரலாற்று அனுபவங்களின்படி, மக்கள் புரட்சிக்குப் பின்னரான தேர்தல்களில் புரட்சியை வழிநடத்திய கட்சி தோல்வியடைவது வழமை. காரணம், குறித்த தேர்தல்களில் மக்களின் எதிர்பார்ப்பு வானைத் தொடுமளவுக்கு உயர்ந்ததாக இருக்கும். இவ்வனைத்து எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு புரட்சியை வழிநடத்திய கட்சி, பொருளாதார அனுபவம் பெற்றதாகவோ அல்லது சுறுசுறுப்பாகவோ இருக்க மாட்டாது. இவ்வரசியல் வரலாற்று நியதியே துனீசியாவிலும் தொழிற்பட்டுள்ளது. அதாவது கடந்த மூன்றாண்டுகளாக புரட்சியின் இலக்குகளையும் மற்றும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக அந்நஹ்ழா மிகக் கடுமையான அர்ப்பணங்களை மேற்கொண்டது. பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் கைப்பற்றிய அரசினையே விட்டுக் கொடுத்தது. இக்காலப் பிரிவில் துனீசியாவின் அரசியல் களத்தை சுமுகமாக நகர்த்துவதே அந்நஹ்ழாவின் ஏக சிந்தனையாக காணப்பட்டது. எனவே, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத்தி உழைப்பதற்கு போதுமான அவகாசத்தை அந்நஹ்ழா தலைமை வகித்த அரசாங்கம் பெற்றுக் கொள்ளவில்லை.

இதனால், மக்களின் அதிகரித்த அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினுடைய பொருளாதார திட்டமிடல்களால் முடியாமல் போயின. இதுவே கடந்த தேர்தலில் அந்நஹ்ழாவின் தோல்விக்கான பிரதான காரணமாகும். எனவே, அரசியல் நகர்வுகளில் முதிர்ச்சிக் கட்டத்தை எட்டிய அந்நஹ்ழாக் கட்சியின் பொருளாதார வியூகங்கள் இன்னும் பலம் பெற வேண்டியதன் அவசியத்தை இத்தேர்தல்களில் துனீசிய மக்கள் அக்கட்சிக்கு உணர்த்தியுள்ளனர். இதனால் துனீசிய மக்கள் சர்வதேச இஸ்லாமிய சிந்தனைப் போக்கைக் கொண்ட இயக்கங்களுக்கும் கட்சிகளுக்கும் தேசத்தை வழிநடத்துதல் என்பதிலுள்ள மற்றொரு சவாலை கற்றுக் கொடுத்துள்ளனர் எனலாம்.

**பிராந்திய அரசியல் மாற்றங்கள் இஸ்லாமிய சிந்தனைப் போக்கைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கு சார்பானதாக இல்லை. மற்றையது, துனீசியாவின் அடுத்த கட்ட பொருளாதார ரீதியான சவாலை எதிர்கொள்ளும் அளவுக்கு அந்நஹ்ழாவின் ஆட்சியனுபவமும் இல்லை.**

அந்நஹ்ழாவின் தோல்வியின் பிராந்திய அதிர்வலைகள் வித்தியாசமான கண்ணோட்டத்தை தருகின்றன. ஏனென்றால், வெறும் அதிகார மோகத்தை தீர்த்துக் கொள்வதற்கான கருவியாகவே ஜனநாயகத்தை இஸ்லாமியவாதிகள் பயன்படுத்துகின்றனர் என தீவிர மதச்சார்பற்றவாதிகள் வாதித்து வந்தனர். குறிப்பாக, லிபியா மற்றும் எகிப்தில் ஆட்சிபீடமேறிய இஸ்லாமியவாதிகளின் ஆட்சிக்கு எதிரான கருத்தியல் போராட்டத்தில் மேற்குறிப்பிட்ட சுலோகம் தீவிர மதச்சார்பற்றவாதிகளால் பரவலாக பயன்படுத்தப்பட்டது. ஆனால், இத்தேர்தல்களில் ஜனநாயகத்திற்கான இஸ்லாமியவாதிகளின் தூய்மையான அர்ப்பணத்தை அந்நஹ்ழா வெளிக் காட்டியுள்ளது. ஏனென்றால், மக்களின் தெரிவில் திருப்தியடைவதாக அந்நஹ்ழா தெரிவித்தது. இன்னும், எதிர்கட்சியிடம் வேண்டி நிற்கும் நேர்மையான ஜனநாயக கலாச்சாரம் ஒன்றுக்கான அனைத்து பொறுப்புக்களையும் பணிகளையும் அந்நஹ்ழா முழுமையாக நிறைவேற்றும் என பிரகடனம் செய்தது. இதனை துனீசியத் தேர்தல்களின் பின்னர், ஜனநாயகத்திற்கான இஸ்லாமியவாதிகளின் அர்ப்பணத்தை பற்றிய பிழையான விம்பங்கள் இடிந்து விழ ஆரம்பித்துள்ளன என பிரான்ஸ் நாட்டின் பிரபல்யமான ஊடகவியலாளர் David Hearst என்பவர் Huffington Post பத்திரிகையில் எழுதியுள்ளார்.

சர்வதேச இஸ்லாமிய இயக்கங்களின் தன்மை மற்றும் போக்கு பற்றிய மீள்வாசிப்பொன்றையும் இத்தேர்தல்கள் தந்துள்ளதாக பலஸ்தீன எழுத்தாளர் மாஜித் கயாளி எழுதுகிறார். அதாவது, இஸ்லாமிய இயக்கம் என்பது ஏனைய சக்திகளுடன் கூட்டு சேர முடியாத ஒடுக்கமான தளத்தில் இயங்கும் கட்டமைப்பல்ல. மாறாக சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகளுக்கு ஏற்ப தன்னை வடிவமைத்துக் கொள்ளக் கூடிய இயல்பை இஸ்லாமிய இயக்கங்கள் பெற்றுள்ளன. எகிப்திலும் அல்ஜீரியாவிலும் இஸ்லாமிய இயக்கங்கள் சந்தித்த நிகழ்வுகள் இறுதியானதல்ல. அத்தகைய அகோர நிகழ்வுகளின் பின்னரும் இஸ்லாமிய இயக்கங்களால் சுதாகரித்துக் கொண்டு அரசியல் புலத்தில் மத்திய கதாநாயகர்களின் ஒரு சாராராக செயற்பட முடியும் என்பதை துனீசியத் தேர்தல்கள் உணர்த்துகின்றன என்கிறார் ஊடகவியலாளர் மாஜித் கயாளி.

கடந்த தேர்தல்களில் இஸ்லாமிய இயக்கமான அந்நஹ்ழா வலிமையான எதிர்க்கட்சியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. மதச்சார்பற்ற அந்நிதா துனீஸ் ஆளும் கட்சியாக பதவியேற்றுள்ளது. ஏற்கனவே வரையப்பட்டிருந்த தோற்றப்பாடான மதச்சார்பற்ற சிந்தனையுடன் இஸ்லாமியவாதிகள் எப்புள்ளியிலும் ஒன்று சேர முடியாது என்ற இஸ்லாமியவாதிகளின் வாதத்தையும் இஸ்லாமியவாதிகளுடன் இணைந்து தேசத்தை கட்டியெழுப்புவது அசாத்தியமானது என்ற தீவிர மதச்சார்பற்றவர்களின் வாதத்தையும் துனீசிய மக்கள் முறியடித்துள்ளதாக மாஜித் கயாளி மேலும் குறிப்பிடுகிறார். மொத்தத்தில், இஸ்லாமிய அரசியல் இயக்கங்களின் சமூகப் பார்வையிலும் மதச்சார்பற்ற வாதத்தின் இஸ்லாமிய வாதம் பற்றிய பார்வையிலும் துனீசியத் தேர்தல்கள் பாரிய மாற்றங்களை உண்டு பண்ணியுள்ளன எனலாம்.

லிபியா, சிரியா, யெமன் மற்றும் எகிப்தில் இடம்பெறும் அரசியல் மாற்றங்களினதும் பொதுவான மத்திய கிழக்கின் அரசியல் சூழமைவுகளினதும் அடிப்படையில் நேர்மையான மதிப்பீடொன்றை செய்யும் பட்சத்தில், அந்நஹ்ழா இயக்கம் பலமான எதிர்க்கட்சியாக செயற்படுவதே பொருத்தமானது. அதற்கான பிரதான நியாயங்களாக இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று, ஏற்கனவே குறிப்பிட்ட பிராந்திய அரசியல் மாற்றங்கள் இஸ்லாமிய சிந்தனைப் போக்கைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கு சார்பானதாக இல்லை. மற்றையது, துனீசியாவின் அடுத்த கட்ட பொருளாதார ரீதியான சவாலை எதிர்கொள்ளும் அளவுக்கு அந்நஹ்ழாவின் ஆட்சியனுபவமும் இல்லை. எனவே, குறிப்பிடத்தக்க காலம் அந்நஹ்ழா எதிர்க்கட்சியாக செயற்படுவதே உசிதமானது. தன்னை இன்னும் ஆட்சி புரிதலுக்கு பழக்கப்படுத்திக் கொள்வதற்கும் ஜனநாயகத்தை நோக்கிய தனது தூய்மையான அர்ப்பணிப்பை ஆழப்படுத்திக் கொள்வதற்கும் இவ் எதிர்க்கட்சி அரசியலே அந்நஹ்ழாவுக்கு சாதகமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி பயன்படுத்தும் போது தெரிந்திருக்க வேண்டியவை

ஹஸன் இக்பால் - யாழ்ப்பாணம்



(சென்ற வார தொடர்ச்சி...)

**கிளீனர்களை நம்ப வேண்டாம்**

நாம் நம்பிக்கை வைத்திருக்கும் தளங்கள் சிலவற்றில், உங்கள் கம்பியூட்டரை சுத்தப்படுத்த, இந்த இடத்தில் கிளிக் செய்திடுங்கள் என சில 'லிங்க்குகள்' இருக்கும். ரெஜிஸ்ட்ரியைச் சரி செய்திடலாமே! ஸ்பைவேர்களை எடுக்கவா, இலவசமாய்! என்று சில லிங்க்குகள் இருக்கும். பெரும்பாலான இந்த லிங்க்குகள் நமக்கு உதவி செய்வதைக் காட்டிலும் உபத்திரவம் தருவதாகவே அமையும். இக்கட்டில் மாட்டிவிட்டு, பணம் கட்டு என்று சொல்லும் தளங்களும் உள்ளன. ஆனாலும் CCleaner போன்ற இலவச software களை பாவிக்கலாம். இருந்தாலும் இவற்றைப் பயன்படுத்துவதை அறவே தவிர்த்தலே சிறந்தது.

**தேவையற்றவற்றை நீக்குக**

மிகவும் ஆசையாக சில அப்ளிகேஷன் சொப்ட்வேர்களைப் பதிந்து பயன்படுத்தி இருப்பீர்கள். காலப்போக்கில் அதன் மேம்படுத்தப்பட்ட அல்லது கூடுதல் வசதிகளுடன் கூடிய சில சாப்ட்வேர்களையும் இன்ஸ்டோல் செய்திருப்பீர்கள். இந்நிலையில், பழைய சொப்ட்வேர்களை, கம்பியூட்டரிலிருந்து நீக்குவதே நல்லது. கண்ட்ரோல் பேணல் சென்று, Add/ Remove Programs பிரிவின் மூலம் பழையவற்றை நீக்கிவிடுங்கள்.

**சிந்திய திரவம்**

லேப்டாப் பயன்படுத்துபவர்கள் பலர் இந்த நெருக்கடிக்கு ஆளாவார்கள். லெப்டாப் பயன்படுத்திக் கொண்டே தண்ணீர், காபி, டீ என பானங்களைக் குடிப்பார்கள். அப்படியே சில வேளைகளில் கவனமின்றி லெப்டாப், கம்பியூட்டர்களில் இது சிதறிவிடும். உடனே அதனை இணைத்திருக்கும் பவர் ப்ளக்கை நீக்கவும். பவர் ப்ளக்கில் இல்லை என்றால், கம்பியூட்டர் உள்ளே இருக்கும் பேட்டரியை நீக்க வேண்டும். இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அனைத்து சாதனங்களையும் வெப்கேமரா, யூ.எஸ்.பி. போர்ட்டில் உள்ள ட்ரைவ் போன்றவையை நீக்க வேண்டும். உடனே லெப்டாப்பினைத் தலைகீழாக கவிழ்த்து அந்த திரவத்தினை வெளியே கொண்டு வரும் முயற்சியில் இறங்க வேண்டாம். நன்றாக உறிஞ்சும் தன்மையுடைய துணி கொண்டு, ஒற்றி எடுக்க முயற்சிக்கலாம். லெப்டாப்பினை வெவ்வேறு திசையில் அசைப்பதன் மூலம், மேலே உள்ள திரவம் இன்னும் உள்ளே போகும் வழியை அமைக்காதீர்கள்.

**அட்மின் அக்கவுண்ட்**


பெரும்பாலான எக்ஸ்பி சிஸ்டம் பயனாளர்கள், அவர்களின் அட்மினிஸ்ட்ரேட்டர் அக்கவுண்ட்டிலேயே, தொடர்ந்து கம்பியூட்டரில் பணிபுரிவார்கள். கம்பியூட்டர்களில் மாற்றங்கள் ஏற்படுத்த, இந்த அக்கவுண்ட் வழி செல்ல வேண்டும் என்றாலும் மற்றைய நேரங்களில் வேறு ஓர் அக்கவுண்ட் வழி சென்று பயன்படுத்தலாம். ஏனென்றால், அட்மின் அக்கவுண்ட் வைரஸ்களை எளிதில் உள்ளே வரவழைக்கும்.

**சிஸ்டம் ட்ரே கிளீன்**

உங்களுடைய டாஸ்க்பாரின் வலது பக்கம் சிஸ்டம் ட்ரேயில் பல ஐகான்கள் உள்ளனவா? இவை எல்லாம் உங்களைக் கேட்காமலேயே இயங்கிய புரோகிராம்களின் தடங்கல். இவை எல்லாம் கம்பியூட்டர் இயங்கத் தொடங்குகையில், நீங்கள் அறிந்தோ, அறியாமலோ இயக்கப்பட்டுப் பின்னணியில் இருக்கும். இங்கிருக்கும் புரோகிராம்கள் தேவையா என சிறிய கால இடைவெளியில் பார்த்துத் தேவைப்படாதவற்றை நீக்கவும். கண்ட்ரோல் பேணலில் Notification Area Icons என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் கீழாகவுள்ள Always show all icons and notifications on the taskbar என்ற பிரிவில் செக் பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். இதன் மூலம் உங்கள் சிஸ்டம் ட்ரே எவ்வளவு கூட்டமாக இருக்கிறது என்று தெரிய வரும். இதில் தேவைப்படாத ஐகான் மீது ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Close என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். அந்த குறிப்பிட்ட புரோகிராம் இயக்கத்தில் இருந்து நீக்கப்படும். உங்கள் கம்பியூட்டரின் ரெம் மெமரி இதற்காக உங்களுக்கு நன்றி சொல்லும்.

**மின் சிக்கனம்**

லெப்டோப் பயன்படுத்துபவராக இருந்தால், உங்கள் பேட்டரியின் திறனைச் சற்று சிக்கனமாகப் பயன்படுத்தலாமே. இதற்கான Power Settings அமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்துங்கள். கண்ட்ரோல் பேணலில் Power Options என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் பல ஆப்ஷன்கள் தரப்பட்டிருப்பதைக் காணலாம். உங்கள் லெப்டோப் பயன்பாட்டிற்கேற்ப இதில் விருப்பங்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தவும்.







தேனீ ஒரு வகை பூச்சி இனமாகும். இது பெரும்பாலும் மர உச்சிகளிலும் தென்னை மட்டைகளிலும் உயரமான இடங்களிலுமே வாழ்கின்றது. தேனீக்கள் பெரும்பாலும் கூட்டமாகவே வசிக்கின்றன. கூட்டமாக வசிக்கும் தேனீக்களை 'சோசியல் பீஸ்' (Social bees) என்றும் இதர தேனீக்களை 'சொலிரறி பீஸ்' (Solitary bees) எனவும் அழைப்பர்.


ஒரு தேன் கூட்டில் ராணி, வேலைக்காரர்கள் (பெண்கள்), சோம்பேறிகள் (ஆண்கள்) என்பன போன்ற தேனீக்கள் வசிக்கும். மலர்களிலிருந்து தேன் சேகரித்தல், மலர்களிலிருந்து மகரந்தப் பொடி சேகரித்தல், கூடு கட்டுதல், எதிரிகளிடமிருந்து தேனீக்களை பாதுகாத்தல் போன்றன வேலைக்கார தேனீக்களின் பணிகளாகும்.

சோம்பேறியான ஆண் தேனீ, ராணியுடன் சேருவது மட்டுமே அதன் வேலையாகும். ஆண் தேனீயின் கண் கூர்மையானது. எனினும் ராணி தேனீயின் கண் பார்வை குறைந்தது. தேன் கூட்டில் ராணி தேனீ நடுவில் இருந்து கொண்டு உணவு தேடும். இதற்கு கண் பார்வை குறைவானதால் சில வேளை ஆண் தேனீயையும் பிடித்து சாப்பிட்டுவிடும். எனவே, ஆண் தேனீ அது தன்னை உண்ணாமலிருப்பதற்காக நடனமாடி அதனை மயக்கி இனப்பெருக்கத்தில் ஈடுபடும்.

தேனீக்கள் மழைக்கு முன் தேனை சேர்த்து முடித்துவிடும். தேனீக்கள் ஒரு துளி தேனுக்காக குறைந்தது 100 மலர்களை தேடி செல்கின்றன. கடினமான உஷ்ணம் காரணமாக வதை உருகும் எனப் பயந்தால் தேனீக்கள் வெளியில் ஒன்று சேர்ந்து உஷ்ணத்தை குறைப்பதற்காக விசிறியாய் தொழிற்படும். வதையில் தேனின் நீர்ப்பாகம் அதிகரித்தாலும் இவ்வாறே செய்யும்.

தேனீக்கள் தமது எதிரியை கொத்தும் வரை துரத்தும். ஒரே நேரத்தில் பல தேனீக்கள் கொட்டினால் சில வேளை மரணம் நேரலாம். தேனீயின் உடலின் பிற்பகுதியில் கூர்மையான அம்பு இருக்கிறது. அதனை மனித உடலினுள் செலுத்திவிட்டு மீண்டும் எடுக்காது. ஒரு முறைதான் கொட்டும். அம்பு கழன்றால் தேனீ இறந்துவிடும்.

# விலங்குகளிலே மிக உயரமானது



விலங்குகளில் மிகவும் உயரமானது 'கிறாப்' (Giraffe) என அழைக்கப்படும் ஒட்டகச்சிவிங்கியாகும். இது முற்காலத்தில் 'கெமலோபார்ட்' (Camelopard) என அழைக்கப்பட்டது. ஒட்டகச்சிவிங்கி 'கிறாபிட்' (Graffidae) என்னும் குடும்பத்தை சேர்ந்தது. இதன் விலங்கியற் பெயர் 'கிறாபா கெமலோபார்ட்லிஸ்' (Giraffa Camelopardalis) என்பதாகும். ஆண் விலங்கு 5.3m உயரமுடையது.

ஒட்டகச்சிவிங்கி 40cm நீளமான நாவைக் கொண்டுள்ளதால் மிக உயரமான மரங்களில் இருந்து இலைகளைப் பறித்து சாப்பிடக் கூடியதாகும். அக்கசியா (acacia) மரத்தின் இலைகளே இதன் பிரதான உணவு. இதற்கு தரையிலுள்ள புல்லை மேய்வது சிரமமான செயல். நீர் நிலைகளில் இரு முன்னங்கால்களையும் அகல விரித்து தலையை தாழ்த்தி நீர் அருந்தும்.

ஏனைய முலையூட்டிகளைப் போன்றே ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தும் ஏழு முள்ளந்தண்டென்புகளால் ஆக்கப்பட்டுள்ளது. இந்த என்புகள் யாவும் நீண்ட கழுத்தைத் தாங்கக் கூடியவாறு நீட்சியடைந்துள்ளன. இவ்விலங்கின் இதயத்துக்கும் தலைக்கும் இடையில் உள்ள நீண்ட தூரம் காரணமாக குருதிக் குழாய்களுக்குள் விசேடமாக அமைந்துள்ள வால்வுகள் தலைக்குப் போதிய குருதியைச் செலுத்த உதவுகின்றன.

ஒட்டகச்சிவிங்கியின் உடல் முழுவதும் கலங்கிய வெள்ளைப் பின்னணியில் கபில நிற வடிவங்கள் காணப்படுகின்றன. விலங்கு முதுமையடையும் போது இந்நிறம் கடுமையானதாக மாறும்.

ஒட்கச்சிவிங்கிக்கு கூர்மையான நுகர்ச்சி மற்றும் பார்வை புலன்கள் உண்டு. எனினும் அது விசேட ஒலிகளை எழுப்புவதில்லை. இதனால் 'ஊமை விலங்கு' எனவும் இதனை அழைப்பதுண்டு. இதன் முன்னங் கால்கள் பின்னங்கால்களை விட நீளமானவை. இது மணிக்கு 56 கி.மி. வரையான வேகத்தில் ஓடக்கூடியது. ஒட்டகச்சிவிங்கியின் சராசரி நிறை 800 கி.கி. ஆகும். இவை நீர் அருந்தாமல் ஒரு மாதத்திற்கு மேல் இருக்கும் ஆற்றலுடையது. இவை பெரும்பாலும் சிங்கங்களுக்கே இரையாகின்றன.

ஒட்டகச்சிவிங்கியின் கர்ப்ப காலம் 14-15 மாதங்களாகும். பிறக்கும்போது கன்றின் உயரம் 1.7- 2 மீற்றர் வரையாகும். இவற்றின் வாழ்வுக் காலம் 26 வருடங்களாகும்.

உமாரா பின்தி முஸம்மில்
வடதெனிய

## துணுக்கு

விக்டோரியா ராணிக்கு முடிசூட்டும் போது அவருக்கு 13 வயதுதான்.

திமிங்கிலத்தின் மூளை எடை 10 கிலோ.

யானையின் மூளையின் எடை 6 கிலோ.

தேவாங்கு, சாப்பிடும் பொருளை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்த பின்னர்தான் சாப்பிடும்.

முயல் நீர்ச்சத்து நிறைந்த புல், முட்டைக்கோஸ், கரட், முள்ளங்கிக் கீரை ஆகியவற்றை சாப்பிடுவதால் தண்ணீரே அருந்துவதில்லை.

இறப்பரை பதப்படுத்த உதவும் அமிலம் போர்மிக் அமிலம்.

எலுமிச்சை, ஆரஞ்சு போன்றவற்றில் அடங்கியுள்ள அமிலம் சிட்ரிக் அமிலம்.

வினிகரில் அடங்கியிருக்கும் அமிலம் அசிட்டிக் அமிலம்.

ஸ்ட்ராபெர்ரி, நெல்லிக்காய் போன்றவற்றில் உள்ள அமிலம் அல்கோர்பிக் அமிலம்.

திராட்சை, புளி போன்றவற்றில் அடங்கியுள்ள அமிலம் டார்டாரிக் அமிலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரைப் பிச்சைக்காரர்

சமீலா யூசுப் அலி



அந்தப் பிச்சைக்காரன் குடித்துத் தீர்ப்பவன். கொடுக்காதே என்று சொன்னாலும் பத்து ரூபாயாவது கொடுக்காமல் வந்தால் மனசு வலிக்கிறது. திரும்பிப் போய் கொடுத்துவிட்டு வரும்போது உள்ளே நிம்மதி பரவுகிறது.

ஏமாற்றுபவர்கள் இருக்கிற வரை ஏமாளிகளும் இருக்கத்தான் செய்வார்கள் என்று சொல்கிறார்கள்.

குதிரையில் வந்து இரங்கினாலும் கொடுக்கச் சொல்லியிருக்கும் மாநபி, அதை கொடுப்பவர்களின் சிந்தனைக்காகச் சொல்லி இருக்கிறார்.

யாசகம் கேட்டு வந்தவருக்கு இரங்கி வாழாமல் உழைத்து வாழச் சொன்ன சரிதை, வாங்கியே வாழ்பவருக்கான அறிவுரை இப்போதெல்லாம் மாறி நடக்கிறது.

பிச்சை கேட்பவர் குதிரைக் கதையையும் கொடுக்க மனசில்லாதவர் உழைத்து வாழும் கதையையும் மாறி மாறி சொல்லிக் கொள்கிறார்கள்.

# நீங்கள் உணர்திறன் மிக்கவரா?

பரூரீ

நீங்கள் வாழ்க்கையில் சந்திக்கப்போகும் உண்மையானதும் நேர்மையானதுமான மக்கள், உணர்திறன் (Sensitive) மிக்க மனிதர்கள்தான். அவர்களது கருணையில் நீங்கள் நம்பிக்கை வைத்தால் அவர்கள் உங்களிடம் தங்களைப் பற்றி சொல்லாத விடயமே இருக்காது. எனினும், நீங்கள் அவர்களை ஏமாற்றும்போது, குறைத்து மதிப்பிடும் வேளை அல்லது அவர்களை புறக்கணிக்கும் அந்தக் கணத்தில் அவர்கள் உங்களுடனான நட்பை முறித்துக் கொள்வார்கள். தீர்க்க முடியாத நிலைமைகள் மற்றும் தப்பெண்ணங்கள் தொடர்பில் தொடர்ந்தேர்ச்சியான குற்ற உணர்வும் வலியும் அவர்களுக்கு இருக்கும். மற்றவர்கள் மீது வெறுப்புகளோடோ அல்லது தங்கள் மீதான மற்றவர்களின் வெறுப்புகளோடோ வாழ முடியாத துன்பியல் ஆன்மாக்கள் இவர்கள். இவர்கள்தான் யாரேனும் செலுத்த முடிந்த அதிகூடிய அன்புக்கு தகுதியுடையவர்கள். ஏனெனில் அவர்களது ஆன்மா மற்றவர்களால் தொடர்ச்சியாக காயப்பட்டே வந்திருக்கும். தங்களது சொந்த வாழ்வில் சோகங்களையே சந்தித்திருந்தாலும் அவர்கள், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பெறுமதியான கருணையாளர்களாக இருப்பார்கள். அவர்கள் உள்ளம் உடைந்தவர் மறக்கப்பட்டவர்களின் குரலாக இருப்பார்கள்.

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# நன்மை செய்வது வேறு நன்மையை நாடுவது வேறு

உதாரணம்; நீங்கள் ஒருவருக்கு உதவி செய்கிறீர்கள் ஏனென்றால், உள்ளுக்குள் அவரால் உங்களுக்கு ஆக வேண்டியிருக்கும் காரியம் ஒன்று இருக்கிறது. இது நன்மையை நாடாமல் நன்மையான காரியம் செய்வது.

இன்னொருவருக்கு உதவி செய்கிறீர்கள்; அவர் மீது உங்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இங்கு நன்மையை நாடி நன்மை செய்கிறீர்கள்.




மூன்றாது, ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என நினைக்கிறீகள். ஆனால், ஏதோ காரணத்தினால் உங்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. இங்கு நன்மையை நாடுகிறீர்கள். ஆனால் நன்மை செய்யவில்லை.

செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தவை.

– சமீலா யூசுப் அலி –




# குழந்தைக்கு வாந்தி...



சாப்பிட்ட உணவு வயிற்றுக்குள் இருந்து வாய் வழியாக வெளிவருவதுதான் வாந்தி. பல காரணங்களால் வாந்தி வரும். அவற்றில் சில உயிருக்கே ஆபத்து ஏற்படுத்தக் கூடியவை.

**காரணங்கள்**

**அண்மையில் பிறந்த குழந்தைகள்**

குடல் இடம் மாற்றம், இரத்தத்தில் நோய்க் கிருமிகள், மூளைக் காய்ச்சல், மூச்சுத் திணறல், மூளையின் நீர் அதிகமாதல், தவறான முறையில் பால் புகட்டுதல்.

**ஒரு வயதுக்கு கீழுள்ள குழந்தைகள்**

தவறான முறையில் பால் புகட்டுதல், அதிகம் பால் கொடுத்தல், பிறப்பிலேயே குடல் வீங்கி அடைத்துக் கொள்ளுதல், பேதி, மூளையில் கிருமிகள் தாக்கம், மூளையில் இரத்தக்கட்டு, மூளையில் நீர் அதிகமாதல், மாட்டுப் பால் அலர்ஜி.

**சிறுவர்கள்**

மனோநிலை பாதிப்பு, சிறுநீரில் கிருமி, மஞ்சள் காமாலை, நீரிழிவு நோய், நிமோனியா காய்ச்சல், குடல் அடைப்பு, மூளையில் ஏற்படும் இரத்தக் கட்டி, மூளைப் புற்றுநோய்.

**சிகிச்சை**


குழந்தைகள் சாதாரணமாகவே சிறு காரணங்களுக்காக வாந்தி எடுப்பார்கள். சில குழந்தைகள் வாந்தி எடுத்தாலும் அவற்றின் உடல் எடை மற்றும் செயற்பாடுகள் நன்றாக இருக்கும். அத்தகைய குழந்தைகளுக்குச் சிகிச்சை தேவையில்லை.

அடிக்கடி வாந்தியோ, தொடர் வாந்தியோ இருந்தால் அவற்றுடன் வேறு நோய்கள் ஏதாவது இருந்தாலும் குழந்தையை உடனே மருத்துவரிடம் அழைத்துச் சென்று பரிசோதனை செய்து சரியான சிகிச்சை அளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பெற்றோர் தாமாகவே சிகிச்சை அளிக்கவோ, வீட்டில் இருக்கும் மருந்துகளைக் கொடுக்கவோ கூடாது. அதனால், குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும்.

**இருதய நோய்**

இருதயத்தில் ஏற்படும் நோயை குழந்தைகளுக்கு ஏற்படுவது, பெரியவர்களுக்கு ஏற்படுவது, முதியவர்களுக்கு ஏற்படுவது என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இந்த மூன்று பேருக்குமே வரக்கூடிய இருதய நோயை பிறவியிலேயே ஏற்படுவது, பிற்காலத்தில் ஏற்படும் நோய் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். குழந்தைகளுக்கு, பெரும்பாலும் பிறவிக் குறைபாடு காரணமாக இருதயக் கோளாறுகள் ஏற்படுகின்றன. பிற்காலத்தில் ஏற்படக்கூடிய இருதய நோய்களும் குழந்தைகளுக்கு ஏற்படலாம். பிற்காலத்தில் பெரியவர்களுக்கும் வால்வு, இரத்தக் குழாய் அடைப்பு போன்ற பிரச்சினைகள் வரலாம்.

முதியவர்களுக்கும் 99 சதவீதம் இரத்தக் குழாயில் கொழுப்புப் படிவதால், பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இருதயத்தில் ஏற்படக்கூடிய பிரசினையை இரத்தக் குழாயில் வரக்கூடிய நோய், வால்வில் வரக்கூடிய நோய், இருதயத் தசையில் வரக்கூடிய நோய் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இருதயத்தில் எத்தனையோ பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இருதயத் தசைக்குச் செல்லும் இரத்தக் குழாய் அடைப்பு மூலம் உயிரிழப்பு ஏற்படுவதுதான் மிகவும் அதிகளவில் உள்ளன. இருதய நோய்களுக்கு என்னதான் பல்வேறு சிகிச்சைகள் இருந்தாலும் அவை வராமல் தவிர்ப்பதுதான் மிகவும் முக்கியமானது.




# பாரிசவாதம் என்றால் என்ன?

பாரிசவாதம் உடனடியாக நிவாரணம் பெற வேண்டிய அவசர நோய் நிலையாகும். இது மூளையின் ஒரு பகுதியில் இரத்த ஓட்டம் தடைப்படுவதால் ஏற்படுகிறது. இதனால் மூளைக்குத் தேவையான ஒட்சிசன் தடைப்பட்டு மூளை பாதிப்படைகிறது.

பாரிசவாதம் இறப்பிற்கு இரண்டாவது அங்கவீனத்திற்கு முதன்மைக் காரணியாகவும் விளங்குகின்றது.

**பாரிசவாதத்தின் வகைகள்**

1. இரத்தோட்டம் தடையால் ஏற்படும் பாரிசவாதம்

2. இரத்தக் கசிவால் ஏற்படும் பாரிச வாதம்

**பாரிசவாதத்திற்கான காரணிகள்**

- உயர் குருதியமுத்தம்
- உயர் கொலஸ்ட்ரோல் மட்டம்
- நீரிழிவு
- ஒழுங்கற்ற இதயத் துடிப்பு
- அதீத உடற்பருமன்
- உடற் பயிற்சியின்மை
- அதீத மதுப் பாவனை
- ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம்

**பாரிசவாதம் ஏற்படுவதற்கான அறிகுறிகள்**

- திடீர் தீவிர தலைவலி.
- திடீரென ஏற்படும் பார்வைக் குறைபாடு அல்லது மாற்றம்.
- திடீரென ஏற்படும் விழுங்க முடியாத நிலை.
- திடீர் கை, கால் மற்றும் முக விறைப்பு அல்லது பலம் குறைவு.
- திடீரென ஏற்படும் நடக்க கடினமாதல்,
- தலைச்சுற்று மற்றும் சமநிலை பிறழ்வு.

**பாரிசவாதத்தின் விளைவுகள்**

சில பாரிசவாதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை. மேலும் சில தற்காலிகமாக அல்லது நிரந்தரமான அங்கவீனத்தை ஏற்படுத்தும். மூளையின் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்து பாரிசவாத்தின் விளைவுகள் வேறுபடும். ஒரு பக்கம் கை, கால் செயலிழப்பதும் பேச முடியாது போவதும் மிகப் பொதுவான பாரிசவாத்தின் விளைவுகளாகும்.

**ஆபத்து மட்டத்தை குறைப்பதற்கு**

ஆபத்து மட்டத்தை அதிகரிக்கும் காரணிகளை அடையாளம் காண வேண்டும்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை முக்கியமானது.

புகைத்தலை நிறுத்தல், மது அருந்து வதை நிறுத்தல், தொடர்ந்தும் உடற்பயிற்சி செய்தல் மற்றும் ஆரோக்கியமான உணவை உண்ணல்.

குருதியமுத்தம், குருதிச் சீனி மட்டம், கொலஸ்ட்ரோல் மற்றும் உடல் எடையை கருத்திற் கொண்டு காலத்திற்கு காலம் அளந்து கொள்ளல். வைத்தியரின் உதவியுடன் இவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல்.

வைத்தியரின் ஆலோசனைப்படி குருதி உறைதலைத் தடுக்கும் மருந்து, குருதி அழுத்தத்தைக் குறைக்கும் மருந்து மற்றும் நீரிழிவை கட்டுப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ளல்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக பாரிசவாத நோயின் ஆபத்திலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.

தொகுப்பு: வினாசர் ராஜா (இஸ்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியை...

முன் பக்கத் தொடர்

மற்றும் ஊழல் ஒழிப்பு போன்ற பல விடயங்களுக்கும் அத்தியாவசியமான ஒரு விடயமாக தகவலறியும் உரிமைச் சட்டம் காணப்படுகிறது. அதாவது எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு முக்கியமான தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற நிலையில், இது மக்களுக்கு வாக்குறுதியளிக்க வேண்டிய முக்கியமான விடயமாகும்.

ஒரு வித்தியாசமான ஆளுமையுள்ள நண்பர் வித்தியாதரன். அவர் திறமையான மூத்த ஊடகவியலாளர் என்பதற்கு சான்று பகர வேண்டிய அவசியமில்லை. பல விடயங்களை இரகசியமாக முன் கூட்டியே அறிந்து கொள்ளும் ஊடகவியலாளர் ஒருவர் என்ற அடிப்படையில், மிக நேர்மையாக தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவை பேணிக்கொள்ள வேண்டும் என்பதில் அவர் அக்கறை காட்டியவர். இதன் காரணமாக என்னோடு அவ்வப்போது சில அம்சங்களைப் பகிர்ந்து கொண்டார் என்பதை நான் நன்றியோடு நினைவுகூற வேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, நாங்கள் சம்மாந்துறையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரசாரங்களை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டு தேர்தலுக்கு இரண்டு நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில் நண்பர் வித்தியாதரனிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. வடக்கிலிருந்து வரும் வாக்காளர்களுக்கு கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு பயணிப்பதற்கு வசதியாக இருநூறு பஸ் வண்டிகள் ஏற்பாடு செய்திருக்கத்தக்கதாக, அவர்கள் புலிகளால் தடுக்கப்பட்டிருப்பதால் அவ்வாறு வாக்களிக்க வருவது சாத்தியமில்லை என்ற செய்தி எட்டியது. உடனடியாக நான் மலிக் சமரவிக்கிரம ஊடாக நிலைமையை ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்து விளக்கினேன். இறுதியில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அரசியல் மாற்றத்தை கொண்டு வரலாமென்பதில், மிகப் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்திய அந்த சம்பவம் இப்போது எனது நினைவிற்கு வருகிறது என்றார்.

# இந்த நாட்டில்...

முன் பக்கத் தொடர்

கூட்டம் கொழும்பு முத்தையா மைதானத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க, ஜே.வி.பி. லால் காந்த, மாதுலுவாவே தேரர் உட்பட பல அரசியல் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த நாட்டில் மஹிந்தவின் சகோதரர்கள் சூது சட்டத்தை இரவோடு இரவாக, களவாக வர்த்தமானியில் அறிவித்து பாராளுமன்றத்திலும் சட்டமாக்கினார்கள். இந்த ஆண்டு மட்டும் மதுபானச் சாலைகளுக்கு 120 லைசென்ஸ் வழங்கியுள்ளனர். எத்தினோல் காரர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களை வளர்த்து வருகின்றார்கள். சீனாவிற்கு இந்த நாட்டை தாரைவாத்துக் கொடுத்துள்ளனர். நுரைச்சோலை மின் திட்டத்தினால் பல கோடி ரூபா பணத்தை வீண் விரயம் செய்துள்ளனர். எவ்வித ரெண்டரும் இல்லாமல் அதில் 30 வீத கொமிஷனை பெற்றுக் கொண்டனர்.

மஹிந்த ராஜபக்ஷதான் இந்த நாட்டின் யுத்தத்தை வென்றதாகச் சொல்லுகின்றார்கள். இந்த யுத்தத்தை வென்றெடுக்க பாடுபட்டவர்கள் என்ற ரீதியில் சிஹல உறுமய தான் இந்த வெற்றிக்கு உரிமைக் காரர்கள்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவின் வெற்றிக்காக அவர் லொத்தர் பட்ஜட் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த பட்ஜட் அவரின் வெற்றிக்காக அமைத்துக் கொண்டது. அதன் பின்னர் இந்த நாடு பொருளாதாரத்தில், கடன்களில் சின்னாபின்னமாகும். ஆகவே இந்த மஹிந்த ராஜபக்ஷவை நாம் எல்லோரும், ஒரே அணியில் நின்று நாடு பூராகவும் மக்களை ஒன்று திரட்டி அவரைத் தோற்கடிப்போம் என அத்துரலிய ரத்ன தேரர் அறைகூவல் விடுத்தார்.

# பெரும்பான்மைக்கு...

முன் பக்கத் தொடர்

இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை தடுக்க, அதற்காக குரல் கொடுக்கவே இவரை அரசியலில் களமிறக்கினோம்.

ஜனாதிபதி குடும்ப அரசியல் பற்றி அனைவரும் பேசுகின்றனர். ஜனாதிபதி தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்டது முதல் மிருகங்களைப் போன்று அங்குமிங்கும் ஓடித் திரிகின்றார்கள்.நாம் ஒன்றை மட்டுமே கேட்கின்றோம். பௌத்த அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டமைந்த அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

இந்தக் காலத்தில் எம்மையும் பணம் கொடுத்து மடக்கப் பார்க்கின்றார்கள். இந்த நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எமக்கு சிறந்த மக்கள் சக்தி காணப்படுகின்றது. தேர்தல்களின்போது மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என கருதுகின்றோம் என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி...

முன் பக்கத் தொடர்

எவ்வாறு வளர்ச்சியடைய வேண்டும் என்பது பற்றியும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இது அரசியல் சதுரங்கம் விளையாடுகின்ற காலமாக இருக்கின்றது. அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகின்ற வகையில், அந்தத் தேர்தலுக்கு முன்பாக அரசியல் சதுரங்கப் பலகை தயாராகிவிட்டது. சிறுபான்மை மக்கள் இந்தச் சதுரங்கத்தில் விளையாடுகின்றவர்களாக இருந்துவிடக் கூடாது. அதேநேரம், வெட்டப்படுகின்ற சதுரங்கக் காய்களாகவும் அகப்பட்டுவிடக் கூடாது.

அந்த வகையில், இப்போது ஆடப்படுகின்ற அரசியல் சதுரங்கத்தில் சிறுபான்மையினர் விளையாடுகின்றவர்களாகவும் இருக்க முடியாது. எந்த நேரத்திலும் வெட்டப்படுகின்ற காய்களாகவும் சிறுபான்மைச் சமூகங்கள் இருந்துவிடக் கூடாது. ஆனால், கட்டாயம் சதுரங்கம் விளையாடத் தெரிந்த பார்வையாளர்களாக இருக்க வேண்டும்.

ஏனெனில், பார்வையாளர்களுக்குத் தான் சதுரங்கத்தில் எந்தத் தரப்பு பிழை விடுகின்றது என்பது தெரிந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. அதே போன்று, அவர்கள் செய்கின்ற நல்லது, கெட்டது எல்லாமே தெரிந்திருக்கும். சிறுபான்மைச் சமூகங்களின் மீது அக்கறை கொண்டு அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்ற பிரதிநிதி என்கின்ற வகையில் நான் இந்த சிறுபான்மைச் சமூகங்களுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

# அரசியல்...

(05 ஆம் பக்கத் தொடர்)



ராஜபக்ஷ கூட்டணியினால் தூர நோக்குடன் முன்னெடுத்த வேலைத்திட்டம் ஒன்றுக்காகக் கொடுக்கப்பட்டது. அதன் இறுதி பெறுபேறாக அதுவரை ஹெல உறுமயவிடமிருந்த சிங்கள, பௌத்த வாக்கு நீரோட்டம் வேறு திசைக்குப் பாய்ச்சப் பட்டது. இனி வரும் காலங்களில் வீரவன்சாக்களுக்கு தேசியத்துவத்தைத் தூக்கி பிடிக்க முடியுமா என்பது சந்தேகமானது. இதில் வீரவன்ச எதிர்த் தாக்குதல் செய்வது உடல் நலத்துக்குக் கேடாகலாம் என்ற கொள்கையில் இருக்கும்போது ஹெல உறுமய நோண்டிப் பார்க்கும் வேலையை செய்கின்றது. நேர்மையாக போராட்டத்தில் குதிக்குமாறு நாம் இவர்களுக்குக் கூறுகின்றோம். ஏனென்றால் மஹிந்த ராஜபக்ஷ கூட்டணியின் அதிகார நோக்கங்கள் எங்கு போய் நிற்கும் என்பதை இந்த உலக மகா மேதாவிகளுக்கு முன்னால் பெரும்பான்மையான சாதாரண மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷ கூட்டணி, தான் வெட்டும் குழியில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கழியும் ஒவ்வொரு பொழுதும் இதனை கூறிக் கொண்டிருக்கின்றது. அது நிச்சயமாக மூழ்கிப் போவதைக் கண்டவுடன் அக்கரையிலிருந்து இக்கரைக்கு குதிப்பவர்களை சீனப் பெருஞ்சுவரினால் கூட தடுக்க முடியாது போய்விடும்.

இந்நிலையில், இன்று நாட்டுக்குத் தேவைப்படுவது நிஜ மாற்றத்துக்காக நேர்மையுடன் அர்ப்பணமாகும் மக்கள் இயக்கமாகும். இனவாதம், சமயவாதம் ஊடாக தமது தனிப்பட்ட தேவைகளை தேசத்தின், இனத்தின் பெயரால் விற்பனை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தைத் தேடும் ஏமாற்றுப் பேர்வழிகள் அல்ல. ராஜபக்ஷ கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் இருக்கும் முக்கியத்துவம் போன்று அதற்கு மாற்றீடாக ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு முடி சூட்டுவதும் பயங்கரமானது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை அரங்கேற்றும் இந்நேரத்தில் கூட தமக்கு முன்னால் இருக்கும் சந்தர்ப்பத்தை வெறும் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்துவதைப் பற்றி யோசிக்கும் அரசியல்வாதிகளைத்தான் இன்னும் காணுகின்றோம். உறுதியான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்குத் தோள்கொடுப்பதை விட்டுவிட்டு, எதிரணியின் பிரதான கட்சியான ஐ.தே.க. முதல் அனைவரும் கப்பப் பொதிகளுக்காக தோள்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது தெரிகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறை எனும் எட்டுக்கால் பிராணியின் பாதகத்தை, அரச ஊடக இயந்திரத்தினால் மூடி மறைக்கப்பட்டுள்ள சாதாரண மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு எந்தவொரு வேலைத்திட்டமும் இன்று வரை முன் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் அரசியல் பேச்சு என்பது தலைநகரில் ஊடக மாநாட்டு மேசையைத் தாண்டவில்லை. இந்நிலையில் எமக்கு ரத்ன தேரர் போன்றோரின் எதிர்ப்பு எந்நொடியிலாவது கரைந்துபோய் மீண்டும் ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்துவதில் முடிவடையும் விளையாட்டாகத் தோன்றுகின்றது. குறிப்பாக, சோபித தேரர் பக்கம் திரும்பக் கூடிய பௌத்தர்களை திசை திருப்புவதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயார்படுத்தப்பட மாட்டாது என யாருக்காவது உறுதி கூற முடியுமா?

இவ்வாறான நிலைமையொன்றில் பொதுமக்களும் புத்திஜீவிகளும் முன்னணிக்கு வர வேண்டும். அரசியல்வாதிகள் மக்களை விட பின்னால் நின்று பிரச்சினைகளை பார்க்கும்போது அரசியல் துறையில் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு பலமுள்ள மக்கள் இயக்கமொன்று நாட்டுக்குத் தேவை. நீண்ட காலமாக செயலிழக்கச் செய்யப்பட்டுள்ள சிவில் சமூகத்தை மீண்டும் வலுவூட்டுவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான தேவையாகும். நாம் அதற்காக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்கக் கூடிய பொதுமக்கள் இயக்கமொன்றை தற்போது உருவாக்க முடியுமாக இருந்தால், எதிர்காலத்தில் மக்களுக்கு வெற்றி கிடைக்கக் கூடிய அரசியல் மாற்றமொன்றை நோக்கி அரசியல்வாதிகளை நகர்த்த முடியும்.

# தமிழர்களின்...

முன் பக்கத் தொடர்

உட்பட்ட விடயங்களில் உறுதியை வழங்கக் கூடிய பொது வேட்பாளர் ஒருவருக்கே கூட்டமைப்பு ஆதரவளிக்கும்.

அந்த வேட்பாளர் சந்திரிகாவாக, ரணில் விக்கிரமசிங்கவாக அல்லது கரு ஜெயசூரியவாக இருக்கலாம். எவரானாலும் தமிழ் மக்களுக்கு இந்த உறுதிமொழியை வழங்க வேண்டும் என்றும் சுரேஸ் பிரேம சந்திரன் தெரிவித்தார்.

# தமிழகத்தில்...

முன் பக்கத் தொடர்

மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2014 பெப்ரவரி மாத தகவலின்படி 113 முகாம்களில் 65,570 அகதிகள் தமிழகத்தில் தங்கியுள்ளதாவும் பொலிஸ் பதிவுகளின் பின்னர் 34,788 பேர் முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளதாகவும் இந்திய ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அதிகாரப் பகிர்வு...

முன் பக்கத் தொடர்

இறுதியில் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் சேனாரத்ன இவ்வாறு கூறினார்.

வடக்கு மீனவ கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கென்று 1800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய ரீதியிலான வடக்கின் மீன் உற்பத்தியை 50 சதவீதமாக உயர்த்துவதே எமது எதிர்பார்ப்பாகும். அது மட்டுமல்லாது, யுத்தம் காரணமாக 3 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்த கிழக்கின் மீன் உற்பத்தியானது 23 சதவீதமாக உயர்வடைந்திருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின்...

முன் பக்கத் தொடர்

எனவே, அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டமானது மக்களுக்கு பிரயோசனம் அளிக்கவில்லை என்பதே உண்மையாகும் என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். அவர் எங்கள் தேசத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

## அமீனிய்யா அரபுக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

நிகவரெட்டிய அமீனிய்யா அரபுக் கல்லூரிக்கு 2015 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை டிசம்பர் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும் எனவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீரியபெத்த...

(09 ஆம் பக்கத் தொடர்)



மண்சரிவு அபாயமற்ற காணிப்பகுதி அடையாளம் காட்டப்பட்டவுடன் அந்தக் காணி குடியிருப்புக்கு ஏற்றதாக இருக்குமானால் உடனடியாக 57 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் மறுநாள் பாராளுமன்றத்தில் வைத்து ஏனைய விவரங்களைச் செய்வதாகவும் மட்டுமே ஆறுமுகன் தெரிவித்தார்.

இ.தொ.கா. தன்னால் என்னென்ன செய்ய முடியும் என்பதைத் தெரிவித்து விட்டது. பூணாகலை, அம்பட்டிக் கந்த பகுதியில் தனித்தனி மாடி வீடுகள் அமைத்துத் தரப்படும் என்று இப்போது இ.தொ.கா. அறிவித்துள்ளது. இவ்விடயத்தில் இ.தொ.கா. யாருக்கும் விட்டுக் கொடுக்காது என்பதைப் புரிந்து கொண்ட ம.ம.மு., மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் திகாம்பரம் ஆகியோர் அடிப்படையான உதவிகளைச் செய்வதோடு நிறுத்திக் கொண்டார்கள். அப்படிச் செய்வோம் இப்படிச் செய்வோம் என்று வாய்ச் சவால் விட முன் வரவில்லை. இது இ.தொ.கா.வின் ஏரியா என அறிவித்து விட்டுக் கொடுத்து விட்டன. ஆனால், தேர்தல் காலத்தில் இந்த மனித அவலத்தில் அரசியல் கட்சிகள் பயன் பெற முனைவது இயற்கைதான். ஆனால் அந்த ஆதாயம் ஆக்கபூர்வமானதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும். வாய்ச் சவால் அம்மக்களுக்கு எதையும் தரப் போவதில்லையே!

சக்தி-சிரச ஊடாக மக்களும் நிறுவனங்களும் அளித்த பொருட்களை உவகையுடன் பெற்றுக் கொண்ட பாதிக்கப்பட்ட மக்கள் ரங்காவுக்கு அல்லவா நன்றி கூறினார்கள்? மக்களுக்கு நன்றி, சக்தி டி.வி. க்கு நன்றி என்று கூறினால் அது பொருத்தமாக இருக்கும். லொறிகளுடன் வந்து நின்று, தான் வந்த மாதிரி பெயர் போட்டுக் கொள்வது நாகரீகமாகுமா? உண்மையைச் சொல்வதானால் ஏனையோர் கருணையுடன் அளித்த பொருட்களுடன் அவர் அங்கே சென்றிருக்கக் கூடாது. இனியாவது அதைப் புரிந்து கொண்டால் சரி.

எனினும், ரங்கா சொன்ன மாதிரி மலையகக் க்ட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இப்போது வாய்த்திருக்கிறது. மலையக வீடமைப்புத் திட்டம் என்ற அடிப்படையில் இக்கட்சிகள் இணைந்து குரல் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

மலையக வீடமைப்பு என்பது அநேகமாக 1993 ஆம் ஆண்டு கருக் கொண்டிருக்க வேண்டும். அது ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதி. மூர்த்தி தொண்டமான், லயன்கள் அங்கே வசிப்பவர்களுக்கே உரிமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்ததையடுத்து, அன்றைய அரசாங்கம் அதை ஒப்புக் கொண்டது. சந்திரிகா 1994 இல் பதவிக்கு வந்த பின்னர் தோட்டங்களில் ஏழு பேர்ச்சஸ் காணியில் தனி வீடுகள் அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் கடந்த இருபது வருடங்களில் 50 ஆயிரம் வீடுகள் கூட அமைக்கப்படவில்லை. இந்த வேகத்தில் போனால், இன்னும் ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் கூட லயன் வாழ்க்கை முறைக்கு முடிவு கட்ட முடியாது என்பது தெரிந்த விஷயம்.


எனவே, விசேஷ நிதி ஒதுக்கீட்டின் கீழ், மலையக பெருந்தோட்ட வீடமைப்பு அதிகார சபை என்ற ஒரு சுயமாக செயற்படும் அதிகாரம் கொண்ட சபையை உருவாக்குவது அவசியம் என்பது, மீரியபெத்த அனர்த்தம் உணர்த்தி நிற்கிறது என்பதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி ஒரு அதிகார சபையை நிறுவ எந்தக் கட்சி அல்லது ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கிறாரோ அவருக்கு எமது ஒட்டுமொத்த ஆதரவு என்று ஒன்றிணைந்து மலையகக் கட்சிகள் அறிவிக்கவும் வேண்டும்.

தனிப்பட்ட ரீதியாக இப்படி அறிவிப்பதில் கட்சிகளுக்கு சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் இம்மலையகக் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் வாழ்வளித்து வரும் பெருந்தோட்ட சமூகத்தின் தலையான வீடு, காணி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவே நல்ல தருணம். இந்த தருணத்தை பயன்படுத்திக் கொள்வதே மண் மூடி மறைந்த அந்த அப்பாவி மனிதர்களுக்கு செய்யப்படும் சரியான அஞ்சலியாக அமையும்.

மலையக வீடமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்தவும் காணி உரிமையை இம்மக்களுக்கு பெற்றுத் தரவும் இதுவே சரியான சந்தர்ப்பம். இதுவரை பார்த்ததில் ரங்காவைத் தவிர வேறு எந்தக் கட்சியும் தலைவர்களும் வார்த்தை ஜாலம் காட்டவில்லை. வட மாகாண முதல்வர் மக்களுக்கு காணியும் மாணவர்களுக்குக் கல்வியும் பெற்றுத் தரத் தயார் என்று விடுத்த அறிவிப்பு இ.தொ.கா. அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் எரிச்சலைத் தூண்டி விட்டதைப் பார்த்தோம். இவர்கள் எங்கள் மக்கள். வடக்கில் குடியேறி இருக்கும் மலையக மக்களுக்கு முதலில் காணி வழங்குங்கள். இவர்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். என்று சூடாக பதில் சொல்லி இருக்கிறார்.

இதில் இருக்கக் கூடிய அரசியலை அப்புறப்படுத்தி விட்டுப் பார்த்தால் 'நாங்கள் செய்து முடிப்போம்' என்ற துணிச்சலையும் சவாலையும் காண முடிகிறது. இந்த வைராக்கியம் தேர்தல் கால வைராக்கியமாக இருக்கக் கூடாது. எனவே, இ.தொ.கா.வினால் மட்டுமே என்ற நிலைப்பாட்டைத் தளர்த்தி காணி-வீடமைப்பு விடயத்தில் கூட்டாக செயற்பட இ.தொ.கா. முன்வர வேண்டும். ஏனெனில் பேரினவாதிகளுடன் மோத வேண்டிய விஷயம் இது!

## குளித்துக்...



(07 ஆம் பக்கத் தொடர்)

திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருக்கின்றார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதியை ஒழித்து பாராளுமன்ற முறையை கொண்டு வருவதாக எந்த வாக்குறுதியையும் அவர் இதுவரை அறிவிக்கவில்லை.

முஸ்லிம் மக்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக எதிர்கொள்ள வேண்டி வந்துள்ள அச்சுறுத்தல் நிலை குறித்தும் ரணில் இதுவரை காத்திரமான எக்கருத்தையும் வெளியிடவில்லை. அவர் பிரதமராக இருந்த இரண்டு வருட காலத்தில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் விடயத்தில் மிக மோசமாக நடந்து கொண்ட போதும் அவையெல்லாம் சின்ன விஷயம் என்றும் புலிகளுடனான சமாதானம் அதனை விட முக்கியம் என்றும் அவர் கூறியதும் இன்னும் மறந்து போகவில்லை. முஸ்லிம்கள் என்றும் யூ.எம்.பி க்கு வாக்களிப்பது கடமை என்று அவர் நினைத்திருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. தனது ஆட்சியில் முஸ்லிம்கள் சுதந்திரமாக வாழலாம் என்ற உத்தரவாதம் கூட இல்லை. இந்நிலையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மாற்றத்தைக் கொண்டு வருமா என்று யோசிப்பது சுத்த 'வேஸ்ட்' போலத்தான் தெரிகிறது.

# மனித வளத்தை முறையாகப் பயன்படுத்துவோம்!

அபூபக்கர் நளீம் MA (Sociology), M.Ed
வருகை தரு விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மனித வளம் மிக முக்கியமான ஒரு வளமாகும். சமூகம், அமைப்பு, நிறுவனம் என்று நோக்கும்போது மனித வளத்தை அடிப்படையாகக் கொண்டே ஏனைய அம்சங்கள் திட்டமிடப்படுகின்றன. சமூக இயங்கு தளத்தில் முதன்மையான ஒரு வளமாகவும் மனித வளம் நோக்கப்படுகிறது.

தலைவர் அல்லது முகாமையாளர் மனித வளங்களை சரியான விதத்தில் முகாமை செய்யும்போதே இலக்கை சரியாக அடைந்து கொள்ள முடியும். மனித வளங்களை முகாமை செய்வது கடினமான ஒரு விடயமாக இருப்பதால் அதில் முக்கிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

பௌதிக வளங்களின் நடத்தை சிக்கலானதன்று. பௌதிக வளங்களின் தவறுகளை இலகுவாக கண்டு கொள்ளவும் நிவர்த்தி செய்யவும் முடியும். ஆனால் மனித வளங்கள் அவ்வாறன்று. மனித வளங்களை பயிற்சியளித்து அவற்றின் திறன், ஆற்றலை விருத்தி செய்யவும் ஊக்குவிக்கவும் முடியும். எனவே, மனித வளங்களை முகாமை செய்வது கடினமானதொன்றாகும். (ந.தேவராஜன் ஜெயராமன் 2000)

ஊழியர்களைக் கொண்டு கருமங்களைச் செய்விப்பது தொடர்பான ஒரு கலை முகாமைத்துவமாகும் எனும் MARY PARKER FOLLET என்பவரின் கருத்துக்கு ஏற்ப மனித வளத்தை மிக நுணுக்கமாக முகாமை செய்ய வேண்டும்.

அமைப்பில் அல்லது நிறுவனத்திலுள்ளவர்களின் திறன்களை அறிந்து அதற்கேற்ற வகையில் பொறுப்புக்களை வழங்க வேண்டும். இதில் பக்கச்சார்பு தவிர்க்கப்பட வேண்டும். தகைமை, ஆற்றல்களை விடுத்து அரசியல், பால்நிலை , அந்தஸ்து, உறவு நிலைத் தொடர்புகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பொறுப்புக்களையும் பதவிகளையும் வழங்குவது வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பனவற்றை குன்றச் செய்யும். பொருத்தமான ஒருவர் இருக்க அவரை விடுத்து பொருத்தமற்ற ஒருவருக்கு அப்பணியை ஒப்படைக்கும்போது சரியான இலக்கை அடைய முடியாமல் போகலாம்.

இன்று சமூகத்தில் பல அமைப்புக்களிலும் நிறுவனங்களிலும் அதனை வழிநடத்தும் தலைவர்களால், பல்வேறு காரணங்களினால் பொருத்தமான தகுதி உடையவர்களைத் தவிர்த்து தகுதியற்றவர்களை நியமிக்கும் அவலம் தொடர்கிறது.

ஒரு பாடசாலையை உதராணமாகக் கொண்டால், புவியியல் பாடத்தில் சிறப்புப் பட்டம் முடித்து கற்பித்தலில் தேர்ச்சி பெற்ற ஓர் ஆசிரியர் இருக்க அவரை விடுத்து உயர் தரத்தில் புவியியலை ஒரு பாடமாகக் கற்ற ஓர் ஆசிரியரை மாணவர்களின் நலனை கருத்திற் கொள்ளாது வேறு சில சுயநலக் காரணங்களுக்காக உயர்தர மாணவர்களுக்கு புவியியல் பாடம் கற்பிக்க நியமிக்கும்போது அதிபர் இரு ஆசிரிய வளங்களை வீணாக்கியதோடு மாணவ வளத்தையும் சீராக வழிநடத்தாதவராக மாறுகிறார்.

நிறுவனத்திலுள்ளவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் தலைமைத்துவம் கரிசனை காட்ட வேண்டும். மனித வளங்களின் பயனை உச்சமாகப் பெறுவதற்கு பயிற்சி அவசியமானதாகும். சில நிறுவனத் தலைவர்கள் தமது நிறுவனத்திலுள்ளவர்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்காமல் மறுக்கும் நிலையும் காணப்படுகிறது. அது துரதிஷ்டவசமானதாகும். யாருக்கு என்ன பயிற்சிகள் தேவை என்பதை அறிந்து அதற்கான சந்தர்ப்பங்களை தலைமைகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.


சமூகத்திலுள்ள இயலுமையுடையவர்களைப் பயிற்றுவித்து சமூகத்திற்குப் பயன்மிக்க மனித வளங்களாக மாற்றியமைப்பதில் சமூகத் தலைமைகளும் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

இயலுமையுடையவர், திறன்படைத்தவர் என்பதற்காக ஒருவரிடம் அதிகமான பொறுப்புக்களை வழங்குவதும் பொருத்தமற்றதாகும். சில நிறுவனங்களில் ஒரே நபரிடம் அதிக பொறுப்புக்களை வழங்கும் நிலையும் காணப்படுகிறது. இவ்வாறு வழங்குவதால் விளைதிறன் குன்றுவதுடன் குறித்த செயற்பாடுகள் உரிய நேரத்திற்கு முடிவடையாமல் தாமதம் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது.

எமது சமூகத்தில் தகுதியான பலர் இருக்க தகுதியற்றவர்கள் சில இடங்களை பிழையான வழிகளால் பிடித்துக் கொள்வதனாலும் அதற்குத் தலைமைத்துவத்திலுள்ள சிலர் துணைபுரிவதனாலும் பொருத்தமான மனித வளங்கள் வீணடிக்கப்படுவதைக் காணலாம். தனிப்பட்ட காரணங்களுக்காக பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பதவிகள் வழங்கப்படாமையால் ஒரு சமூகத்ததிற்கு, நிறுவனத்திற்கு, நாட்டிற்கு பாதகம் ஏற்படுகிறது. இதனை உரிய பொறுப்பிலுள்ளவர்கள் உணர வேண்டும்.

எமது சமூகத்திலும் நிறுவனங்களிலும் உள்ள மனித வளங்களைச் சரியாக இனங்கண்டு பொருத்தமான பொறுப்புக்களை அவர்களுக்கு வழங்கி மனித வளங்களை உச்சமாகப் பயன்படுத்தும்போது எல்லா விடயங்களையும் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாப்பாவின் ஏக்கம்...

அஜாத்தை நம்பி வாப்பா 5 இலட்ச ரூபாவுக்குப் பட்ஜெட் போட்டிருக்கிறார். நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வந்தவர்களில் ஷாமில் ஹாஜியாரைத்தான் வாப்பாவுக்கு ரொம்பவும் பிடித்தது. அவரும் வாப்பாவை சம்பந்தி, சம்பந்தி என்று விட்டபாடில்லாமல் இருக்கிறார்.

ஷாமில் ஹாஜியார் 4 கடைகளுக்குச் சொந்தக்காரர். வசதியான குடும்பம். நிறைய பணமும் நகைகளும் அவரிடம். அதற்கிடையில் அடுத்த மகன் முஆஸையும் ஐந்தாறு இலட்ச ரூபாய்களுக்கு விலை பேசினால் இன்னுமொரு பெரிய கடையொன்றை அமைத்துக் கொள்ள முடியும் என்றும் இன்னொரு கணக்குப் போட்டிருந்தார் வாப்பா.

ஆனால், இதற்கெல்லாம் மகன் அஜாத் ஒத்துவருவான? என்பதுதான் இவரது பிரச்சினை. அஜாத் ஒரு மாதிரிப்பட்டவன். இஸ்லாமிய மார்க்க விஷயத்தில் ஊறியவன். மார்க்கத்தைச் சொல்லிச் சொல்லியே விதண்டாவாதம் செய்வான். அதனால் தம்பி முஆஸையே நானாவிடம் இதமாகப் பேசி அவனை சம்மதிக்க வைக்கனும்னு மலையை விடவும் கனமான பொறுப்பை தம்பி மீது சுமத்தியிருக்கிறார் வாப்பா.

அஜாத் நானாவிடம் தனக்கு நல்ல மதிப்புண்டு. அவனுடைய பேச்சிலும் நடத்தையிலும் தொனிக்கும் கம்பீரமும் தெளிவும் யாருக்கும் அவனிடம் ஒரு மரியாதை உணர்வையே ஏற்படுத்தும். நானாவின் காலடியோசை கேட்டால் கூட வீட்டிலுள்ளவர்கள் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தால் உடனே அதனை நிறுத்திவிட்டு வேறு வேலைகளையே பார்க்கத் துவங்கி விடுவார்கள்.

இதனால்தான் வாப்பா கூட இந்த முஆஸை ஏவிவிட்டு, தான் ஒதுங்கிக் கொண்டிருக்கிறார். வாப்பாவே தயங்கும்போது இளையவனான என்னால் எப்படிப் பேச முடியும்? நான் நானாவை விடவும் அதிகம் சம்பாதிப்பது என்ற ஒன்றையே தகுதியாக எண்ணினாரா வாப்பா?

சஊதிக்குச் சென்று நல்ல இடம் அகப்பட்டால் யாரால்தான் பணம் குவிக்க முடியாது. சம்பாத்தியத்தை வைத்து ஒருவரை மதிப்பிடுவது பொருத்தமாகாது என்பது அவனது அபிப்பிராயம். எப்படியும் வாப்பா சொன்னதற்காக நானாவிடம் பேசியே ஆக வேண்டும் என்றிருந்தான் முஆஸ்.

வாப்பாவுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு அடக்கவொடுக்கமாய், அமைதியாக சொல்வதையெல்லாம் எதிர்ப்பேச்சின்றி கேட்கும் நானா அஜாத்தை பார்க்கையில், இவரிடம் பேசவா வாப்பா இவ்வளவு தயக்கம் காட்டினார் என்று வியப்பாக இருந்தது தம்பி முஆஸீக்கு.

வாப்பா என்ன பேசினாரோ தெரியவில்லை. கடைசியாக முஆஸீக்கு கேட்டது இதுதான்; "நான் விபரமா எல்லாம் சொல்லிட்டேன். உன் விருப்பம் ஒன்னுதான் பாக்கி, அஜாத். உன்னிடம் கேட்டுட்டு கல்யாண காட்ட அடிச்சிடலாம்னு மச்சான் பௌஸியிடம் சொல்லிட்டன்."

"உங்க விருப்பம் இதுவானால் சரிதான் வாப்பா. ஆனா ஒரு விஷயம்... உங்களுக்கு தெரியாததா? இந்த சீதனப் பேச்சை மட்டும் விட்டிடுங்க. எவருடைய பணமும் நமக்கு தேவையில்லே வாப்பா."

மகனின் குரல் நறுக்குத் தெறித்தாற்போல் வந்து விழுந்தது.

மகனின் கதையைக் கேட்ட வாப்பா முனாஸ், கொஞ்ச நேரம் அசைவற்றுப் போயிருந்தார்.

"என்ன மகன் சொன்னீங்க, சீதனத்தை விட்டுடவா? இப்போ இதுதானப்பா நாகரிகமும் நடைமுறையுமாச்சே. நீ சீதனம் தேவையில்லேன்னா நாலு பேர் உன் மீது சந்தேகப்படுவாங்களே..."

"நமக்கு நாம உண்மையா இருக்கிறப்போ யாரோட பேச்சப் பத்தியும் கவலப்படத் தேவல வாப்பா."

"நீ பேசிறது ஒன்னும் நமக்கு ஏதுவா இல்லே அஜாத். நீ எதுவும் பேச மாட்டாய், எங்க சொல்லைக் கேப்பாய் என்று நம்பித்தான் ஷாமில் ஹாஜியாருக்கு முடிவு குடுத்தோம்."

"..."

"ஹாஜியாரிடமிருந்து பணம் வாங்கி தங்கச்சிக்கு வீடும் கட்டி கலியாணத்தையும் முடிக்கலாம்னு இருக்கும்போது நீ இந்த மாதிரி பேசினா?"

"சரி வாப்பா, ஷாமில் ஹாஜியார் கிட்ட பணம் ஏதும் வாங்காம நான் கொண்டு வந்த பணத்தில் தங்கச்சியின் கலியாணத்தை முடிச்ச பொறவு, நான் கலியாணம் பண்ணிக்கிறேன். நீங்க ஹாஜியார் கிட்ட சொல்லி வெச்சிடுங்க."

"இது எப்படிடா முடியும். நான் இந்த மாசத்துக்குள்ளே உனக்கு கலியாணம் நடத்திறதிற்கு வாக்குக் குடுத்திட்டேன். அவரும் 5 லெட்சம் தர்றதா உறுதி சொல்லிட்டார். உன் ஒருத்தனுக்காக நாங்க ரெண்டு பேரும் வாக்குத் தவறி நடக்கனுமா"

அஜாத்தின் முகத்தில் கோபம் ஏறியது.

"ஓஹோ... ரெண்டு பேரும் சேர்ந்து ஏதோ ஒரு விற்பனைப் பொருளா என்ன வெச்சி பேரம் பேசிக்கிட்டீங்களாக்கும்? ஏன் வாப்பா, நம்ம குடும்பத்திலே எட்டு வருஷத்துக்கு முன்னாலே ஒங்க மூத்த மகள் இனாயாவுக்கு கலியாணம் பேசினப்போ மாப்பிள்ள ஆக்கிள் வாய் கூசாம கேட்டு கை கூசாம வாங்குறாங்கன்னு காறித் துப்பினீங்களே! இப்போ அதே மாதிரி ஏன் வாப்பா, இவங்களும் நம்ம குடும்பத்துக்குக் காறித் துப்பமாட்டாங்களா?"

"உனக்கு அளவுக்கதிகமாக மதிப்புத் தந்திட்டேன். அதனால் நீ வாப்பாண்னு ஒரு மரியாதை இல்லாம எதிர்த்துப் பேசுற. இனி உன்னை என்னடா கேக்கிறது. நான் உன்னோட அப்பன். என் சொல்லத்தான் நீ கேட்டு நடக்கனும் புரிஞ்சிக்கோ."

"..."

"வெளிநாடு சென்று, நீ கைநிறைய ஒழைச்சாப்போல நான் ஒன்ட பேச்சைக் கேக்கனும்னு நீ நெனக்கிறாய். அது மட்டும் நடக்காது"

"..."

"நான் கடைசியாய்ச் சொல்றேன். நான் நாலு பேருக்கு முன்னாலே தலை நிமிர்ந்து நடக்கிறது என்னவோ உன்னாலேதான் இருக்கு, அப்புறம் உன் இஷ்டம்"

முனாஸ் உணர்ச்சி பொங்கக் கொதித்தார்.

வாக்குறுதி என்று வாப்பா அலட்டிக் கொண்டதை நினைத்தால் அவனுக்கு சிரிப்புத்தான் வருகிறது.

வாப்பா முனாஸ் அங்கிருந்து அகன்றதும் அஜாத்துடன் அவன் தம்பி முஆஸீம் உம்மா ஸக்கியாவுமிருந்தார்கள்.

உறுதியான, தெளிவான முகத்துடன் ஒரு முடிவுக்கு வந்தான் அஜாத்.

"உங்க நிலை எனக்கு புரியுதும்மா. ஆனா ஒரேயொரு நிபந்தனை... சீதனம் வாங்கிறவன் உண்மையான ஆம்புளையே இல்லேன்னு சொல்லிட்டு நான் எப்புடிம்மா அதை மீற முடியும்? அதனாலே என்ட சொல்லுக்கு நீங்களெல்லாம் உடன்பட்டாத்தான் இந்தக் கலியாணத்திற்குச் சம்மதிப்பேன்"

"என்ன மகன் அப்படி...?"

"கலியாணம் முடிஞ்ச அடுத்த நாளே நான் வெளிநாடு போயிடுவேன். அங்கயே இருந்து நல்லா சம்பாதிச்சி வாப்பா வாங்கப்போகும் 5 லெட்சம் ரூபாவையும் திருப்பிக் குடுத்திட்டு அதுக்குப் பொறகுதான் ஊர்ப் பக்கமே வருவேன். அது எத்தனை வருஷங்களானாலும் ஆகட்டும். அது வரைக்கும் நான் அங்கேதான், உங்க மருமகள் இங்கேதான்"

"..."

"இதுதாம்மா என் முடிவு... ஷாமில் ஹாஜியார்ர வீட்டிலே இதையெல்லாம் வெபரமாகச் சொல்லுங்கோ. அவங்க ஒத்துக்கிட்டா, நாளைக்கே கலியாணம் எண்டாலும் நான் தயார்ம்மா"

மகனின் அதிர்ச்சி வெடிகுண்டுக்குப் பின்னர் வீட்டில் யாரும் கல்யாணப் பேச்சையே பேசவில்லை. அஜாத் தனது காரியம் வெற்றியடைந்ததால் மகிழ்ச்சியடைந்தவனாய் வெளிநாட்டுக்குக் கிளம்பி விட்டான்.

வாப்பா வீசிய சீதன வலைக்குள் நானா அஜாத் அகப்படாததால் ஒரு வேளை தன்னை அந்த வலைக்குள் சிக்க வைத்தாலும் வைத்து விடுவார், வாப்பா. நானும் சஊதியில் அதிகமதிகம் உழைத்தவனானதால் விலையும் அதிகமாகக் கிடைக்கலாம் வாப்பாவுக்கு என்ற நினைப்பு தம்பி முஆஸீக்கு.

"வாப்பா, நானா வெளிநாடு போனதுபோல் நானும் போகிறேன்" என்றான் முஆஸீம்.

வாப்பா திகைத்துப் போனார்.

**எம்.எம். அலி அக்பர்- கிண்ணியா**

# இஸ்லாமிய...

(05 ஆம் பக்கத் தொடர்)

கஸினோ, சூதாட்டங்கள் கூட இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை அமைச்சரின் கண்களுக்கு குற்றமாகத் தெரிவதில்லை. ஏனென்றால் அவர் அணிந்திருப்பது இனவாதக் கண்ணாடி என்பதால் சிறுபான்மை மக்களின் நடவடிக்கைகள் தான் குற்றமாகத் தெரியும்.

அமைச்சர் சம்பிக்க மதக் கலாசாரக் காரணிகளை மேற்கோள் காட்டி இலங்கையில் இஸ்லாமிய வங்கி விரிவாக்கல் செயன்முறையை எதிர்க்கிறார். அவர் மூடப்பட்ட பொருளாதார முறைமையொன்று காணப்பட வேண்டும் என விரும்புகிறார். அவர் உருவாக்க விளைகின்ற நாட்டிற்கு, மற்றுமோர் ஆசிய நாடான வட கொரியாவை உதாரணமாகச் சொல்லலாம். இலங்கையின் பெயரளவுத் தேசியவாதிகளுக்கு மிகவும் பொருத்தமான ஒரு நாடு. அங்கு பல்வகைப் பட்ட ஆடைக் கலாசாரங்கள் இல்லை. அந்நாட்டில் ஒருவகை ஒற்றுமை நிலவுகிறது. நாட்டின் தலைவர் முடிவெட்டும் ஸ்டைலில் அந்நாட்டு மக்களும் முடிவெட்டுகிறார்கள். அங்கு ஒரு வீடு தீப்பற்றினால் தன்னுடைய குழந்தையை வெளியில் கொண்டு வருவதற்கு முன்னதாக வீட்டில் தொங்கவிடப்பட்டுள்ள நாட்டுத் தலைவரின் புகைப்படத்தை பத்திரமாக மீட்டெடுப்பார்கள். இவ்வாறான நடைமுறைகளைக் கொண்ட ஒரு நாட்டைத்தான் உருவாக்குவதற்கு அமைச்சர் சம்பிக்க கனவு காண்கிறார் போலும்.

வட கொரியா போன்ற மூடிய பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டை போலல்லாமல் பலதரப்பட்ட இனத்தவர்களைக் கொண்ட, அரசியல் சுதந்திரமுள்ள, திறந்த தொரு சமூகப் பொருளாதார முறைமையுள்ள எல்லா ஆசிய நாடுகளிலும் இஸ்லாமிய வங்கிச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. ஜப்பான், சீனா, தென் கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இஸ்லாமிய வங்கிச் சேவை இடம்பெற்று வருகின்ற முறையை இணையதளங்களில் அவதானிக்க முடிகிறது.

ஆனால் அந்நாடுகள் ஒன்றும் முஸ்லிம் நாடுகள் அல்ல. அந்நாடுகள் சிலவற்றில் இலங்கை முஸ்லிம் சனத்தொகையைக் காட்டிலும் குறைவான முஸ்லிம் சனத்தொகையே காணப்படுகின்றது. அவ்வாறே அந்நாடுகளில் அவ்வங்கிச் செயன்முறையை எதிர்க்கின்றவர்களும் உள்ளனர். ஆனாலும், அவ்வனைத்திற்கு மத்தியிலும் அந்நாடுகள் இஸ்லாமிய வங்கிச் சேவையை நடத்தி வருகின்றன. சிங்கப்பூரில் ஸொன்ஹ ஹட் வீதியிலுள்ள உணவகங்களில் பால் குழம்போடு பிட்டு சாப்பிடலாம். பேய்ஜிங்கில் வெங்புஜியான் வீதியிலுள்ள இந்திய உணவகங்களில் மசாலாவுடன் பட்டான்நாண் விலைக்கு வாங்கலாம்; விரும்பினால் சாப்பிடலாம். இல்லாவிட்டால் தமக்குப் பிடித்தமானதை உண்ணலாம். அதுபோன்றுதான் இஸ்லாமிய வங்கி முறையும். சிறுபான்மையினர் வாழும் நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இவ்வங்கி முறை பெரும்பான்மையினர் மீதான ஒரு திணிப்பொன்றல்ல. அது முஸ்லிம்களது ஷரீஆ சட்டத்தின் பிரகாரம் அமைத்துக் கொள்ளப்பட்டதொரு செயன்முறை. அவ்வங்கிகளில் வட்டிக் கொடுக்கல் - வாங்கல்கள் நிலவுவதில்லை. எனவே, இலங்கையிலுள்ள வங்கிகள் ஹலாலாகியுள்ளதாக எவ்வித அடிப்படையுமின்றி கூறப்படுகின்ற விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

நன்றி: விமசும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பாற்று



சோதனைகள்
மொழியப்படுகின்றன
எல்லைகளின்றி

பூலோகத்தின் மீதும்...
பூலோக மாந்தர் மீதும்!

சோதனைச் எமைகளை
எமக்க முடியாமல்
மாந்தர் குலம்
மூழ்குகிறது
இன்னுமின்னும்...
பாவங்களில்!

வஞ்சகங்களோடும்
வட்டிகளோடும்
அல்லலுறும் வாழ்வுகள்...
நாளுக்கு நாள்
பெருக்கத்தில்!

நெஞ்சத்தில்
நெரிச்சல்
பெருமூச்சொன்றையாவது
பிரசவிக்க முடியாத

வேதனையில்!

இயற்கையினால் அழிவு
மாந்தர்... குல...
இன்னல்களில் அழிவு!
பாவம்...
பெருக்கங்களினால் அழிவு!
என்ன பாவம் செய்தோம்
இதையெல்லாம் காண?

விரைந்து
காப்பாற்று இறைவா
நம் சமூகத்தை...
இல்லையேல்
பைத்தியம்
பிடித்துவிடாமல் காப்பாற்று
நம் உணர்வுகளை!

ஏ.சி. ஜரீனா முஸ்தபா
வெளிவிட்ட

## நீண்ட தூர பயணம்



எல்லைகள் கண்காணா கடற்பயணம்
நிலம் தொடா வான் பயணம்
நிலம் ஊர்ந்து செல்லும் தரைப்பயணம்
எல்லாம் இலக்குகள் இல்லையேல்...
மறைந்து போகும் மாயமாய்
யாரும் அறியா இடத்திற்கு...

மனித வாழ்வின் யதார்த்தம்
ஒப்பாகுமே இதற்கு
வாழ்க்கை என்ற பயணமே
இலக்குகளை மறந்து போனால்
மக்கி மங்கிவிடுமே மண்ணோடு
மாமனிதர்கள் பலர் இருந்தனரே மண்ணில்
வழி தவறா நெடுதூர பயணித்த
முன்மாதிரிகள் இலக்குகளாலே...

இலக்கில்லா பயணத்தில் இனிமையுமில்லை
சவால்களும் கூட
தெருநாய்கள் போல் திக்குத்தடுமாறி
கல்லால் அடிவாங்கி
மீண்டும் அதே இடம் காண்போம்

ஒரு சாணும் முன்னேறோம்
இலக்கில்லா பயணத்தால்...

மானுடா!
எல்லா இறைபோதனைகளும்
இதையல்லவா பறைசாற்றுகிறது
சவால்களை தாண்டி
நீண்ட தூரம் பயணி
இலக்குகளை நோக்கி
ஜயம் கிட்டும்...

ஆதில் ஜுனைட் (இர்பானி)
முல்லைத்தீவு

## ஒரு கைக்குட்டையும் ஹஜ்ஜுப் பெருநாளும்




"அஸ்ஸலாமு அலைக்கும்"
சலாமுரைத்தவராக
அவர்
கைக்குட்டையொன்றை
கரத்தினுட் திணித்தார்

சிரித்து முகம் பார்த்து
செய்த வெகுமதி
விரித்து முகம் விகர்ஷிக்க
வேளை பொருந்தவில்லை

நானதனை
விரித்துப் பார்க்காமலே
சேப்பிற்குள்
வைத்துக் கொண்டேன்

கைக்குட்டைக்குள்ளே
'கனதி' இருக்கக் கூடும்
ஒருபோதும்
பொய்க் குட்டையாய் அது
போகாதென்கின்ற நம்பிக்கை
எனக்குள்ளே

ஏனெனில்
முந்தைய பெருநாட்களின் போது

முஹப்பத்தை
கைக்குட்டைக் கூடாக
காட்டியவர் அல்லவா?
நட்புக்குயிர்
ஊட்டியவர் அல்லவா?

வீடு வந்து சேரும் வரை
விரித்துப் பார்க்கவே இல்லை
ஒரு நல்ல கவிதைக்குள்
கனதி இருப்பது போல
அக் கைக்குட்டைக்குள்ளேயும்
க(ம)னம் இருக்குமெனும்
ஆவலுடன் அதனை
விரித்துப் பார்த்தேன்
வீட்டுக்கு வந்த பின்பு

இப்போதெல்லாஞ்
ஸகாத் ஸதகா
தருங் கை கட்டை!
அந்தோ! அது
வெறுங் கைக்குட்டை!

கிண்ணியா
ஏ. எம்.எம். அலி

## மீண்டுமொரு கிலாபத்



துணிவு தேவை...
துணிந்த பின் தனித்துவம் தேவை
தன்னம்பிக்கையை வேராய் விதைத்து
அமாவாசை ஆகிப்போன அகிலத்திற்கு


அல்லாஹ்வின் அருள் கொண்டு
முஹம்மதின் வழி நின்று
அலியின் வீரம் கொண்டு
உமரின் ஆட்சி நடத்து

உலகப் பொதுமறையை யாப்பாக்கி
உலகின் மத்தியை தலைநகராக்கி
இருபத்திநாலில் இடிந்து போன
கிலாபத்தினை கிப்லாவை நோக்கி உயர்த்திடு

புனிதப் பயணத்திற்காய்- காத்திருக்கிறேன்...
பெருநாளாய் அதை வரவேற்கிறேன்
அந்நாளில் கேட்கும் தக்பீருக்காய் -
தவமிருக்கிறேன்
அன்னை சுமையாவுடன் சுவனத்தில்
வீட்டிருக்க ஆசைப்படுகிறேன்!!!

பீர் முஹம்மட் றுபிதா பானு
சுங்காவில

# மானுட தேசம் 8



## சமூக சிந்தனைமிக்க தொழிற்சங்கவாதி கலாபூஷணம் அ.லெ.மு. ராஸிக்

தேசிய மட்டத்தில் மதிக்கத்தக்க அளப்பரிய சேவையாற்றிவிட்டு, அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்து விடும் சிலரை ஆங்காங்கே நாம் அவதானிக்கத்தான் செய்கிறோம். அத்தகையவர்களை புதிய சமுதாயத்தவர்களும் அறிந்து கொள்ள வகை செய்வதன் மூலம், அவர்களின் ஆதர்ஷங்களை உள்வாங்கி போஷாக்கடையக் கூடிய வாய்ப்பை உருவாக்கம் செய்யலாம். இந்த வகையில் குருணாகல் மாவட்டம், பொல்கஹவலையைச் சேர்ந்த கலாபூஷணம் அ.லெ.மு. ராஸிக் அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

1942 இல் பிறந்த இவர், பதினேழு வயதிலேயே ஆசிரியர் நியமனத்தை பெற்றார். அதிபர்சேவைக்கானதராதரம் பெற்றிருந்த போதும் சொந்த ஊரான அல் இர்பான் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியதைத் தவிர, அத்தகைய பதவிகளிலிருந்து சற்று விலகியே இருந்துள்ளார். அதை விட முக்கியமான பணிகளில் அவருக்கிருந்த இயல்பான ஈடுபாடே அதற்குக் காரணமாக இருக்கலாம்.

1966 இல் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர்சங்கத்தின் பொதுச்செயலாளராக ராஸிக் தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல் பதினாறு வருடங்களாக ஏகோபித்த ஆதரவோடு அப்பதவியில் நிலைத்தார். இவர் அப்பதவியில் ஈடுபட்ட காலத்தில் இதர ஆசிரியர் சங்கங்களோடு கைகோர்த்துக் கொண்டு ஆசிரியர்களின் தேசியப் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் முன்னணியில் செயற்பட்டார். சத்தியத்தை வென்றெடுக்கும் போர்க்குணமும் சந்தர்ப்ப, தேவைக்கேற்ற பேச்சாற்றலும் இவரது வெற்றியின் இரகசியங்கள் எனலாம்.

அகில இலங்கை முஸ்லிம் பெற்றார் ஆசிரியர் சங்கம், குருநாகல் மாவட்ட கல்வி, கலாசார அபிவிருத்தி சபை ஆகியவற்றின் ஸ்தாபகராகவும் இணைச் செயலாளராகவும் இவர் செயற்பட்டவர். மேலும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளன உப தலைவராகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கலை, இலக்கியப் பேரவையின் தலைவராகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் வரலாற்று ஆய்வு வட்டத்தின் உப தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் [illegible] முஸ்லிம் உறுப்பினர் என்ற சிறப்பும் இவரையே சேரும்.

1982 ஆம் ஆண்டு பக்தாதில் நடைபெற்ற அரபு உலக இஸ்லாமிய ஆசிரியர் சங்க மாநாட்டில் இலங்கையின் ஏக பிரதிநிதியாகக் கலந்து கொண்டு நமது நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர் இவர்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக மாற்று இன, மத சகோதரர்களோடு ஏற்பட்ட தொடர்புகளால் அவர் எந்த நன்மையையும் அடைய நாடவில்லை. ஆனால் சமூக நிலையிலும் தேசிய மட்டத்திலும் சில அடைவுகளைக் காண அது உதவியிருக்கிறது.

32 வருடங்கள் கற்றல்-கற்பித்தல், பாடசாலை நிர்வாகம், தொழிற்சங்கம் என்று சேவையாற்றிவிட்டு தனது 49 வயதில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுக் கொண்டார் ராஸிக் அவர்கள்.

இவ்வளவு பரந்த திறமைசாலி இள வயதிலேயே ஓய்வு பெற்றுவிட்டாரே என்று கவலைப்பட்டவர்கள் ஏராளம். ஆனால் அதை விடப் பெறுமதியான சமுதாயக் கடமைகளில் ஈடுபடுவதே அவரது நோக்கமாக இருந்தது.

கொடைவள்ளல் நளீம் ஹாஜியாரின் கல்விப் பணிகள் காரணமாக, சமூகம் அடைந்த பேறுகள் ஏராளம். இலங்கை மறுமலர்ச்சி இயக்கம், அதன் பிராந்திய உயர் தர வகுப்புகள், கண்டி உயர் தர விஞ்ஞானக் கற்கை, இக்ராஃ தொழி நுட்பக் கல்லூரி உருவாக்கம் இவற்றிலெல்லாம் [illegible] பணியும் இடம்பெற்றன. மறுமலர்ச்சி இயக்க செய்தி மடலின் பொறுப்பாசிரியராகவும் இவர் கடமையாற்றினார்.

இத்தனைக்கும் மத்தியில் இவர் ஓர் எழுத்தாளன். ஐம்பதுகளில் இலங்கை வானொலியில் நாடகம் எழுதிய இரண்டொருவரில் பொல்கஹவலையைச் சேர்ந்த தாஹா அவர்களும் ஒருவர். அவரோடு சென்று குரல் கொடுத்து, நடித்து வானொலியை தன்வசமாக்கிக் கொண்டார். மேலும் பொல்கஹவலை வரலாற்றையும் இவர் எழுதி நூல் வடிவமாக்கியுள்ளார்.

எச்.எம்.பி. முஹிதீன், அண்ணால் சாலிஹ், ஏ. இக்பால், எம்.ஸி.எம். சுபைர், மருதூர்க்கனி போன்ற குறிப்பிடத்தக்க படைப்பாளிகளோடு இவர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

"தெங்குச்சோலையான்" என்றபுனைப் பெயரில் நிறையக் கவிதைகளை இவர் எழுதி வந்தார். இலங்கை கவிஞர் சம்மேளனம் தனது வெள்ளி விழாவின் போது 'கவிச்சுடர்' பட்டமளித்து இவரை கௌரவித்தது. இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூஷணம்' விருதளித்து மகிமை சேர்த்தது.

ராஸிக் அவர்கள் தற்போது உடல் நிலை காரணமாக சற்றே ஒதுங்கியிருந்தாலும் சகல தரப்பினரோடும் தொடர்பாடல் கொண்டவராகவே இருக்கிறார். முடிந்தவரை சமூக இருப்பின் இயங்கு விசையாகத் திகழ்ந்த அ.லெ.மு. ராஸிக் அவர்களின் செயற் தொகுப்பையும் வகிபாகத்தையும் சரியாக மதிப்பிட்டு, அடுத்தகட்ட சமுதாய வளர்ச்சிக்கு அவற்றைப் பிரயோகிப்பது இளைய பரம்பரையின் கடப்பாடாகும்.

- திக்குவல்லை கமால் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமயங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அண்மையில் தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கிறிஸ்தவ பாதிரிமார், ஹிந்து குருக்கள், மௌலவிமார், பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் பாய் மதப் பிரிவைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள் உட்பட 15 மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான குர்ஆன் விளக்கவுரைகள் வழங்கி வைக்கப்பட்டன. இவற்றை இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிலையத்தின் முன்னாள் முகாமையாளர் செய்யது முஹம்மது சாஹிப் வழங்கி வைத்தார். சமயங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மக்களுக்கிடையில் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

படமும் தகவலும்: உஸ்மான் அகீல்



காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள பாலமுனை அலிகார் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினி ஆய்வுகூடத்தை தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்ப பிரதியமைச்சர் பிரபா கணேசன் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர் எம்.ஏ. றசாக் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். அகமட் லெவ்வை, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். வாசுதேவன் உட்பட அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

படமும் தகவலும்: ஜுனைத் எம். பஹாத்

## பாலியல் துஷ்பிரயோகத்தை தடுக்க விழிப்புணர்வு அவசியம்

**பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்**


பாலியல் துஷ்பிரயோகம் என்பது இலங்கையில் மட்டுமல்லாது உலகம் முழுவதிலுமுள்ள பிரச்சினையாக இருக்கின்றது. இதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த முடியாது என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சிறுவர், மகளிர் விவகாரம் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுகள் மீதான வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதியமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கிளிநொச்சியில் 40 ஆயிரம் விதவைகள் இருப்பதாக அரியேந்திரன் எம்.பி. தெரிவித்தார். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் 38,780 குடும்பங்களே இருக்கின்றன. அவற்றில் 5,875 மட்டுமே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக இருக்கின்றன. அவற்றிலும் 20 சதவீதமானவையே நேரடியாக யுத்தத்தினால் விதவையான பெண்களினால் தலைமை வகிக்கப்படும் குடும்பங்களாக இருக்கின்றன. ஏனைய பெண்கள் இயற்கை மற்றும் விவாகரத்து போன்றவற்றுக்கு முகம் கொடுத்தவர்கள்.

இவ்வாறான நிலையில் எப்படி கிளிநொச்சியில் 40 ஆயிரம் விதவைகள் இருப்பதாக கூற முடியும்? சரியான புள்ளி விபரங்களின்றி இவ்வாறான தகவல்களை வெளியிடும்போது அதன் மூலம் சர்வதேசத்துக்கு தவறான தகவல்களே செல்லும். ஆகவே புள்ளி விபரம் அறிந்து பேச வேண்டும்.

யுத்தத்தின் பின்னர் சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதேநேரம் பாலியல் துஷ்பிரயோகம் என்பது குடும்பத்துக்குள்ளேயே இடம்பெறும் பிரச்சினையாகவும் இருக்கிறது. ஆகவே விழிப்புணர்வு நடவடிக்கைகளே இதற்கு அவசியம் என்றார்.




2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்

உங்களுக்குத் தேவையான கலண்டர்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...

IPC Press

- அரபு எழுத்தணிக் கலை
- இஸ்லாமிய கலண்டர்

உங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே அச்சிட்டுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 2649151 0777 412146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.